கைத்தறி

ஆசிரியர்: எஸ். கே. சாமி

மாதப் பத்திரிகை — விலை 2 அணா

தறி 3 | கோவை, 15—9—1952. | பாவு 11

... MAY 1955
MADRAS

சந்தா விகிதம்.

ஆண்டு சந்தா ரூ. 3.
தனிப் பிரதி அணா நான்கு.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் நான்கு அணுவுக்கு ஸ்டாம்பு அனுப்பவும்.

ஏஜண்டு இல்லாத ஊர்களுக்கு முன் பணம் கட்டும் ஏஜண்டுகளே தேவை.

“கைத்தறி” காரியாலயம்,
முத்தண்ணன் குளம் வீதி,
கோவை.

ராஜாஜியின் கையைப் பலப்படுத்துவோம்!

சென்னை ராஜ்ய கைத்தறித் தொழில் பாதுகாப்பு மகாநாடு 1949ம் ஆண்டு டிசம்பரில் சென்னையில் கூடியபோது மில் நெசவுப் போட்டியிலிருந்து கைத்தறி நெசவுத் தொழிலைப் பாதுகாக்க ரகப் பிரிவினை செய்துதர வேண்டுமென ஒரு தீர்மானத்தின் மூலம் சர்க்காரை வற்புறுத்தியது. 36 அங்குல அகலத்திற்கு மேல் 50 அங்குல அகலம் வரையுள்ள எந்த ரகங்களையும் மில்கள் உற்பத்தி செய்பக்கூடாதெனவும் அத்தீர்மானம் அறுதியிட்டு வழிகாட்டியது.

தீர்மானம்நிறைவேற்றப்பட்டபோது அம்மகாநாட்டில் கலந்துகொண்ட அன்றைய மந்திரிகள் குமாரசாமிராஜாவும், பெருமாள்சாமி ரெட்டியாரும் கொள்கையளவில் அக்கோரிக்கையை-தொழில் பாதுகாப்பு யோசனையை ஏற்றுக்கொண்டனர். ஆனால் அக்கோரிக்கை நடைமுறையில் நிறைவேற்றப்பட என்ன நடவடிக்கையை அவர்கள் மேற்கொண்டனர் என்பதுதான் புரியவில்லை.

இன்று ராஜாஜி அவர்கள் நம் ராஜ்ய ஆட்சிப் பொறுப்பிற்குத் தலைமைவகிக்க வந்ததும் கடந்தகால அக்கோரிக்கை உயிர் பெற்று-உருப்பெற்று பகிரங்கமான தர்க்கத்திற்கு வந்து அதைப்பற்றிய செய்திகளும் பிரமாதமாக அடிபட ஆரம்பித்துள்ளன. இந்த தர்க்கம் ரரஜாஜி காலத்திலேயே கைத்தறி தொழிலுக்கு விமோசனம் ஏற்பட்டுவிடும் என்ற எண்ணத்தைப் பொதுமக்கள் மனதில் உண்டாக்கி விடவும் செய்துள்ளது.

கைத்தறித் தொழிலுக்கு நிரந்தரமான சமாதானமும், ஸ்திரமான பாதுகாப்பும்தேவை; எனவே அதற்குவேஷ்டி, சேலை போன்ற ரகங்களை ஒதுக்கித்தர வேண்டும் என்கின்ற கைத்தறியாளரின் குரலை யெதிரொலிப்பதே ராஜாஜியின் வாதமாகும். இந்த யோசனை அபாயகரமானதென்றும், மக்களை நிர்வாணமாக்கிவிடவே உதவுமென்றும் பீதி கொண்டு தப்பும் தவறுமான புள்ளி விவரங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு மத்திய சர்க்காரின் தொழிலியல் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் எதிர்வாதம் செய்கிறார். ஸ்ரீமான் டி. டி. கேயின் புள்ளிவிவரமானது எப்படி உண்மைக்குப் புறம்பானதென்பதை தெளிவான காரணங்களோடும், ஆதாரத்துடனும் ராஜ்ய நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் சோமப்பாவும், முதலமைச்சர் ராஜாஜியும் எடுத்து இடித்துக் காட்டியுள்ளனர்.

கைத்தறித் தொழிலுக்கு சேலை, வேஷ்டி ரகங்களை ஒதுக்கித்தர வேண்டுமென்ற பிரச்னையானது இன்று அகில இந்தியப் பிரச்னையாக மாறி விட்டிருக்கிறது. ராஜாஜியின் வாதத்தில் உள்ள ஜீவாதாரமான நியாயங்களை வட இந்தியாவில் ஆர்ச்சார்ய வினோபாஜி அவர்களும், ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களும் ஆதரித்துள்ளார்கள். அத்துடன் மேற்கு வங்க சர்க்காரும் இதே கோரிக்கையைத் தங்கள் ராஜ்ய நெசவாளர்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு மத்ய சர்க்காரை வற்புறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் வெறும் புள்ளி விவர ஜாலங்களில் பொழுதைச் செலவிட வேண்டிய அவசியமிருப்பதாக நாம் எண்ணவில்லை. ராஜாஜி கூறுவதுபோல எத்தனை

கெஜம் என்பதல்ல இங்கு முக்யமானது; எத்தனை குடும்பங்களுக்கு இத் திட்டத்தால் சோறு போட முடியுமென்பதே பிரச்னையாகும். புள்ளி விவரங்கள் மீது கூட ஒரு சரியான தெளிவை ஸ்ரீமான் டி. டி. கேவுக்கு ராஜாஜியின் விளக்கமும், சோமப்பாவின் பதிலும் உண்டாக்கியிருக்கும் என்றே நாம் கருதுகிறோம்.

பொறுப்பான பதவியிலிருக்கும் ஸ்ரீ டி. டி. கே. போன்றவர்கள் ஒரு விஷயத்தைச் சரியாகப்புரிந்து கொள்வதற்கு முன்னதாக இப்படி அர்த்தமற்றுப் பேசுவது அபத்தமானதென்றே அனைவரும் கருதுகின்றனர்-கண்டிக்கின்றனர். என்றைக்குமே குடிசைத் தொழில்கள் மீது நம்பிக்கையில்லாத மனிதர், வேறு எப்படிப் பேசுவார் என்றுதான் நாம் அப்படிப் பட்டவர்களைப் பார்த்துக் கேட்க ஆசைப்படுகிறோம்.

பேசியது ஸ்ரீ டி.டி.கே. அல்லஎன்றும், அவரது உள்ளத்தில் இப்படிப்பட்ட எண்ணத்தை உண்டாக்கியது டெக்ஸ் டைல் இலாகாவும், வட இந்தியபஞ்சாலை முதலாளித்வமும்தான் என்றும் கூறப்படுகிறது. இதிலும் உண்மை இல்லாமல் இல்லை. இருப்பினும் சொல்பவர்கள் என்னதான் சொன்னாலும் கேட்பவர்களுக்கு ராஜாஜி கூறுவதுபோல "சிந்திக்கும்திறன்" இருந்திருக்க வேண்டுமல்லவா?

இன்று இப்பிரச்னையை அறிக்கைகள் விடுவதன் மூலமோ, அல்லது விளக்கஉரைகள் கூறுவதன் மூலமோ தீர்த்துவிட முடியாது! கிரியாம்சையில் தேசத்தில்உள்ள 30 லட்சம் நெசவாளர் குடும்பங்களுக்கும் இத்துறையில் விமோசனம் தேடித் தந்தாக வேண்டும்

உத்திரவாதமான
கெட்டிச்சாயம்
தோய்ப்பவர்கள்

மதராஸ்
ராஜ்யகைத்தறிநெசவாளர்
கூட்டுறவு சங்கத்திடம்
அங்கீகாரம்பெற்றவர்கள்

ஸ்ரீ ஜெயலட்சுமி
கலர் ஒர்க்ஸ்
சுப்ரமணியசெட்டிவீதி, திருப்பூர்

D.A.S.S.

அவ்வகையில் மத்ய சர்க்காரே அதிகார பூர்வமாக தலையிட்டு சென்னைராஜ்யத்தின் கோரிக்கையை நிறைவேற்றிவைக்க முயன்றாக வேண்டும்.

அதே காலத்தில் இப்பிரச்னையை ஏதோ ராஜாஜி, டி. டி. கே. விவகாரமாக இந்த ராஜ்ய கைத்தறியாளர்கள் இதைக் கருதாமல் தங்களது குரலை பலமாக ஒலித்தாக வேண்டியிருக்கிறது. ராஜாஜி திறமையானமனிதர்; மத்ய சர்க்கார் வட்டாரத்தில் பிரமாதமான செல்வாக்குப் பெற்றவர்; எனவே அவரே இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து விடுவார்; ஆகையால் நாம் ஏன் இதில் தலையிட வேண்டும் என்று யாராவது எண்ணினால் அது முற்றிலும் தவரானதாகவே முடியுமென்று நாம் எச்சரிக்கிறோம்.

இதன் மூலம் ராஜாஜியின் திறமையையோ, ஆற்றலையோ நாம் குறைத்து மதிப்பிட்டதாகாது. அதற்குப்பதில் அவரின் திறமையையும், அனுபவத்தையும் புத்திசாலித்தனமாக நாம் எந்த அளவிற்கு உபயோகப் படுத்திக் கொள்ளப் போகிறோமென்பதே இங்கு முதலிடம் பெறுகிறது.

எனவே இந்த ராஜ்யத்திலுள்ள சகல நெசவாளர்கள், உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள் அனைவருமே தங்களது ஸ்தாபனங்களின் மூலமாக ரகப்பிரிவினை கோரிக்கையை ஆதரித்து, ராஜாஜி

[10-ம் பக்கம் பார்க்க]

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்
சென்னிமலை P. O.

நாங்கள் 20 நெ. முதல் 30 நெ. வரை நூலில் எங்கள் சங்க அங்கத்தினர்களைக்கொண்டு
5, 6, 7, 7½, 8 கெஜங்களில் 44 அங்குல அகலத்தில் பலரக கலர் சேலைகளும், சித்தாடைகளும், வேஷ்டி, துண்டு, காடா பீஸ்
ரகங்களும் தயார் செய்கிறோம்.

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும்
விசேஷ சலுகை உண்டு.

M. P. நாச்சிமுத்து, B. A., B. L. தலைவர்.

சாயத் தோழில் பற்றி கட்டுரையாளர் தனது சோந்த அனுபவத்தைக் கோண்டும், பல மேல் நாட்டு நூல்களை ஆராய்ந்தும், பண்டைக்கால முறையிலிருந்து இன்றுவளர்ச்சி பெற்றுள்ள நிலைவரைக்கும் தோடர்ந்து விளக்கம் கூற முனைந்துள்ளார். இம்முயற்சி வரவேற்கப்படுமேன நம்புகிறோம் —ஆ.ர்.

சாயத் தொழிலின் சரித்திரம்

மனித வாழ்க்கையில் உணவுக்கு அடுத்தது உடை என்பது மறைக்க முடியா உண்மையாகப் போய் விட்டது. அவ்வகையில் உலகிலேயே நம் பாரதநாடு பண்டைத் தொட்டு ஒருசரியான வழியில் வளர்ந்துவந்திருக்கிறது.

உதாரணமாக மேல் நாட்டவர்கள் எல்லாம் நாகரீகம் அடையாக் காலத்தில் நாம் அம் மக்களுக்கு ஆடை அளித்து நாகரீகப் படுத்தியுள்ளோம் என சரித்திர ஆசிரியர்கள் சான்று கூறுகிறார்கள். அதுமட்டுமின்றி, சங்க கால இலச்கியங்களில் கூட நாம் பார்க்கிறோம்; ஆடை ஏற்றுமதி வாணிபம் மரக்கலங்கள் மூலமாக சிங்களம், சாவகம் போன்ற கடல் கடந்தபிரதேசங்களில் நம்மவர்கள் நடத்தினார்கள் என்று.

மேலும் விரித்துப் பார்க்கின் தமிழ் மறை வள்ளுவர் கூட, கைத்தறிமூலம் ஆடை உற்பத்தியில் ஈடுபட்டிருந்தார் என அறிய முடிகிறது. இவ்வாறு உலகில் தலை சிறந்து கைத்தறி ஆடை வாணிபம் சிறப்பாக நடைபெற்று வந்ததற்கு நம் நெய் தொழிலின் சிறப்புமட்டும் காரணம் அன்று. ஏனெனில்; அத்தொழில் பிறந்த காலத்திலேயே அதோடு உடன் பிறந்த மறுசகோதரனான சாயத்தொழிலும் ஒருகாரணமாக இருந்திருக்கிறது என்கின்ற உண்மையை கைத்தறி நெசவுத் தொழிலின் சிறப்பைப்பற்றிக் கூறுகிற எவரும் மறைத்தே வந்திருக்கின்றனர் என்பதுமட்டும் யதார்த்தமாகும்.

ஆனால், இன்று சாயத் தொழிலானது நாட்டு வைத்தியனின் கண்டுபிடிப்புகள் புதை குழியோடு மறைந்து விடுவது போன்று, நம் முன்னோர்கள் கண்டுபிடித்த நம் நாட்டு முறையான சாயம் துவைக்கும் முறையும் மண்ணோடுமண்ணாய் மறைந்து போய், எதற்கும் மேல் நாட்டு முறையையே எதிர்பார்த்து கையாள வேண்டிய நிலைக்கு நாம் வந்திருக்கிறோம்

தவிர, இயந்திரத் தொழில் போட்டியின் முன், குற்றுயிரும் குலையுயிருமாக சீர்குலைந்து நிற்கும் கைத்தறி ஜவுளி உற்பத்தியின் தேய்வால், பெரிய அளவுக்கு அதையே நம்பி நிற்க வேண்டியுள்ள சாயத் தொழிலும் க்ஷீணமடைந்து வந்து கொண்டேயிருக்கிறது இன்று.



ஆர். அம்போஜி ராவ் பான்ஸ்லே.

காந்தி சகாப்தத்தில் மேற்கண்ட குடிசைத் தொழில்கள் இரண்டுமே சாகாமல் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. நாட்டின் பெருந்தலைவர்கள் எல்லாம் மக்கள் முன் நின்று விடுதலைப் போராட்டத்திற்கு அறை கூவிய போதுங் கூட கதர்,கைத்தறி துணிகளையே ஆதரிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அத்தோடு நம் நாட்டு குடிசைத் தொழில் பண்டங்களணியில் முதன்மையாயுள்ள கைத்தறித் துணியின்பால் மக்களுக்கு அபிமானம் ஏற்படவும், அந்நியநாட்டு நேரடிச் சுரண்டலைத் தடுக்கவும் ஆயிரமாயிரம் தொண்டர்களைத் திரட்டி மில் துணி பகிஷ்கார இயக்கத்தை தேசத்தந்தை மகாத்மா அன்று நடத்தினார்.

அந்த இயக்கம், அழிவை நோக்கி இயந்திர பூதகணங்கள் கைத்தறி, சாயத்தொழில்களை இழுத்துப் போகாமல் தடுத்து நிறுத்தியதோடு, மக்களின் தேச விடுதலை ஆதர்சமாகவும், குடிசைத் தொழில்களின் பாதுகாப்பாகவும் அமையப் பெரிதும் உதவியது.

காந்திஜியின் மறைவுக்குப்பின் கவனிப்பாரற்று இருந்த கைத்தறித் தொழிலை ராஜாஜி அவர்கள் நம் ராஜ்யப் பிரதமரான பிற்பாடு ஆதரித்து மக்கள் மத்தியில் பேசவும், சட்டபூர்வமானபாதுகாப்புகளைத் தேடவும் ஆரம்பித்துள்ளார். இதற்காகநாம் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

நாட்டைத் தொழில் மயமாக்கவும், மக்களை செல்வப் பெருக்கிற்கு முழுமூச்சுடன் உழைக்க செய்யவும் ஆன பல தேசிய திட்டங்கள் இன்று வகுக்கப்படுகின்றன. அவ் வகையில்ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று நடைமுறையில் வருவதாக நாட்டு மக்கள் மத்தி

யில் எடுத்துக் கூறப்படுகின்றன. அந்தத் திட்டத்தில் பண்டைக் கால சிறப்புள்ள கைத்தறி நெசவுத்தொழிலை சேர்க்காமல் விடப்பட்டிருக்கின்றது.

இதனுடைய நேரடியான பொருள், சாயத்தொழிலும் அத்தோடு சேர்ந்து கவனிக்கப்படமுடியாத வகையில் விடப்பட்டிருக்கிறது. யதார்த்தமாகவே, நம் நாட்டுப் பொருளாதார சமூக அமைப்பு பெருவாரியாக கிராமீயப் பொருளாதார மாகவும், விவசாய குடிசைத்தொழில் பொருளாதார சமூக அமைப்பாகவும் இருப்பதால் அவைகளில் முக்கியப்பங்கு வகிக்கும் கைத்தறி நெசவுத் தொழிலையும், சாயத் தொழிலையும் விடப்பட்டிருப்பதானது நாசத்தை நோக்கி நாட்டை உழைத்துச் செல்லவே உதவும் என்பதை வருத்தத்துடன் எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது.

நாட்டில் உள்ள சம்பந்தப்பட்ட பல் வேறு ஸ்தாபனங்கள் மேற்கண்ட ஐந்தாண்டுத்திட்டத்தில் கைத்தறி நெசவுத் தொழிலையும் சாயத் தொழிலையும், சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கோரியிருப்பதானது நன்மையை அறிவிக்கும் செய்திகளாக இருக்கின்றன. இதை மத்தியசர்க்காரின் திட்டக் கமிஷன் சிந்தித்து ஏற்றுக் கொள்ள வேண்டுவது கடமையாகும்.

இவ்வாறு ஆதரவு கொடுக்க சர்க்கார் முன்வந்தாலன்றி இத் தொழில்களில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு வாழ்வளிக்க முடியாது என்பது உறுதி. அத்தோடு பொதுமக்களும் ராஜாஜி கூறுவது போல, தங்களின் துணித்தேவை பூராவையும் கைத்தறிகளினால் தயாரித்த ரகங்களையே வாங்குவார்களானால் நிச்சயம் கைத்தறித் தொழிலும், சாயத்தொழிலும் தலைநிமிர்ந்து நிற்க ஏதுவாகும் என்பதை விளக்கத் தேவையேயில்லை.

இன்று ஆதாரக் கல்வியென்ற பெயரில் சொல்லித் தரப்படும் கல்வியானது ஒருமாணவன் தனது பள்ளிவாழ்க்கை முடிந்ததும் சுயேச்சையாக ஒரு தொழில் செய்து வருமானம் சம்பாதிக்கக் கூடிய வகையில் தொழிலைக்கற்றுக் கொள்ள முடியாத நிலையிலிருக்கிறான். அப்படிப்பட்டவர்களும், மற்றவர்களும் தாங்களே சுயேச்சையாகத் தொழில் செய்து வருமானம் சம்பாதிக்கும் தொழில்களை கற்றுக் கொள்ள வசதியாயிருக்கும் பொருட்டே சாயத்தொழிலைப்பற்றிய பாடத்தை "கைத்தறி"யின் மூலமாக கற்பிக்கும் சேவையை நான் இக் கட்டுரையின் மூலம் தொடங்கியுள்ளேன்.

இது போன்ற மக்களை தொழில் துறையில் ஊக்குவிக்கும் ஏற்பாடுகளை ஒவ்வொரு தொழிலிலும் ஈடுபட்டு கற்றுத் தேர்ந்தவர்கள் பொதுமக்களுக்கு பத்திரிகைகள் மூலமாக போதிக்க முன் வரவேண்டுவது இன்று நாடு உள்ள நிலையில் மிகவும் அத்யாவசியமானதாகும்.

இப்பணியை பத்திரிகைகள் மட்டுமின்றி இதர பொது நல ஸ்தாபனங்களும், பள்ளிகளும் மாணவர்களுக்கும், மக்களுக்கும் போதிக்க முன்கையெடுப்பார்களேயானால் நிச்சயம் பெரியதொருமாற்றத்தை ஜனங்கள் அணியில் வெகுவிரைவில் காணமுடியும்.

அத்துறையில் ஏற்கனவேயே பிரஞ்சுடைஸ், சிபா, சேண்டோஸ், கெய்கி, ஐ. சி. ஐ. போன்ற சாய கம்பெனிகள் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவழித்து சாயத்தொழில் முறைகளை ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் மேற்படி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தொழில் ஞானத்தை வளர்த்து உதவிபுரிந்து வருகின்றன. அத்தோடு நில்லாமல் மேற்கண்ட கம்பெனிகள் அவ்வப்போது தொழிலில் உண்டாகும் கஷ்டங்களை நிவர்த்திக்க தங்களது தொழில் நிபுணர்களை நேரடியாக அனுப்பிவைத்து தொழில் சிக்கல்களைப் பரிகரித்தும் வருகின்றனர்.

இது தங்களது வர்த்தக நலன்களை அடிப்படையாகக் கொண்டது எனப்பலர் நினைக்கலாம், இதுவும் ஓரளவுதான் உண்மை. இம்முறையையே வேனிற்காலப் பள்ளிகளிலும் ஆதாரக்கல்வி நிலயங்களிலும் அரசாங்கம் மாணவர்களுக்குப் போதிக்குமானால்

மிகக் குறுகிய காலத்தில்
பிரமிக்கும் முன்னேற்றம் !

- சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க பிரதம நிர்வாகிகளாலும், திருவாங்கூர்—கொச்சி ராஜ்ய சர்க்கார் குடிசைத் தொழில் அபிவிருத்தி போர்டாராலும் நேரில் பார்த்துப் பெரிதும் வியந்து பாராட்டப்பட்டது.
- ராஜ்ய நெசவாளர் கூட்டுறவு சங்கம், மற்றும்பல நெசவாளர் பிரதம கூட்டுறவு சங்கங்கள், வர்த்தகர்கள் ஆகியோரின் திருப்திக்கேற்ப கைத்தறி, பவர்லூம் & மில் துணிகளைச் சீட்டியாக புத்தம்புது மோஸ்தர்களில் மில் பிரிண்ட் செய்தும், பாலிஷ்செய்தும் அனுப்பித்தருகிறோம்.

மற்றவர்களின் தேவையையும்
பூர்த்தி செய்து தருவதற்கு தயாராயிருக்கிறோம்

விவரங்களுக்கு :

M. & C. பிரிண்டிங் மில்ஸ்,
தபால் பெட்டி நெ. 61, ஈரோடு.

அது சிறந்த பணியாக இருக்கும் என்பது திண்ணம்.

ஆகவே, சாயத் தொழில் சம்பந்தமாக நான் கற்றது சிறிதேயாயினும் அதை மக்களுக்கு உபயோகமாகும் வகையில் சிறிதும் மறைக்காது "கைத்தறி"யின் மூலம் வெளியிட முயன்றுள்ளேன். இம்முயற்சி வெற்றி பெறும் வகையில் வாசகர்கள் ஆதரித்து என்னை ஊக்குவிப்பார்களாக.

•

எனவே முதலில் நம் நாட்டில் கிடைக்கும் நாட்டுப் பொருள்களை கொண்டு சாயம் போடும் முறையை ஆராய்ந்து, பின் ரஸாயன முறையில் சாயம் போடும் முறையும் அச்சிடும் முறையையும் ஆராய்வோமாக. இதுபற்றிய குறிப்புகள் "கைத்தறி"யில் தொடர்ச்சியாக வெளிவரும்.

இக்கட்டுரையின் உதவியைக் கொண்டு ஆண் பெண் இருபாலரும், தங்களுக்கு வேண்டிய ஆடைகளுக்கு விருப்பமான சாயங்களைக் குறைந்த செலவில் தயாரித்துக் கொள்ளலாம், இதையே குடிசைத் தொழிலாகக் கருதி செய்பவர்களுக்கும், இதனால் நல்ல அனுகூலங்களும் கிட்டும். இத்தொழிலை பள்ளிகளில் மாணவர்களுக்கும் போதித்து வந்தால் அவர்கள் இளமையிலிருந்தே சுறுசுறுப்பாக இத்தொழிலின் முறைகளை அறிந்து கொள்ள அவக்கொள்வார்கள்.

இதே போன்று ஒவ்வொரு குடிசைத் தொழிலைப் பற்றிய விபரங்களையும் தொழிலின் முறை தெரிந்த அன்பர்கள் மக்களின் தொழிலுக்காக பாடுபட்டுவரும் "கைத்தறி"யில் வெளியிட்டு வந்தால் நம் நாட்டுமக்கள் அறிவுவளர்ந்து தொழில் மேன்மை அடைய ஏதுவாகுமெனக்கருதுகிறேன்.

சாயத்தொழிலானது ஏதோ ஒரு ரகசிய விஷயமாகவே இத்தொழிலில் ஈடுபடாதவர்களுக்குத் தென்படுகிறது. அந்தப் பத்தம் பசலி ரகசியமுறை தவிடு பொடியாக வேண்டியதுதான். எல்லோரும் தங்களது ஓய்வு நேரங்களிலும், முழுநேரமாகவும் சாய, அச்சுத்தொழில்களைக் கற்றுக் கொள்வது மிக உபயோகமாக இருக்கும்.

சாயம் தோய்ப்பதற்கு உபயோகப்படுத்தும் பாத்திரங்கள் வாயகன்ற பீங்கான் பாத்திரங்களாகவாவது, மண் பாத்திரங்களாகவாவது இருப்பது உத்தமம். இல்லையேல் உலோகப்பாத்திரத்தில் ஆஸிட் போன்ற திராவகப்பொருள்களைச் சேர்க்கும் போது அவைகள் கெடுதி அடைவதோடு சாயம் போடும் முறையும் கெட்டுவிடுமாதலால் மேற் கூறியபடி பீங்கான் அல்லது மண் பாத்திரங்களையேஉபயோகிப்பது நலமாகும்.

சாயம் ஏற்றப்படுவதற்கு முன் நாம் கண்டிப்பாய் கவனிக்க வேண்டியது யாதெனில் சாயம் போடப் போகும் துணி அல்லது நூல்களில் உள்ள ஒருவித கொழுப்பு, ஒருவித புளிப்பு, ஒருவித கலர் முதலிய சத்துகளும், பருத்தி அரைவையில் அகப்படும் போதும் நூல் நூற்கும் போதும் ஏற்படும் பற்பல பிரிவான வேலைகள் நடக்கும் போதும் வேலையாட்கள் மூலமாயும், யந்திரங்கள் மூலமாயும் அழுக்குகள் சேர்ந்து போகின்றன. இந்தகாரணங்களால்தான் பருத்தி தண்ணீரில் எளிதில் நனைவதில்லை. மிகுந்தகஷ்டத்தோடு தண்ணீருக்குள் வைத்து கால்களால் மிதித்து நனைக்க வேண்டியிருக்கிறது. ஆகவே சாயம் போடும் நூல் அல்லது துணியை நன்றாக சலவை செய்து அதிலுள்ள அழுக்குகளையும் சத்துக்களையும் போக்கிவிட வேண்டியதாக இருக்கிறது. அதன் பின்னர்தான் அவைகள் மீது திருப்திகரமான சாயம் ஏற்ற முடியும். சாயம் ஏற்றியபின் அவைகளை நன்றாகத் தண்ணீரில் அலசி சுத்தம் செய்யவேண்டும். ஓடும் தண்ணீரில் சுத்தம் செய்து கொள்ளுதல் மிகவும் நன்றாக இருக்கும்.

சுத்தம் செய்யப்பட்ட துணி அல்லது நூலை ஒழுங்கான இடத்தில் சுத்தமாக மடித்தோ அன்றி முறுக்கியோ வைத்துக் கொள்ள வேண்டும். இது தொழிலின் ஒழுங்கு முறைக்கு முக்கியமான விதிகளாகும்.

சாயம் போடும் போது அளவுக்கு மீறிய மருந்துகளை உபயோகிப்பதால் சாயம் குழப்பாகி, துணி அல்லது நூலில் ஒழுங்காக ஒரேமாதிரியாக சாயம் ஏறுவது தவறிப்போகும். சாயத்தில் நூலை இரக்கினால் நன்றாகதிருப்பிக்கொடுத்து வரவேண்டும், துணியை சாயத்தில் அமிழ்த்தினால் நான்கு புறமும் நன்றாகச் சாயம் ஏறக் குறுந்தடியால் கிளறிக்கொடுக்க வேண்டும்.

இக்கட்டுரையின் பிற்பகுதியில் குறிப்பிட இருக்கும் பொருள்களிலிருந்து சாயம் தயாரிக்கப்படுவது போன்ற தொழில் செய்பவர்கள், நம் நாட்டில் கிடைக்கும் பொருள்களை கொண்டு ஆராய்ந்து புதிய முறைகளையும், புதிய வர்ணச்சாயங்களையும் உண்டாக்குவதற்கு முயற்சிக்க வேண்டும்.

(அடுத்த இதழில் பிரவுன், காக்கி, ஆரஞ்சு முதலியநிறங்கள் நம் நாட்டுமுறையில் போடும் விபரம் வெளிவரும்)

உத்திரவாதமான கெட்டிச்சாயம் தோய்ப்பவர்கள்

மதராஸ்ராஜ்ய கைத்தறிநெசவாளர் கூட்டுறவுசங்கத்தின் அங்கீகாரம்பெற்றவர்கள்

DASS

ஆறுமுகம் & கம்பெனி
சாயத் தொழிற்சாலை
கந்தசாமிபாளையம், P.O. ஈரோடுதாலூகா

குடிசைத்தொழில்

(3)

மா. மாரிமுத்து, B. A., B Com.

நம் நாட்டுப் பொருளாதாரத்தைச் சீர்படுத்தி வளத்தைப் பெருக்க அரசியல் கட்சிகளும், பொருளாதார நிபுணர்களும், தொழிலதிபர்களும் பற்பல திட்டங்களை உருவாக்கி மக்கள்முன் சமர்ப்பித்திருக்கின்றனர்.

உலகிலுள்ள பல்வேறு நாடுகளும் தத்தம் நாட்டுப் பொருளாதாரத்தை வளம் படுத்தவும், தொழிலியலைப் பெருக்கவும், மக்களின் வாழ்க்கைத்தரத்தைஉயர்த்தவும், திட்டங்களை உருவாக்கியும், அவைகளை நிறைவேற்றியும் வருகின்றன. நம் நாட்டிலும் திட்டங்கள் பல போடப்பட்டிருக்கின்றன. நம் நாட்டின் பொருளாதார திட்டத்தில் குடிசைத் தொழிலின் பங்கு பற்றி பொருளாதார நிபுணர்களிடையேயும், தொழில் வல்லுனர்களிடையேயும், அரசியல் கட்சிகளிடையேயும் பலத்த வேறுபாடு நிலவுகிறது. பெரும் ஆலைத் தொழிற்சாலைகளுக்கும், குடிசைத் தொழிலுக்கும், இடையேயுள்ள வேறுபாடு தவிர்க்கமுடியாததும் ஒன்றுக்கொன்று பின்னப்பட்ட தொடர்புடைய பிரச்சனையுமாகும். காங்கிரஸ் கட்சி தீட்டிய தேசீய திட்டத்தில், கிராமியகைத் தொழில்களும், குடிசைத் தொழில்களும் வளர்ப்பதே முக்கிய இடம் பெற்றிருக்கிறது.

1938ம் ஆண்டு காங்கிரஸ் சட்சியின் தலைவராயிருந்த சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் தொழில் மந்திரிகளின் மகாநாட்டில் தன்னுடையதலைமைப்பேச்சில் "நான் நம் நாடு பெரும் இயந்திரத் தொழில்மய மாகவேண்டுமென்ற கருத்துடையவனாயினும், நம் குடிசைத் தொழில்களும், வளர வேண்டுமென்ற தேவையை உணர்ந்தவன்" என்று குறிப்பிட்டார். மேலும் கூறினார்; நம் நாட்டில் நிலவும் பொருளாதார சூழ்நிலை விசேஷ அமைப்பின் காரணமாகவும், நம் மக்களிடையேயுள்ள அத்யாவசிய மூலப் பொருள்களின் பற்றுக்குறையின் காரணமாகவும், பெரும் இயந்திரத் தொழில்களையும் சமமாக வளர்க்க பெரிதும் பாடுபடவேண்டும்; அப்பொழுது தேசீய திட்டக் கமிட்டியின் தலைவராயிருந்த ஜவஹர்லால் நேருவும், சுபாஷின் கருத்தை வலியுறுத்தியதோடு, எத்திட்டமும் நம் நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதாக இருக்கவேண்டுமென்று குறிப்பிட்டார்.

பெரும் இயந்திரத் தொழில்களும், குடிசைத் தொழிலும் ஒன்றுக்கொன்று துணையானதென்பது அத் திட்டம் தீட்டியவர்களின் கருத்து. ஆகவே இருமுனைகளிலும் பொருளாதார வளத்தைப் பெருக்குவதோடு, சாத்தியப்பட்டவரை பெரும் இயந்திரத் தொழிலும், குடிசைத் தொழிலும் வளர்ச்சி நிலையில் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கருதினார்கள். கூடுமானவரை பொருளாதார ஏற்றத் தாழ்வைக்குறைத்து எல்லோரும் குறைந்தபட்ச பொருளாதார சமத்துவம் அடையவே அத் திட்டம் விரும்புகிறது.

கிராமிய குடிசைத்தொழில் உப கமிட்டி கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறது :-

கீழ்கண்ட பயனுள்ள அம்சங்களின் காரணத்தினால், கிராமங்களில் வாழும் மக்களின் பொருளாதார வாழ்வை சீராக்கி குடிசைத் தொழிலுக்கு ஆதரவு தர வேண்டும்.

(1) தொழிற்சாலைகள் பெருகினாலன்றி நாடு பொருளாதார சுதந்திரம் பெறமுடியாதென்பதோடு மக்களின் வாழ்க்கைத்தரமும் உயராதென்பது உறுதி.

(2) தான் வாழும் இடத்திலேயே குடிசைத் தொழிலுக்குள்ள இயற்கைச் சூழ்நிலை போன்ற வசதிகள், தன்னுடைய திறமைக்கும், வசதிக்கும் ஏற்றதாயிருக்கும் தொழில்களில் ஈடுபட வாய்ப்பு உள்ளது.

(3) விவசாயிகள் ஓய்ந்தநேரங்களில் துணைத்தொழிலாக கைக்கொள்ள சந்தர்ப்பமளித்தல்.

(4) நகர்ப்புறங்களைவிட குறைந்த வாழ்க்கைத்தரமுடைய கிராம வர்ழ்க்கை.

கண்ணைக் கவரும்
* எண்ணற்ற *
கைத்தறி ஜவுளிரகங்கள்
மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்குமிடம்
காமதேனு டெக்ஸ்டைல்ஸ்
ஈஸ்வரன் கோவில் தெரு - ஈரோடு.

(5) நகர்ப்புறங்களிலேயே பெருகி நிலவும் வாங்கும் சக்தியை கிராமங்களில் தொழில்களை வளர்ப்பதன்மூலம் - கிராமிய மக்களிடையேயும் வாங்கும் சக்தியைப் பெருக்குவது! ஆகவே நாட்டு பொருளாதாரத்தில் குடிசைத்தொழிலுக்கும் தக்க இடம் தந்திருக்கிறது இத் திட்டம்!

"இந்தியாவின் பொருளாதார வளம் பெருக ஒரு திட்டம்" என்கின்ற திட்டமொன்றை 10,000 கோடி ரூபாய் செலவின் மதிப்பீட்டில் மூன்று 5 ஆண்டு கால நிலையில் நம் நாட்டு பொருளாதாரம் வளம்பெற திட்டம் தீட்டித் தந்தார்கள்; எட்டு பெரும் தொழிலதிபர்களான புருஷோத்தமதாஸ், ஜே ஆர். டி. டாடா, ஜி. டி. பிர்லா, சர் அர்தேஷர் தலால், சர் ஸ்ரீராம், கஸ்தூரிபாய் லால்பாய், ஏ. டி. ஷெராப். டாக்டர் ஜான்மத்தாய் ஆகியவர்கள். இத் திட்டத்தைப் பலர் பம்பாய் திட்டமென்றும் அழைக்கிறார்கள்.

நாட்டு மக்களின் குறைந்தபட்ச தேவைகள் நிறைவேறிய பின்பும் ஒவ்வொருவருக்கும் தத்தம் வாழ்வின் இன்பங்களை அனுபவிக்கவும், கலாசாரத்தின் வளர்ச்சியில் ஈடுபடவும் போதிய பொருளாதார வசதி அளிக்கும் அளவுக்கு மக்களின் வருமானம் பெருகவேண்டுமென்பது இத் திட்டம் தீட்டியவர்களின் முக்கியமான குறிக்கோளாகும். நம் இந்திய நாட்டில் தொழில் வளம் பெருகாததற்கு காரணம், மூல இயந்திர சாதனங்கள் இல்லாமையும், மின்சாரம்போன்ற விசைச் சக்திகள் குறைவாக இருப்பதுமேயாகுமென்று அவர்கள் கருதியதால், அத்யாவசியமான சில அடிப்படைத் தொழிலுக்கு தங்கள் திட்டத்தில் முதலிடம் தந்தார்கள்.

திட்டத்திற்கு ஒத்தவிதமாக மக்களின் அன்றாடத் தேவைக்கான பொருளுற்பத்திக்கு எந்தவித தடையும் இல்லையென்று உறுதியளித்தனர். ஆகவே சிறு தொழில்களும், குடிசைத் தொழில்களும் மக்களின் அன்றாடத் தேவைக்கான பொருள்களை உற்பத்தி செய்வதின் மூலம் அத்யாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளலாமென்று கருதினார்கள். ஆகவே சிறு தொழில்கள் பெரும் இயந்திரத்திற்கு இடையே சமமாக வளர ஏன் இடமில்லையென்று கருதினார்கள். என்றாலும், இத் திட்டம் தீட்டியவர்களின் கருத்து குடிசைத் தொழிலைப் பொருத்தமட்டில் அவ்வளவு தெளிவாக இல்லை. பெயரளவுக்கு அங்குமிங்கும் குடிசைத் தொழில்பற்றி இரண்டொரு வரிகள் தீட்டியிருக்கிறார்களேயன்றி உண்மையான கருத்தை அத் திட்டத்தில் அவர்கள் தெளிவாக்கவில்லை; கிராமிய கைத்தொழில்களை சீராக்கி வளர்க்கவே உருப்படியான கொள்கை அவர்களிடமில்லை; இருக்குமென எதிர்பார்க்கவும் முடியாது.

"சிறு தொழில்களின் வளர்ச்சிக்கும், குடிசைத் தொழில்களின் வளர்ச்சிக்கும் நாட்டுப் பொருளாதாரத்தில் போதிய இடமளிக்கவேண்டும். இது போதிய அளவு வேலையில்லாத திண்டாட்டத்தைக் குறைக்கிறது என்கின்ற முக்யத்தால் மட்டுமல்ல; இத் திட்டத்தின் ஆரம்ப நிலையில் தேவையான முதலீட்டை குறைப்பதற்காகவுமே ஆகும்". ஆகவே திட்டத்தின் ஆரம்ப காலத்தில்தான் குடிசைத் தொழிலின் வளர்ச்சிக்கு இடமளிக்க விரும்புகிறார்கள் போலிருக்கிறது. திட்டத்தின் ஒட்டுமொத்த தாத்பரியமே, நிரந்தரமாகக் குடிசைத் தொழிலை வளர்க்க வேண்டுமென்பதில்லை யென்றே அர்த்தப்படும்படியாக மேற்கண்ட வாக்கியங்கள் தொனிக்கின்றன.

குடிசைத்தொழில் பெருகிய போதுதான் வாங்கும் சக்தி கிராம மக்களிடையேயும் பரவலாக தென்படும். அப்போதுதான் இயந்திர தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு ஓரளவு நிரந்தர தேவையை உண்டாக்கமுடியும். ஆகவே இத் திட்டம் தீட்டியவர்களின் நோக்கமெல்லாம் பெரும் இயந்திர தொழிற்சாலைகளைப் பெருக்குவதேயாகும்!

சுயதேவை எப்படி?

சு. திருமூர்த்தி-இடுவாய்.

இன்றைய சுத்தக்கதர் சுய தேவைப் பூர்த்தியில், பெரும் பான்மையோர் மனப் பூர்வமாக, ஆதரித்துக் கதர் கட்டுகின்றனர்; கட்டுவித்து விட்டோமென பெருமை கொள்கின்றனர், சென்னை சர்க்கார். ஆனால், அந்த சுய தேவைப் பூர்த்தி தறிகாரர்களையும், நூற்போர்களையும் எப்படிப் பாதிக்கின்றதென்பதுமட்டும், அன்னவர்கட்குத் தெரியாது போலும்.

பத்துப்பதினைந்துவருடங்களாக எங்கள்கிராமத்தில், நூறுதறிகளுக்குமேல், அகில பாரதசர்க்கா சங்கத்தில், சுத்தக் கதர் நெய்துவந்தனர். சென்னைசர்க்கார், கதர் உற்பத்தி உரிமையாளர்கள் இங்குவந்து நாங்கள் பல சௌகரியங்கள் செய்து கொடுக்கிறோமெனக் கூறி சில தறிகாரர்களுக்கு, நூல்கொடுத்து, ஆரம்பத்திலே பல சௌகரியங்கள் செய்தும், கொடுத்தனர். எல்லாத் தறிகாரர்களும் சேர்ந்தபின் பல சென்டர்களிலே துணிகள் விற்பனையின்றித் தேங்கிற்று. அதன் விளைவாக முதலிலே கூலியை இறக்கினர்; கூலி இறங்கியதும், தறிகாரர்கள் நிலைமை கவலைக் கிடமாயிற்று. மேலும் அவர்களுக்கு கிடைக்கும் நூல் அளவு சரியின்மையால், விலைக்குவாங்கி சரிசெய்தனர். இந்நிலைமையிலே பின்னும் மூன்றில் ஒருபங்கு கூலியை டிபாசிட்டாக வற்புறுத்திப் பிடித்துக் கொண்டனர்.

1. கூலியிறக்கம், 2. நூல் அளவு குறைவு, 3. இறங்கிய கூலியிலே $\frac{1}{3}$ பங்கு டிபாசிட்; இக்கட்டுப்பாடு ஒவ்வொரு தறிகாரனையும், கண்ணீர் சொரிய வைத்தது. அப்போது அன்னவர்களின் வாழ்க்கைப் படகு வறுமைப் புயலால், சிக்குண்டு தத்தளித்தது.

ஆடிப் பண்டிகை வந்தது, டிபாசிட் பணம் ஐம்பது, அறுபது வருமென்று ஒவ்வொரு தறிகாரனும் மகிழ்ந்திருந்தான். ஆனால் கிடைத்தது பணமல்ல, அவ்வளவு பணத்திற்கும் துணிகளைக் கொடுத்தனர். கல்யாண ஜவுளி போல் துணிகளை எடுத்துச் சென்று என்ன செய்வது? அன்று ஆடிப் பண்டிகை, சிலவிற்குப் போதிய பணம் வேண்டாமா? எடுத்துவந்த துணிகளை விற்பதைவிட, பணத்திற்கு வேறு வழியில்லை. வலிய விலைகூறினார்கள், விலையைக்கேட்டசிலர், அப்பா இம்முரட்டுத் துணிக்கு இவ்வளவு விலையா? என்றனர். பின், பாதிவிலையைத் தள்ளி விற்றுப் பணம் பெற்று ஆடிப்பண்டிகையை வரவேற்றனர் சலிப்புடன். கதர் உற்பத்தியாளர்கள் திளைத்தார்கள்; பண்டிகைக்கு கதரேவாங்கிகட்டியிருக்கின்றனர், சுயதேவை நாட்டிலே பரவி விட்டதென்று.

இதேபோல் சென்னை சர்க்கார் நூல் உற்பத்தி சென்டர்களிலும், ராட்டைச்சாரிகளுக்கும், முதலிலே சலுகை காட்டினார்கள் மூலைகளில் கிடந்த ராட்டைகளெல்லாம் எழுந்து சுழல ஆரம்பித்தன. ஆயிரமாயிரம் சிட்டங்கள் குவிந்தன. பல குடும்பங்கள் நூல் நூற்று, அதனால் வரும் பணத்தைக்கொண்டே, வாழ்க்கை நடாத்தினர். வேலையில்லாத்திண்டாட்டத்திற்கு நூற்பு ஒருசிறந்த தொழிலாகவும் இருந்தது.

பின்னர் சுய தேவைக் கென்று, நான்கில் ஒரு பங்குநூலை, டிபாசிட்டாகப்பிடித்தனர். படிப்படியாக பாதி சிட்டத்தை பிடித்தனர், பின் அவர்கள் தரும் பஞ்சையே வாங்கவேண்டுமென்றனர். அப்பஞ்சை வாங்காதவர்களிடம் நூல்வாங்குவதில்லை என்று கட்டளையிட்டனர். நூற்பவர்கள் தங்களது தோட்டங்களிலே விளைந்த கருங்கண்ணிப் பஞ்சுகளை மூட்டைகட்டிப் போட்டு விட்டு விலை கூறினார்கள். அவர்கள் கொடுக்கும் பஞ்சினாலேயே நூற்றனர். எல்லாச்கிராமங்களிலிருந்தும் புதன் சனி, இரு கிழமைகளிலும் தான் நூல் கொண்டு செல்ல வேண்டும். காலையிலே நூல் கொண்டு சென்றவர்கள் மாலையிலேதான் வீடு திரும்

சிறுவலூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி,
விற்பனைச் சங்கம் லிமிடெட், *No. K. 1116*

(பெருந்துறை வழி) **சிறுவலூர் P. O** (கோவை ஜில்லா)

எங்கள் சொஸைட்டியில் 20, 26, 30, 40. நெ. நூல்களில் 4 x 8, 4 x 9 வேஷ்டித்தான்களும், 50" x 12 கெஜம் காடா பீஸ்களும் 6, 7½, 8, கெஜங்களில் பேட்டு, போர்வை. பிளின் கியாரண்டிக்கலர் சேலைத்தினுசுகளும், 2/8, 2/30 நெ. நூலில் கேட்டி எடை நெசவு துப்பட்டிகளும் மிக அழுத்தமான நெசவில் தயார் செய்துவருகிறோம்.

தற்சமயம் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன! **தேவைக்கு எழுதுங்கள்.**

சீ. தாண்டவஞ் செட்டியார், தலைவர்.

பவேண்டும். அங்கே சென்று பார்த்தால் கல்மனமும் கரையும். அதிகாலையிலே நூல் எடுத்துச் சென்றவர்கள், மாலைவரைக்கும் பசியால் தள்ளாடிக் கொண்டிருப்பார்கள். கர்ப்பிணிகள் பலர் வெய்யலிலே துவண்டு நிற்பர். பச்சிளங் குழந்தைகளை வீட்டிலே விட்டுவந்த தாய்மார்கள், இன்னும் எந்நேரமாகுமோ, குழந்தை அழுமே என்று கண்ணீர் சோர்வார்கள். நூல்வாங்கும் உரிமையாளர்கள், அங்கிருக்கும் இளம் பெண்களைப் பார்த்துக்கொண்டு, தமாஷ், சிரிப்பு, சீட்டி, இப்படி அவர்களுக்கு வேடிக்கை!

இதேபோல் துணி கொண்டு செல்லும் நூற்றுக் கணக்கான தறிகாரர்களும், கொண்டு சென்ற துணிகள் எடையாகாமல், ஒரு நாள் இரண்டுநாள்வரை, கடையின்முன்னால், சோர்வுற்று காத்திருப்பர். மணிக்கணக்காக, நாட்கணக்காக காத்திருந்த, கடைசியிலே நூல்இல்லை, அல்லது பணம் இல்லை என்பார்கள்.

கடும் வெய்யிலிலே, தூசிபடியும் காற்றிலே நின்றிருந்த தறிகாரர்நிலைமை பகரொணாது. தறிகாரர் எக்கேடு கெட்டாலென்ன, அவர்களுக்கு சுய தேவை நாட்டிலே பெருகவேண்டும், கதர் செண்ட்டர்களிலே அவர்களுக்கு உத்தியோகம், நிலைத்து நிற்கவேண்டும், இது அவர்களுடைய லட்சியம் போலும்!

ஆடிப்பண்டிகை, வந்தது, ராட்டைக் காரிகளுக்கு கொஞ்சமேனும் பணம் தராமல் எல்லாச்சிட்டங்களையும் டிபாசிட்டாகப் பிடித்தனர். அப்பணத்தை நம்பிவந்த ராட்டைக்காரிகள், மனம்வெந்து, இவனுக்கு ஒரு பேதிவரக்கூடாதா. என்று சபித்தனர்; சுய தேவை உற்பத்தியாளர்களை நோக்கி!

இனிக்கொண்டுவரும் நூல்களுக்கு சேலைதான் கிடைக்கும் என்றனர், கதர் உற்பத்தியாளர்கள். 10 ரூபாய் போட்டால் நல்ல சேலையாச்சே, இதற்கு இருபத்தஞ்சு ரூபாயா? என்று பொருமினர் ராட்டைக்காரிகள். மீண்டும் சென்றனர் மனச்சலிப்புடன். இரண்டுநாள் மூன்றுநாள் சென்று அவர்கள் இஷ்டப்படி கொடுக்கும் துணிகளை வாங்கிவந்தனர். சிலர் பாதிவிலைக்கு விற்றனர், விற்க முடியாதவர்கள் வெறுப்புடன் உடுத்திக் கொண்டனர். கைநோக நூற்று என்னபயன்? எங்காவது கூலிக்குச் சென்றாவது வயிறு வளர்ப்போம், என்று ராட்டைகளை வைத்துவிட்டார்கள். அவைகளும் ஓய்வெடுத்துக் கொண்டன. ஆனால் தறிகளோ, ஓய்வெடுக்க முடியாமல் கண்ணீர் விடுகின்றன. கண்ணீரைக்கண்டு கலங்குமா, சுயதேவைத் திட்டம்?

சென்னை சர்க்காரின் சுயதேவைக்கதர் உற்பத்தியானது பற்றுக்குறை நூலிலே, இறங்கிய கூலியிலே, அவதியுறும் தறிகாரர்களைப் பிழிகின்ற முறையிலே நடைபெற்று வருகின்றது. சுய தேவைத் திட்டம், மாறுமா? தறிகாரரின் கவலை நீங்கி, அன்னவர்க்கு சுபிட்சப்; தரும் வழியை, சர்க்கார் செய்யுமா? ●

கோவை ஜில்லா கைத்தறி நெசவுத் தொழிலாளர் முதல் மகாநாடு !

பல்வேறு பிரச்னைகள் ஆராயப்படுமென அறிவிப்பு.

கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்த பட்ச நிர்ணய விலையில் நூல் கிடைக்கவும், மில்களுக்கும், கைத்தறிகளுக்கும் தொழில் முறையில் போட்டி ஏற்படாமல் ரகப்பிரிவினை செய்துதர வற்புறுத்தவும், கைத்தறியாளர்கள், ராஜ்ய, மத்ய சர்க்கார்களைக் கொண்ட ஓர் நிதிக்கார்பரேஷனைத் தோற்றுவித்து கைத்தறி ஜவுளி தேக்க மேற்படும் சந்தர்ப்பங்களில் அவைகளைக் கொள்முதல் செய்ய அந்நிதியை உபயோகிக்கலாம் என்ற யோசனையை உருவாக்கவும், நெசவாளர்களின் குடியிருப்புவசதிகளை கூட்டுறவு இயக்க முறையில் பெறவும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை சாத்தியமான வரை தோற்றுவிக்கவும், விசைத்தறிகளை மேற்கொண்டு அமைக்க அனுமதிப்பதில் உள்ள அபாயத்தை எடுத்துக்காட்டவும் இன்னும் இது போன்ற ஜீவாதாரமான லட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு வெகு விரைவில் கோவை ஜில்லா கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் முதலாவது மகாநாடு ஒன்றை நடத்தப் போவதாக கோவை நகர கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்க நிர்வாகஸ்தர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

இம்மகாநாட்டில், கைத்தறி நெசவாளர்களின் - தொழிலின் நிலைமைகளைப் பற்றிமட்டு மின்றி, இத் தொழிலையொட்டி உள்ள சாயப்பட்டரைக்காரர்கள், கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள், வியாபாரிகள், கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஆகிய அனைத்தவரின் தேவைகளையும் கோரிக்கைகளையும் பிரதிபலித்து — விவாதித்து முடிவு செய்யப்படுமென்றும் அவ்வறிக்கை முகமன் கூறுகிறது.

மகாநாட்டையொட்டி ''பாரதி'' அல்லது ''வாழ்வுச்சுழல்'' என்ற நாடகமும் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

ஏஜனடுகள் தேவை

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

யின் யோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி பண்டித நேருவுக்கு கடிதங்களும், தந்திகளும் அனுப்ப நடவடிக்கை எடுத்தாக வேண்டும். சாத்தியமான இடங்களில் எல்லாம் கூட்டங்கள் கூட்டியும், ஊர்வலங்கள் நடத்தியும், தீர்மானங்கள் நிறைவேற்றியும் மத்திய சர்க்காருக்கு அனுப்பித் தந்தாக வேண்டும். அதன் நகலை "கைத்தறி"க்கும் அனுப்பித் தருமாறு நாம் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் நெசவாளர்களின் இந்த கோரிக்கைக்கு பொதுமக்களின் ஆதரவுஇருப்பதாகத் தெரிவிக்கவும் மகஜர்கள் தயாரித்து ஜனங்கள் மத்தியில் நிறைய கையெழுத்துக்கள் வாங்கியும் நேருவுக்கு அனுப்பித்தர வேண்டும். இப்படி பல வழிகளிலும் நமது ஜீவாதாரமான இந்ததிட்டத்தை வலியுறுத்தவும், ராஜாஜியின் கையைப் பலப்படுத்தவும் இன்றே-இப்போதே நடவடிக்கையில் இறங்கியாக வேண்டும். என்பதை ஞாபகப்படுத்துகிறோம். ●

சாய, அச்சு தொழிற்சாலைகளுக்கு விற்பனை வரி விலக்கு.

26-8-52 தேதிய 2417 நெ. சர்க்கார் உத்தரவு:- 1952 ஏப்ரல் 1-தேதி முதல் '53 மார்ச்சு 31-தேதி வரையுள்ள ஓராண்டு காலத்திற்கு, சென்னை மாகாணத்திலுள்ள சாய அச்சுப்பட்டறைகளுக்கு சென்னை கவர்னர் விற்பனைவரியிலிருந்துவிலக்கு அளித்துள்ளார்.

ரகப்பிரிவினைக்காக ராஜ்யசர்க்கார் செய்துள்ள சிபார்சுக்கு சேலத்தில் ஆதரவு.

சேலம் குகை கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகக்கமிட்டி கூட்டம் அதன் தலைவர் கே.ஆர்.சி. சென்னி செட்டியார் தலைமையில் 10-9-52ந் தேதி நடைபெற்றபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன,

(1) சென்னை சர்க்கார் கைத்தறிகளுக்கென வேஷ்டி, சேலை ரகங்களை ஒதுக்க வேண்டுமெனவும், அவைகளை மில்கள், உற்பத்தி செய்யவேண்டுமெனவும் மத்திய சர்க்காருக்கு செய்துள்ள சிபாரிசை இச்சங்கம் முழுமனதுடன் ஆதரிக்கிறது.

(2) கைத்தறி 1-க்கு மாதம் 1-க்கு 100 கஜம் உற்பத்தி செய்ய முடியும் என்ற அடிப்படையில் நம் ராஜ்யத்திலுள்ள எட்டரை லக்ஷம் தறிகளில் வருஷம் 1-க்கு 100 கோடி கஜம் துணியும், இந்தியா பூராவிலுமுள்ள 29 லக்ஷம் தறிகளில் 350 கோடி கஜம் துணியும் வருஷத்திற்கு உற்பத்தி செய்ய முடியுமென்று இச்சங்கம் உறுதியாக நம்புகிறது. வேஷ்டி, புடவை தேவையை கைத்தறிகளாலேயே பூர்த்தி செய்ய முடியுமாதலால் மத்திய சர்க்கார் சென்னை சர்க்காரின் சிபார்சை ஏற்று மில்களில் வேஷ்டி, புடவை ரகங்களை உற்பத்தி செய்வதை தடை செய்து கைத்தறிகளில் அந்த ரகங்களை உற்பத்தி செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் இச்சங்கம் கோருகிறது.

P. A. ராஜு செட்டியார் & பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்.

"கைத்தறி" தீபாவளி மலர்

மலர், 15-10-52 தேதியன்று வெளியாகிறது. நெல்லை. வி. எஸ். சங்கரசுப்ரமணிய முதலியார் பி.ஏ.பி.எல்., திருச்செங்கோடு டி.எஸ். பட்டாபிராமன் எம்.ஏ.,பி.எல்.,எம் பி., நா. மகாலிங்கம் பி.எஸ்ஸி. எம்.எல்.ஏ, அ. சாலமன் அப்பாத்துரை பி.ஏ, ஏ. கே. ஞானியார் மா. மாரிமுத்து பி.ஏ.பி.காம்., மற்றும் பல அறிஞர்களின் ஆராய்ச்சி தெளிவு நிறைந்த கட்டுரைகளும்,

கே.சி.எஸ். அருணுசலம், இரா. அவையழகன், சு. சென்னியப்பன் முதலியோரின் எழிலும் நயமும் நிறைந்த கவிதைகளும், கருத்தாழம் நிறைந்த கதைகளும் மலரில் இடம்பெறுகின்றன.

கைத்தறி நெசவு, சாயமீடுதல், கையாலும் இயந்திரத்தாலும் துணியை அச்சிடுதல் போன்ற தொழில் பிரிவுகளை விளக்கும் புகைப்படங்கள் மலரின் பக்கங்களை அலங்கரிக்கின்றன.

52 பக்கங்கள். ★ **விலை 6 அணு.**

உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்.

உத்திரவாதமானகெட்டிச்சாயம் தோய்ப்பவர்கள்

மதராஸ் கைத்தறி நெசவாளர் மாகாண கூட்டுறவு சங்கத்தாரால் அங்கீகாரம் பெற்றவர்கள்

வரதராஜ் & கோ

சாயத்தொழிற்சாலை

மீன்கரைரோடு, பொள்ளாச்சி.

சங்கரன்கோவில் கைத்தறி நெசவுத்தொழிலாளர் சங்கம்

ரகப் பிரிவினையை ஆதரிக்கிறது.

7–9–52 தேதி செங்குந்தர் கார்த்திகேயன் நிலயம் மாடியில் வைத்து மேற்படி சங்கத் தலைவர் ஸ்ரீ ந. பாடலிங்க முதலியார் தலைமையில் நடந்த நிர்வாக கமிட்டி கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் ஏக மனதாக நிறைவேறியது.

வேஷ்டி, புடவை ரகங்களை மில்லில் தடைசெய்து கைத்தறிக்கே விட்டுவிடவேண்டுமென்ற சென்னை ராஜ்ய முதல் அமைச்சர் யோசனை வரவேற்றும் மேற்படி யோசனையை உடனடியாக அமுலுக்குக்கொண்டுவந்து கஷ்டத்தில் உழலும் கைத்தறி நெசவாளர்களை காப்பாற்ற வேணுமாய் மத்திய சர்க்காரை இக்கூட்டம் ஏக மனதாகக் கேட்டுக்கொள்கிறது.

ஏஜண்டுகள் தேவை

லியோ காப்பி உபயோகிக்க சிறந்தது

லியோ காப்பி ஒர்க்ஸ்

மாகாளியம்மன் கோவில் வீதி

கோயமுத்தூர்.

திருச்செங்கோடு கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

S. No. 523.

(சங்ககிரி R. S.) **திருச்செங்கோடு** (சேலம் ஜில்லா.)

எங்களிடம் 2000 தறிகளிலிருந்து நவீன டிசைன்களில் தயாராகும் அடியிற்கண்ட ரகங்கள் சரசமான விலைக்குக் கிடைக்கும்.

கோட்டிங், ஷர்ட்டிங் பீசுகள், சலவை, கடா பீசுகள், பெட்ஷீட், சால்வைகள் துண்டு, வேஷ்டித்தான்கள், வெள்ளை, கலர்சேலைகள்.

தேவையுள்ளோர் விபரங்களுக்கு எழுதவும்.

K. A. காசிவிஸ்வநாத முதலியார், தலைவர்

'கைத்தறி' தீபாவளி மலரில் விளம்பரம் செய்ய முந்துங்கள்.

சாய, அச்சுத் தொழிலில் நீண்ட நாள்
அனுபவமுள்ளவர்களால் ஆரம்பிக்கப்படுவது !

ஜெமினி பிரிண்டிங்

(வெகு விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது)

கைத்தறி & மில் துணி, சில்க் ஆகியவைகளை கண்கவர் வர்ணங்களில், அற்புதமான டிசைன்களில். குறைந்த சார்ஜில் சேலை & சீட்டி தினுசுகள் மெஷின் பிரிண்ட்செய்து தருகிறோம்.

: உரிமையாளர்கள் :

S. DORAISWAMY MUDALIAR & CO.,
CLOTH FINISHING PRODUCERS,
FORT, :: ERODE.

தென் இந்தியாவின்
முதல் ஸ்தாபனம்

தி சௌத் இந்தியன் பிரிண்டிங் & டையிங் பாக்டரி

★

கண்ணைக் கவரும் கணக்கற்ற புத்தம் புதிய டிசைன்களில் அற்புதமான சீட்டி, சேலை தினுசுகள் மில் & கைத்தறித் துணிகளில் கியாரண்டி கலர்களில் மெஷின் பிரிண்ட் செய்தும் காலண்டர் செய்தும் குறித்த நாளில் தருகிறோம்.

★

எங்களின் சொந்த தயாரிப்பான "டார்ச் பேபரிக்ஸ்"
இந்திய ஜவுளி மார்க்கெட்டில் மிகப் பிரசித்தமானது.

விவரங்களுக்கு:

காமதேனு டெக்ஸ்டைல்ஸ்,
ஈஸ்வரன் கோவில் தெரு, :: ஈரோடு, S. I.

Edited & Published by: M. K. Swamy at 19/22, Muthanankulam Street, Coimbatore.
Printed: at Gugan Press, 5/314, Avanashi Road, Coimbatore.

29 MAY 1955

வேண்டுகோள்!

கைத்தறியால் நெய்யப்படும் துணி, அதே ரக மில்துணிக்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல. மில் துணியா அல்லது கைத்தறித் துணியாயென இரண்டிலொன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டுமானால் நான் தயங்காமல் மனப்பூர்வமாக கைத்தறித் துணியையே தேர்ந்தெடுக்கும்படி சொல்லுவேன். ஏனென்றால் அது கண்ணியமும் நேர்மையும் வாய்ந்த தொழில் ஒன்றில் ஈடுபட்டுள்ள நெசவாளர் குடும்பங்களை வாழ்விக்கிறது.

பல பத்துவருடங்கள் கடும் போட்டிக்கிடையே கைத்தறி தொழில் ஜீவித்து வந்திருக்கிறது. அதுமட்டுமல்ல; உண்மையாகவே உடை விஷயத்தில் ரசிகத்தன்மையுள்ள ஆணுக்கும் பெண்ணுக்கும் மனரம்மியமான நல்ல ஆடைகளை தொடர்ந்து அது அளித்து வந்திருக்கிறது.

எங்கெல்லாம் அகப்படுமோ, எதற்கெல்லாம் உபயோகப்படக் கூடுமோ, அங்கெல்லாம், அதற்கெல்லாம் கைத்தறித் துணிகளையே வாங்குமாறு நான் இதய பூர்வமாக கேட்கிறேன். பலஹீனர்களை நாம் பாதுகாக்க வேண்டும். பட்டினியிலிருந்துநெசவாளர்களையும் அவர்களது குடும்பங்களையும் நாம் பாதுகாத்தாகவேண்டும்.



அரசாங்க மானியம் எதுவும் மக்கள் தரும் ஆதரவுக்கு ஈடாகாது. மக்கள் ஆதரவின்றி மானியமும் பயன்தராது. கஷ்டப்பாடுபட்டு வாழ்க்கையை நடத்தும் சுயமரியாதையுள்ள-சுமார் 6 லட்சம் பேர்கொண்ட-ஜனப் பகுதி உங்களிடம் வேண்டுகிறது; அதை நீங்கள் மறுக்கக்கூடாது; ஆடைத் தேவையானால் கைத்தறி ஆடையையே வாங்குங்கள்.

— ராஜாஜி.

Star Coffee Works.

RANGAI GOWDER STREET,
COIMBATORE.

உங்களின் நித்ய தேவைக்கு எற்றது

ஸ்டார் காப்பி

தேவையேற்படும்போதெல்லாம் "ஸ்டார் காப்பி"யையே நீங்கள்தேர்ந்தெடுங்கள்

சமீபத்திலுள்ள கடைகளில் விசாரியுங்கள்

மற்ற விவரங்களுக்கு எழுதுக:

ஆதரவாளர்களுக்கு எமது நன்றி கலந்த வணக்கம்.

அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

அழகிற்கு ஆடை அணி செய்கிறது
அதற்கு சாயம் துணை நிற்கிறது!

அவ்வகையில்

சென்னை சர்க்காராலும், மதராஸ் ராஜ்ய
கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தாராலும்
அங்கீகாரம் பெற்றவர்கள்:

ஸ்ரீ வெங்கடேசா கலர் ஒர்க்ஸ்

(சாய, அச்சுத் தொழிற்சாலை)

7C. மிஷின் வீதி ★ திருப்பூர் (S. I.)

சமர்ப்பிக்கிறோம்!

நேயர்களே!

உங்கள் நல்லாதரவிலே மலர்ந்த "கைத்தறி"க்கு இவ்விசேஷ இதழுடன் மூன்றாண்டுகள் பூர்த்தியாகின்றன. அது தனது நான்காவது ஆண்டுப் பயணத்தைத் தொடங்கி, இன்று தீபாவளி மலர் உருவில் உங்கள் கரங்களில் சேர்ந்திருக்கிறது.

கைத்தறி நெசவாளர்களும், அவர் தம் பெருமைமிக்க தொழிலும் சிறுகச்சிறுக அழிவதைப் பார்த்துக்கொண்டு "அழிய வேண்டியதுதான்" எனக்கூறி ஒரு கூட்டம் எக்காளமிட்ட போது, அவ்வெண்ணத்தின் அடிப்படையே முற்றிலும் அர்த்தமற்றது என எதிர்த்துப்பேசவும்—அழிவைத்தடுத்து தொழிலின் ஸ்திரத்தன்மைக்கு வழிகாட்டவும் "கைத்தறி" பிறந்தது.

அது பிறந்ததுமே மடிந்துவிடும் என அவநம்பிக்கை தெரிவித்தவர்களும் உண்டு. அது, நெசவாளருலகில் உருவகப்படுத்திய எண்ணங்களை—கட்டி வளர்த்த போராட்டங்களை எள்ளி நகையாடிய தலைவர்கள், பத்திரிகைகள் அனந்தம். கடந்த மூன்றாண்டுகளாக "கைத்தறி" தொடர்ந்து காட்டிவந்துள்ள சரியான பாதை, அவநம்பிக்கைப் பட்டவர்களை வியப்படையவும், எள்ளி நகையாடியவர்களை வாயடைத்து நிற்கவும் செய்துள்ளது.

சேலை, வேட்டி ஆகிய ரகங்களை உற்பத்தி செய்யும் உரிமை கைத்தறி நெசவுத் தொழிலுக்குத்தானிருக்க வேண்டுமென்று 1949-ம் ஆண்டிலேயே "கைத்தறி" வற்புறுத்தியது, அதை அன்று அதிகாரபீடத்திலிருந்தவர்கள் "அனுபவசாத்தியமற்றது" எனக்கூறி அலட்சியப்படுத்தினர். செல்வாக்கு மிகுந்ததமிழ்நாட்டின்பிரபல பத்திரிகைகளும் அந்த யோசனையை எதிர்த்துக் கிண்டல் செய்தன. அதுபோலவே, நூலின் நிர்ணய விலையை 1947-ம் ஆண்டிலிருந்த விலைக்குக் குறைத்துவிட வேண்டுமென்று பிரதான கோரிக்கையாக "கைத்தறி" வற்புறுத்தியபோதும் மேற்கண்ட முறையிலேயே ஆட்சேபணைகள் தெரிவிக்கப்பட்டன,

"கைத்தறி"யின் இந்த இரண்டு நெடுநாளையக் கோரிக்கைகள் கொள்கை பூர்வமாக முதலமைச்சர் ராஜாஜி அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு மத்திய சர்க்காருக்குப் பலமாக சிபார்சும் செய்யப்பட்டிருக்கிறது. அன்று "கைத்தறி" வற்புறுத்திய இந்த உருவான யோசனைகளைக் கேலி செய்த பத்திரிகைகள் இன்று முழுக்க முழுக்க இதுதான் மிகவும் நியாயமான யோசனைகள் என வலியுறுத்தி எழுதி வருகின்றன, இது போலவே அனேக மேற்கோள்கள் "கைத்தறி"யால் எடுத்துக் காட்டமுடியும்,

இந்த சாதனைகளோடு "கைத்தறி" திருப்தி கொள்ள முடியாது. நாம் நமது தொழில்பாதுகாப்பிற்கான நடவடிக்கையில் முன்னிலும் பலம்வாய்ந்து இயங்கியாக வேண்டும். முடிவான இலட்சியத்தை நோக்கிச் செல்ல முனையவேண்டும். அவ்வகையில் உங்களுடன் இணைந்தும், பிணைந்தும் "கைத்தறி" எதிர்காலத்திலும் பணியாற்றும்.

கடைசியாக ஒருவார்த்தை. இம்மலரை சென்றமலர்களைக்காட்டிலும் வெகு சிறப்பாக வெளியிட திட்டமிட்டிருந்தோம். அதைப் பூரணமாக நிறைவேற்ற சாத்தியமில்லாமல் போய்விட்டது. முடிந்தளவு சிறப்பிக்கச் செய்திருக்கிறோம். மனத்திருப்தியோடு மலரை நேயர்கள் ஏற்றுக்கொண்டு அதன் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பார்களாக. வணக்கம்.

— ஆசிரியர்.

உலகத்திலேயே தலைசிறந்த கைத்தொழில் வல்லுநர்களாக
விளங்குகிறார்கள் நம் ராஜ்யத்திலுள்ள கைத்தறி நெசவாளர்கள்.

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறி துணிகளில்

நிறக் கவர்ச்சி
நெசவு நயம்
அழகுத் தோற்றம்
எல்லாம்
நிரம்பியுள்ளன

சென்னை மாகாண கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்

ஜம்மி கட்டடம், 48-1 ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை-14.

நேஷனல்
பிரிண்டிங் & டையிங் ஒர்க்ஸ்

தாராபுரம் ரோடு, ★ திருப்பூர் R. S.

கண்ணைக்கவரும் டிசைன்கள்! கருத்தையள்ளும் பார்டர்கள்!

கியாரண்டிக் கலர்களில்!

நீங்கள் விரும்பும் எல்லாக் கலர்களிலும், அற்புதமான பம்பாய் டிசைன்களில் சேலை, சீட்டி ரகங்களும், டிச்சார்ஜ் ரகங்களும் பிரிண்ட் செய்து தருகிறோம்.

கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள், நெசவாளர்களின் தொழில் தேவைக்கான எல்லா நெம்பர் நூல்களுக்கும் கியாரண்டிக் கலர்கள் போட்டுத் தருகிறோம்.

உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதே எமது ஸ்தாபனத்தின் லட்சியம்!

குடிசைத் தொழில் அபிவிருத்தியே நாட்டின் முன்னேற்றம்.

M K. சின்னப்ப கவுண்டர், உரிமையாளர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட் NO. A. 1601,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

இந்த ஆண்டுத் தீபாவளிப் பண்டிகையை மக்கள் புத்தாடை பூண்டு மகிழ்வுடன் கொண்டாட எங்கள் சங்கத்தில் உற்பத்தியாகும் கை நெசவுத் துணி வகைகளின் விலையை வெகுவாகக் குறைத்திருக்கிறோம்.

பலலட்சம் பாட்டாளிகளுக்கு வாழ்வளிக்கும் கைத்தறித் துணிகளை வாங்குங்கள். தங்களின்தேவையை நிறைவேற்ற காத்துக்கொண்டிருக்கிறோம்.

எங்கள் சங்கத்தின் உற்பத்தியில் புகழ்பெற்ற வேட்டி, சேலை, துண்டு, வெள்ளைப் பீசுகள் இவைகளை வாங்கிப்பயன் அடையுங்கள்.

விலையும் மலிவு! நெசவும் உறுதி!

இன்றே எழுதுங்கள்.

A. K. ஞானியார், செயலாளர். P. குருசாமி, தலைவர்.

கைத்தறி தொழிலும்

ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டங்களும்

டி. எஸ். பட்டாபிராமன் எம். ஏ. பி. எல்., எம். பி.

1950-ம் ஆண்டில் மத்திய சர்க்காரின் தீர்மானத்தின்படி நமது நாட்டில் அபிவிருத்தி திட்டங்கள் வகுக்க திட்டக் கமிஷன் நிறுவப்பட்டது. அந்தத் தீர்மானத்தின் முக்கியமான ஷரத்துக்கள் கீழ் வருமாறு:

(அ) நாட்டின் பிரஜைகள் அனைவரும் தமக்குப் போதிய அளவு வாழ்க்கை வசதிகள் பெற அடிப்படை உரிமை.

(ஆ) நாட்டின் சில இடங்களிலும் சிலரிடத்திலும் தொழிலும் செல்வமும் முடங்கி; நாட்டிற்கு தீங்கு இழைக்காமல் இருக்க நியாயமான பொருளாதாரக் கொள்கை வகுப்பது.

(இ) தங்களுக்கேற்ற தொழில்கள் மூலம் நாட்டிற்குச் சேவை செய்ய அனைவருக்கும் சந்தர்ப்பம் அளிப்பது.

நாட்டின் நலனைக் கருதி விவசாயம், குடிசைத் தொழில், பெரும் இயந்திரத் தொழில்கள் ஆகியவற்றை கட்டுப்படுத்தி மக்களின் தேவைக்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்ய திட்டங்கள் வகுக்குமாறு சர்க்கார் உத்தரவிட்டனர். அதன் பிரகாரம் திட்டக்கமிஷன் தனது பூர்வாங்க யதாஸ்தை இப்போது சமர்ப்பித்திருக்கிறது. இம்மாத இறுதிக்குள் முடிவான திட்டம் வெளியிடப்படுமென்றும் இந்த அபிவிருத்திகளுக்காக வரும் 5 ஆண்டுகளில் 2000 கோடி ரூபாய் செலவிடப் படுமென்றும் தெரிகின்றது.

நாட்டின் அபிவிருத்தியினால் ஏற்படும் பலன்கள், தேசத்திலுள்ள எல்லாவகுப்பினருக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். வறுமையினின்றும், வேலையில்லாத் திண்டாட்டத்தினின்றும் அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடிய ஒரு திட்டமே நமது முதல் தேவை. நமது நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. பூரணமாக வேலையில்லாமல் இருப்பவர் பலரிருக்க அதேசமயத்தில் கைத்தறி நெசவாளர்கள் போன்றவர்களுக்கு மாதத்தில் 10 நாட்களுக்குமேல் வேலை கிடைப்பதில்லை.

இம்மாதிரி நிலையுள்ள நாட்டில் குடிசைத் தொழிலுக்கும் சிறுகைத் தொழில்களுக்கும் பிரதான்யம் அளித்து அபிவிருத்தி செய்தல் மிகவும் அவசியமாகும். நமது நாட்டில் தொழில் செய்ய குறைந்த சம்பளத்திற்கும் தயாராக தொழிலாளர்கள் பெரும்பாலாக உள்ளனர். ஆனால் தொழில்களை அபிவிருத்தி செய்யப் போதிய மூலதனம் நமக்கு இல்லை. ஆகையால் இந்த நிலையில் பெரிய மூலதனம் போட்டு தொழில்களை விருத்தி செய்வதைக் காட்டிலும் குறைந்த முதலீட்டில் அதிகப்படியான தொழிலாளர்களுக்கு வேலைகொடுக்கும் தொழில்களுக்கு பிரதான்யம் கொடுப்பதுதான் சாலச்சிறந்தது. சர்க்காரால் நன்கு வகுக்கப்பட்ட திட்டங்களின் மூலமும், கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமும் ஆங்காங்கே தொழிலாளர்களுக்குத் தேவையான மூலப்பொருள்களை கொடுத்துதவினால் தொழிலாளர்கள் தங்களது வீட்டிலேயே உற்பத்தி செய்து அந்த வட்டாரத்திலேயே அப்பொருள்களை விற்பனை செய்து தொழில் நடத்த முடியும்.

இந்நாட்டிலே ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டுமானால் பொருளாதார சமத்துவத்தையும், சமூகநியாயத்தையும், செல்வத்தில் பெரும் ஏற்றத் தாழ்வு இருப்பதை சமப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட திட்டங்கள் உடனே வகுக்கப்படவேண்டும். திட்டக்கமிஷன் தயார்செய்துள்ள திட்டப்பிரகாரம் மத்திய சர்க்காருக்கும், மாகாண சர்க்காருக்கும் சமபங்கில் பொறுப்பு சுமத்தப்பட்டிருக்கிறது. சென்னை சர்க்காரின் ஐந்துவருஷ திட்டம் சுமார் 150 கோடி ரூபாய் செலவுள்ளதாக இருக்குமென மதிப்பிடப் படுகிறது.

சென்னை மாகாணத்தில் சுமார் 1 கோடி மக்களுக்கு உணவளிப்பதும், விவசாயத்திற்கு அடுத்தபடியாக பிரதானம் வகிப்பதுமான கைத்தறித் தொழிலுக்கு இந்த

திட்டத்தில் இடம் இருக்கிறதா என்பதைப்பற்றி பின்வரும்பகுதிகளில் நாம் ஆராய்வோம்.

கைத்தறி நெசவுத் தொழிலை தனித் தொழிலாக பாவித்து, அதற்குத்திட்டங்கள் வகுக்காதது இந்த யதாஸ்தின் முக்கியமான குறைபாடாகும். ஆனால் முதல் யதாஸ்தில் (Draft outline) 113-ம் பக்கத்தில் கிராம குடிசைக் கைத் தொழில்கள்'' என்ற தலைப்பின் கீழ் கைத்தறியைப்பற்றி பொதுவாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களில் வேலையில்லா திண்டாட்டமும், போதிய ஊதியம் இல்லாமலுமுள்ள வறுமைநிலையும் உண்மைஎன மேற்படி யதாஸ்தில் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றன. ஆகையால் நல்லதிட்டங்கள் வகுத்து கிராம கைத்தொழில்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கப்பட்டு கிராமத்திலே வேலையில்லாத்திண்டாட்டம் ஒழிக்கப்படவேண்டியது மிகவும் அவசியம் எனவும் திட்டத்தில் வற்புறுத்தப் பட்டிருக்கிறது; அந்த யதாஸ்து மேலும் கூறுகிறது:

கைத்தறி நெசவாளரின் உற்பத்தி முறையும், சாதனங்களும் இன்னும் பண்டைய முறையிலேயே இருப்பதால் உற்பத்தியை பெருக்க இயலவில்லை. மக்களின் நாகரீகமும் மாறிவிட்டதால் அதற்கேற்ற புதியாக துணிகளை உற்பத்தி செய்ய நெசவாளர் முயல வேண்டும். ஆனால் தேவைக்கான மூலப்பொருளான நூல் போன்றவைகளை அவனால் ஒழுங்காகப் பெற முடிவதில்லை. போதிய பணவசதியையும், அவனுக்குத் தேவையான நூலை ஒழுங்காக தவறாமல் கொடுக்கவும் சர்க்கார் உடனே திட்டங்கள் வகுப்பது அவசியமாகும்.

ஒழுங்கான அமைப்பு (Organisation) இல்லாததாலும், உற்பத்திக்கு உள்ளூரில் அதிகமான கிராக்கியில்லாததாலும், உற்பத்திமுறைகளில் முன்னேற்றம் அல்லது மாறுதல் இல்லாததாலும், போதிய நூல் கிடைக்காததாலும், பணவசதி யில்லாமையாலும் கைத்தறி நெசவுத்தொழில் நசித்து வருகிறது. மேற்படி குறைபாடுகளை நீக்கினாலொழிய கைத்தறி நெசவுத்தொழிலை அபிவிருத்தி செய்ய இயலாது.

உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கு கொடுக்கக்கூடிய முக்கியத்துவத்தையும், ஆதரவையும் சர்க்கார் கைத்தறி நெசவுத்தொழிலுக்கும் அளிக்க வேண்டும். மேலும் உணவு உற்பத்திக்கு ஆட்சியாளர் போனஸ் கொடுக்கின்ற மாதிரி கைத்தறி நெசவுத் துணிகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்ய சர்க்கார் இன்னும் சிலவருஷங்களுக்காவது மான்யம் அளிக்கவேண்டும். இந்த முறையை ஒத்துக் கொண்டாலொழிய அதிக உற்பத்தியோ, அல்லது அபிவிருத்தி திட்டங்களோ சாத்திய மில்லை. கூட்டுறவு இயக்கங்களை சர்க்கார் அதிகமாக உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும் உற்பத்திமுறையில் அபிவிருத்திகளை கடைப்பிடிப்பது, விற்பனை செய்வது, தேவையான பொருளாதார வசதியையும் நூலையும் கொடுப்பது போன்ற வசதிகளை மாகாணத்தில் பொதுவான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படவேண்டும். மேலும் கைத்தறி நெசவு துணிகளுக்கு, உற்பத்தியாகும் இடங்களிலேயே நிரந்தர கிராக்கி உண்டாகும்படி வகைசெய்தாலொழிய வெளிநாடுகளையே நாம் என்றென்றும் நம்பியிருக்கமுடியாது. கிராமங்களிலுள்ள ஜனங்கள் தங்களது பிரதேசங்களிலுள்ள எல்லாதொழிலாளர்களுக்கும் வேலைகிடைக்கும் முறையில் நடந்து கொள்ள வேண்டுமென சர்க்கார் அவசியமானால் வற்புறுத்தலாம்.

கைத்தறி நெசவாளரின் பிரதான கஷ்டம் நூல் பற்றாக்குறைதான். சென்ற 10 ஆண்டுகளில் நெசவுத் தொழிலாளரின் அவதிக்கும் இன்னலுக்கும் நூல் பற்றாக்குறைதான் முக்கியமான

மொத்த வியாபாரம் மட்டும்.

SPECIAL பெயர் பெற்ற **M. K. V.** SAREES சேலைகள்

M. K. வேலாசாமி செட்டியார்,
ரங்கே கவுடர் வீதி, :: கோயமுத்தூர்.

எம்மிடம் 100, 80 நெ. நூல்களிலும், கோரா சில்க்கிலும்
நேரடிப் பார்வையில் தற்கால நவீன மோஸ்தரில்
பல்வேறுவித அழகான சில்க் & ஜரிகை
பார்டர்களில் கெட்டிச்சாய கைத்தறி
புடவை ரகங்கள் தயாராகின்றன.

தேவைக்கு விஜயம் செய்யவும்!

காரணம். நியாயமான குறைந்த விலைக்கு, தேவையான நூல் மாதம் தோறும் போதுமான அளவிற்கு கொடுப்பது தங்களது முதல் பொறுப்பாக ஆட்சியாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கைத்தறி நெசவுத் தொழிலுக்கு இரண்டாவது முக்கியமான தேவை; நிதி. இதை உதவ அரசாங்கம் கீழ்க்கண்ட முறைகளைக் கையாள வேண்டும்.

(அ) சிதறுண்டு கிடக்கும் நெசவாளர்களை ஓரே ஸ்தாபனத்தின் கீழ் கொண்டுவர மத்திய ஸ்தாபனம் நிறுவுதல்.

(ஆ) நிரந்தரமான நூல் விநியோகத்திற்கு ஏற்பாடு செய்தலும், தொழில் முறைகளில் நூதனமுறைகளை புகுத்துதலும்.

(இ) நீண்ட கால கடன்களும், குறுகியகாலக்கடன்களும் கொடுத்து உதவுவது.

(ஈ) முக்கியமான மூலப்பொருள்களை நெசவாளிகளுக்கு கிடைக்க அரசாங்கத்தினர் அதிகாரத்தை உபயோகப்படுத்துதல்.

மேலும் ஒவ்வொரு ராஜ்யத்திலும் சர்க்கார் காரியாலயத்தில் கைத்தறிக்காக தனிப் பிரிவு ஏற்படுத்தி அதற்காக ஒரு மந்திரியையும் நியமிக்க வேண்டும். இத்துடன் மாகாண கைத்தறி போர்டு ஒன்று நிறுவி அதன்மூலம் பொதுமக்கள் ஒத்துழைப்பை பெறுதல் வேண்டும். முடிவாக, சர்க்கார் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும். சர்க்கார் தங்களுக்குத் தேவையான சகல துணிகளை கைத்தறி நெசவு உற்பத்தியிலேயே எடுக்கவேண்டுமென்பது தங்களது திட்டமான கொள்கையாக முடிவு செய்யப்பட்டு அறிவிக்க வேண்டும்.

சில குறைபாடுகள்

கைத்தறி நெசவுக்கு அதற்குரித்தான முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. அதைத் தனித்தொழிலாகப் பாவித்து அதற்கு தனியாக ஒரு திட்டம் தயாரித்து இருக்கவேண்டும். தேசியபொருளாதார அமைப்பில் கைத்தறியின் நிலை என்ன என்பதைத் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். தற்போது பஞ்சாலைகளினால் தான் கைத்தறிக்கு போட்டி பலமாகஇருக்கிறது. கைத்தறி நெசவுக்கு எதிர்காலத்தில் இடமுண்டு என்று திட்டக்கமிஷன் கூறியிருப்பதால், மில் போட்டியினின்றும் கைத்தறியைப்பாதுகாக்க திட்டமான யோசனைகள் கூறப்படவேண்டும். சமீபத்தில் வர்த்தக மந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பேசும்போது, தனிரகங்கள் பிரத்தியேகமாகக் கைத்தறி உற்பத்தி தொழிலுக்கு ஒதுக்குதல் முடியாதென கூறியிருப்பது திட்டக்கமிஷன் சிபார்சுக்கு முரண்பாடாக இருக்கிறது. நடப்பு வருஷ பட்ஜட்டில் இந்தியசர்க்காரால் கைத்தறி அபிவிருத்தி நிதி ஒன்று நிறுவப்பட்டு அதற்கு ஐந்து லட்சம் ரூபாய் அடையாளமான்யமாக (Token grant) ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்தநிதிக்கு மத்திய சர்க்காரால் வருடந்தோறும் குறைந்த ட்சம் 1 கோடி ரூபாயும், ராஜ்யசர்க்கார்களால் ஒரு கோடியும் கொடுக்கப்பட்டு இதன் மூலம் திட்டக்கமிஷன் சிபார்சுகள் படி கைத்தறித்தொழிலுக்கு நிரந்தர ஆதரவு கொடுக்கவேண்டும்.

சென்னையில் ராஜாஜி மந்திரி சபை கைத்தறி நெசவாளர்களின் அல்லல்களை நன்குணர்ந்து அதைத் தீர்க்க தீவிர முயற்சிகள் எடுத்து வருகின்றது. கைத்தறி நெசவாளர்களின் கிளர்ச்சி அவ்வப்போது ஏற்படும் தற்காலிக குறைபாடுகளை நீக்குவதற்காக இருக்கக்கூடாது. கைத்தறித்தொழிலுக்கு நிரந்தர இடமும், நெசவாளர்களுக்கு முழு நேர வேலையும் அளிக்கக்கூடிய திட்டத்தை வகுத்து அமல் செய்ய நாம் மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும். நமது கோரிக்கைகளை அனுதாபத்துடனும் ஆதரவுடனும் ஏற்கும் ராஜாஜி அவர்கள் பிரதமராக இருக்கும் தற்சமயம்தான் நமது லட்சியத்தை அடையும் தருணமாகும். இந்த சந்தர்ப்பத்தை கைவிடாமல் அனைவரும் இம்முயற்சியில் வெற்றிகாண ஈடுபடுவோமாக.

அனைவருக்கும் எங்களின்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

மதுரை கலர்ஸ்
டையிங் கம்பெனி

19/146 சுக்கிரவாரப்பேட்டை, ★ கோயமுத்தூர்.

உத்திரவதமான கெட்டிச்சாயம் தோய்ப்பவர்கள்
மதராஸ் ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
சங்கத்தின் அங்கீகாரம் பெற்றவர்கள்.

நெசவாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் திருப்திகரமாக
நூதமான கலர்கள் கியாரண்டியாக சாயம் தோய்த்து
குறித்த காலத்தில் சப்ளைசெய்கிறோம்.

கூட்டுறவும் - நெசவாளரும்

நம் நாட்டில் கூட்டுறவு முறையில் நெசவாளர் சங்கங்கள் ஆரம்பித்து சுமார் 45 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், 1935-ம் ஆண்டுவரை அதாவது நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அனைத்தும் ஒருமத்திய சங்கத்தின்கீழ் இணைக்கப்படும்வரை அவற்றின் வளர்ச்சி அவ்வளவாக ஊக்கமளிப்பதாக இல்லை. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை இணைத்து அவற்றின் தேவைகளை நிறைவேற்றவும், அவற்றிற்கான உதவிகளைச் செய்யவும் ஆரம்பிக்கப்பட்ட சென்னைமாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், இன்று தென்கிழக்குஆசியாவிலுள்ள ஒரு பெரிய கூட்டுறவுசங்கமாக விளங்குகிறது. ஆரம்ப நிலையில் நெசவாளர் சங்கங்களின் வளர்ச்சி மிகவும் மந்தமாகவே இருந்தது. 1935-ம் ஆண்டிலே 97 சங்கங்களில், 2458 தறிகள்தான் இருந்தன. 1939-ம் ஆண்டிலே பெரும் உலகப்போர் ஏற்பட்ட காரணத்தினால் நெசவாளர் சங்கங்கள் வளரத் தொடங்கின. 1941–42-ம் ஆண்டிலே நமது மாநிலத்தில் 198 சங்கங்களில் 11604 தறிகள் சேர்ந்திருந்தன. மாநிலச்சங்கம் ஆரம்பசங்கங்களுக்குத் தேவையான நூலைவினியோகம் செய்ததோடு, அவைகள் உற்பத்திசெய்த சரக்குகளை விற்பதற்கும் ஏற்பாடு செய்தது. இதனால் மேலும் சங்கங்கள் அதிகமாக ஏற்பட்டன. 1944-45-ம் ஆண்டில் 297 சங்கங்களும் அவைகளில் 29816 தறிகளும் இருந்தன. மாநிலசங்கம் அங்கங்கே விற்பனை நிலையங்களை ஏற்படுத்தி ஆரம்ப சங்கங்களின் உற்பத்திச் சரக்கை விற்க ஏற்பாடு செய்ததோடு தேவையான நூலையும் சர்க்காரிடம் பெற்றுவினியோகித்து வந்தது. ஆரம்பசங்கங்களின் வளர்ச்சி மிகவும் துரிதமாகவே இருந்தது போர் என்ற காரணத்தால்.

1946--47-ம் ஆண்டிலே இவ்வளர்ச்சி உச்சநிலைக்குப்போவதாயிற்று. இவ்வாண்டில் 659 சங்கங்களும் அவற்றில் 85531 தறிகளும் இருந்தன. 1947—48-ம் ஆண்டில் இவற்றின் எண்ணிக்கை: சங்கங்கள் 839; தறிகள் 1,33,199 ஆகும். இச்சங்கங்களின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 62 லட்சத்து 20 ஆயிரம். இவற்றின் நடைமுதல் மூலதனம் ரூ. 202 லட்சம். அவைகளில் உற்பத்தியான சரக்குகளின் மதிப்பு ரூ. 668 லட்சம். விற்பனை ரூ. 814 லட்சம். இவைகளாக இந்த ஆண்டில் 41038 பேல் நூலை நெசவுசெய்தன. ஆனால் 1947—48 ம் ஆண்டு இறுதியில் இவைகளின் வளர்ச்சி தடைப்பட ஆரம்பித்தது.

ஏ. கே. ஞானியார்.

இவைகளின் உற்பத்தி பெரும் அளவில் இருந்தாலும் இலாபம் குறையத் தொடங்கியது. துணிக் கட்டுப்பாடு நீக்கப்பட்டதால், இதனால் துணி தேங்க ஆரம்பித்துவிட்டது. வெளிநாட்டு ஏற்றுமதிக்கு வேண்டிய முயற்சி செய்யப்பட்டதால் கைத்தறித் துணி சுமார் 1600 பேல் வரை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

கைத்தறித்துணிக்கு ஏற்பட்ட மந்தநிலைமை கூட்டுறவு இயக்கத்தை வேறுமுறையில் அமைக்கத்தூண்டுகோலாக இருந்தது. தங்களது உற்பத்தித்துணியின் அடக்கவிலை குறையவும், நூல் சரளமாகக்கிடைக்கவும் இந்தியாவிலேயே கூட்டுறவு முறையில் 11000 கதிர்களோடு கூடிய நூற்புமில் ஒன்று ரூ. 30 லட்சம் முதலீட்டோடு ஆரம்பிக்கத்திட்டமிடப்பட்டது. அரசியாலரும் தங்கள் தேவையின் ஒரு பகுதியைக் கைத்தறித்துணியாக வாங்கத் தீர்மானித்தனர். கைத்தறிகள், ஆலைகளோடு போட்டியிடுவதைத் தடுக்கச்சில ரகங்களைக் கைத்தறிகளுக்கே ஒதுக்கினர். ஆனால் இந்த நடவடிக்கை நெசவாளர்களுக்குப் பயன்படுமுன் நூல் பஞ்சம் மறுபடியும் வந்துவாட்ட ஆரம்பித்தது. நூல் குறைவாகக்கிடைத்த காரணத்தால் நெசவாளருக்குக் கூலி உயர்த்தப்பட்டு துணிவிலை உயரச் சாதகமாக இருந்தது.

ஆனால் இன்றுள்ள நிலைமையைப்பார்த்தால் கைத்தறித் தொழிலே அழிந்து பட்டுவிடுமோ என்றுகவலைப்பட வேண்டியிருக்

கிறது. இன்று கைத்தறித்துணியின் விலை இறங்கியிருக்கும் அளவு போருக்குப்பின் எந்தப் பொருளும் விலை இறங்கவில்லை. இந்த இறங்கிய விலைக்குக் கூட கைத்தறித்துணி கேட்பாரற்றுத் தேங்கி கிடக்கிறது. தேங்கியிருக்கும் துணியை விற்பனை செய்ய சென்னை அரசியலார் ஏதோ பிரமாதமான ஏற்பாடுகள் செய்யப்போவதாகச் சொன்னார்கள். ஆனால், செய்யவில்லை! நெசவாளருக்கு நிவாரணத்திட்டம் என்ற ஒரு கண்துடைப்பு திட்டத்தை அமுல் செய்யப்பட்டது. அதுவும் இன்று நடைமுறையில் சாத்தியமில்லாத - உண்மையில் நிவாரணமற்ற – திட்டமாக ஆகிவிட்டது. இந்த நிலைமையில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்படும் அல்லல் கணக்கில்லை. சங்கங்களுக்குத் தேவையான நூலும் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் அதைவாங்கப்பணமில்லை. வாங்கி உற்பத்தி செய்தாலும் சரக்கை விற்பனை செய்ய முடிவதில்லை. ஆகையால் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இப்போது ஒரு பெரும் நெருக்கடியில் சிக்கியிருக்கின்றன. இந்நெருக்கடியிலிருந்து மீளவும், நிரந்தரமான பாதுகாப்புகளோடு வாழவும் வழிவகுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையதே தவிர மற்றவர்களால் ஒன்றும் செய்யமுடியாது.

இன்றைய கூட்டுறவு நெசவுத் தொழிலின் பிரச்னைகள் பலதரப்பட்டன. இதில் முதன்மை வகிப்பது கூட்டுறவு சங்கங்களில் பெரும் அளவில் தேங்கியிருக்கும் துணிகளை விற்பனை செய்வதே. இன்று, சங்கங்களில் சராசரி தறி ஒன்றுக்கு ரூ. 100-க்குக் குறையாத மதிப்பில் சரக்குகள் தேங்கிக்கிடக்கின்றன. அது அநேகமாக இரண்டு மாத உற்பத்திக்கு சமமாகும். இச்சரக்குகள் தேங்கிக்கிடப்பதற்கான காரணங்களை ஆராய்வது அவசியம்.

சங்கங்களுக்குப் போதுமான நூல் கிடைக்காமல், வெளியிலுள்ள தறிகளுக்கு கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதால் அதிகமான நூல் நியாயமான விலையில் கிடைப்பதால் வெளியில் உற்பத்தி பெருகியதோடு வெளிவியாபாரிகள் கடனுக்குச் சரக்குகளை விற்பனை செய்ததால் வியாபாரிகள் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்வதை விட்டுவிட்டு, வியாபாரிகளிடம் வாங்குவதையே பெரிதாகக்கருதி வாங்கிவருகிறார்கள். அடுத்த முக்கியமான காரணம் சங்கங்களுக்குக்கிடைக்கும் குறைந்த நூலிலும் வேண்டிய எண்ணுள்ள நூல்கள் கிடைக்காததால், சரக்கின் தரமானது சீர்கெட்டுப் போகிறது. தனிப்பட்ட நெசவாளி தனக்கு வேண்டிய எண்ணுள்ள நூலை வாங்கி உற்பத்தி செய்வதாலும் அவனுடைய சரக்கு கூட்டுறவு சங்கச் சரக்கைவிட நயமாக இருப்பதாலும் வியாபாரிகள் வெளியில் உற்பத்தியானசரக்கையே வாங்கி விற்கப்பெரிதும்விரும்புகிறார்கள்.

சங்கங்களுக்குத் தேவையான நூல் ஒழுங்காகவும், குறித்த வேளைகளிலும் கிடைக்காமல் போவதால் அந்தந்த நேரங்களில் இருக்கும் கிராக்கிக்குத் தகுந்தபடியான சரக்குகளை உற்பத்தி செய்யமுடியாமல் போகிறது. சங்கத்திற்குக்கிடைக்கும் குறைந்த அளவு நூலுக்கு வெளியில் கொடுப்பதைவிட அதிகமானகூலி கொடுப்பதாலும் சரக்கின் அடக்கவிலை உயர்ந்துவிடுகிறது. இவைகளே இன்றைய சரக்குத்தேக்கத்திற்கு முக்கிய காரணங்களாகும்.

இன்னொரு பொதுவான — ஆனால் மிகமுக்கியமான காரணம் ஆலைத்துணிகளின் கடும்போட்டியாகும். ஆலைத்துணி குதிரைக்கொம்பாக இருந்தகாலம் போய், இப்பொழுது எங்குபார்த்தாலும் கேட்பாரற்றுக் கிடப்பதால் பொதுமக்களின் கவனம் அதன்பால் திருப்பப் பட்டு கைத்தறித்துணி கேட்பாரற்ற நிலைக்குத் தாழ்ந்துள்ளது.

இன்றைய நிலைமையில் கூட்டுறவு நெசவாளர்கள் பெரும் அள

ஸ்ரீ கிருஷ்ணா டையிங் பாக்டரி

அவிநாசி ரோடு — பத்மாவதிபுரம் — திருப்பூர் P.O.

எங்கள் சாயச்சாலையில் 20 நெ. முதல் 100 நெம்பர் வரை நூல் & பட்டுகளுக்கு உத்திரவாதமான கெட்டிச்சாயம் டார்க் & லைட் ஷேடுகளில் திறமைமிக்க ஆட்களைக்கொண்டு போட்டுத்தருகிறோம்.

அனைவரின் நல்லாதரவையும், ஒத்துழைப்பையும் நாடுகிறோம்.

L. மாணிக்கராஜு, உரிமையாளர்.

வில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் குறைந்த அளவு வேலைகூடக்கொடுக்க முடியாததால் பாங்கியில் வாங்கியிருக்கும் கடன் தொகைக்கான வட்டி ஏறுவதோடு, இதனால்வரும் நட்டத்தால் கடைசியில் அதன் உறுப்பினர்களே பாதிக்கப்படுகிறார்கள் வேலையில்லாதிண்டாட்டம் பெருகிவிட்டதால்நெசவாளர்குடும்பங்களில் பட்டினிக்குரல் கேட்க ஆரம்பித்துவிட்டது. இன்று ஏறியிருக்கும் விலைவாசிகள் நெசவாளரை நிலைகுலையச் செய்து வருகின்றன. விலைவாசி ஏறும்போது வேலையின்றித்தவிக்கும் நெசவாளருக்கு விமோசனமளிக்க ஒருவரும் முன்வருவதில்லை. நிவாரணத்திட்டம் என்ற பெயரால் செய்யப்பட்ட உதவிகள் காலத்திற் கொவ்வாதனவாய்ப் போய் விட்டன. நிவாரணத்திட்டத்தில் உற்பத்தியான சரக்குகளும், முன்னாலேயே உற்பத்தியான சரக்குகளும் சேர்ந்து இன்று பெரும் தலைவலியை உண்டாக்கியுள்ளன. இந்நிலைமாற வேண்டியஏற்பாடுகளை உடனடியாக செய்யப்படா விட்டால், நெசவாளர்சம்பந்தப்பட்டமட்டில் கூட்டுறவு இயக்கம் பயனற்றதாகத் தொடங்கிவிடும் என்று எச்சரிக்கவேண்டியிருக்கிறது. எந்த நன்மையைக்கருதி நெசவாளர்கள் பெரும் அளவில் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்தார்களோ, அதற்கு நேர்எதிரான பலன்களை இன்று அனுபவிக்கிறார்கள். ஒரு காலத்தில் அவர்களடைந்த ஒரு சிறு வசதிகளுக்காக இப்போது இவ்விழிநிலையில் அவர்கள் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்று கைத்தறி நெசவாளரின் கவலையைப்போக்க எவரும் முன்வரவில்லையானால் கைத்தறித் தொழில் நம்நாட்டில் இனி வளராது — அழிந்துபடும். இந்த நிலையைப்போக்க பொதுமக்கள், அரசாங்கத்தார் ஆகியோர் முயலவில்லையானால் நம்நாட்டில் எந்த கைத்தொழிலும் இனி வளர்ச்சியடையாது. கைத்தறிக்கு வந்துள்ளநிலை இதரகைத்தொழில்களுக்கும் பரவலாம். அன்று அத்தொழில்களைப் பற்றியும் இவ்வாறான கவனிப்பாரற்ற நிலைமை ஏற்படலாம். ஆகையால் கைத்தறித்தொழிலைப் பாதுகாக்க ஒருமித்த ஒத்துழைப்பு ஏற்படாத வரை நம் நாட்டில் கைத்தொழில்கள் வளர்ச்சியடையாது.

கைத்தறித்தொழில் சம்பந்தமாகப் பொது மக்களுக்குள்ள பெரும் கடமை தங்கள் துணித் தேவையில் பெரும்பாலும் கைத்தறித் துணியையே வாங்குவதுதான். கைத்தறித் துணியின் விலை சற்று அதிகமாக இருந்தது கூட இன்று மிகவும் குறைந்து விட்டதால் கைத்தறித்துணி வாங்குவதில் விலையுயர்வுப் பிரச்னையே பெழுவதில்லை. ஆகையால் கைத்தறியாளர்கள் பொதுமக்களை வேண்டிக்கொள்வது இந்த தீபாவளிப் பண்டிகைக்காவது எல்லோரும் கைத்தறித் துணியையே வாங்குங்கள் என்பதுதான். இதனால் இன்றுள்ள சரக்குகளில் ஒருபகுதி விற்பனையாகச் சாத்தியமாகும்.

அரசாங்கத்தாரின் கடமை தான் அளவிடலரியது. மத்திய, மாநில அரசாங்கத்தார்கள் தனித் தனியே தங்கள் கடமைகளை கைத்தறியாளர்பற்றி நிறைவேற்றினால் இன்றைய நிலைமை ஒரு அளவு மாறுதலடையும். நெசவாளரைக் கவ்வியிருக்கும் கிரகணம் நீங்கும். மத்திய அரசாங்கம் உடனடியாகச் செய்யவேண்டியது; நம் மாநிலத்தில் தேங்கியிருக்கும் கைத்தறித் துணி விற்பனையாகும்வரை நம் மாகாணத்திற்குள் இதர இடங்களிலிருந்து ஆலைத்துணி இறக்குமதியாவதைத் தடைசெய்ய வேண்டும். அத்தோடு நம்மாநிலத்திலுள்ள நெசவுஆலைகளையும், தேங்கியிருக்கும் கைத்தறிரகங்களை உற்பத்தி செய்வதைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் தடைசெய்து வேறு ரகங்களை உற்பத்திசெய்யச் சொல்லவேண்டும்.

கைத்தறிகளுக்குப் போதுமான நூலை ஒதுக்குவதோடு

ஸ்ரீ முருகன் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி, விற்பனைச் சங்கம் லிமிடெட் No. K. 1164.

ராக்கியாபாளையம் P.O. ★ அவினாசி தாலுக்கா.

எங்கள் சொஸைட்டியில் 20, 2௬, 30 நெ. நூல்களில் வேஷ்டி, துண்டு, காடாபீஸ் ரகங்களும், கெட்டிச்சாய சேலைகளும் தயாரிக்கப்படுகின்றன.

ஏற்றுமதியாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு.

விவரங்களுக்கு எழுதக்கோருகிறோம். S. சென்னி முதலியார், தலைவர்.

வேண்டாத நூல்களை கைத்தறியாளர்களிடம் திணிப்பதை நிறுத்தவேண்டும். இன்று கைத்தறிக்கு ஒதுக்கப்படும் நூலின் விலை நெசவாலைகளுக்குக் கிடைக்கும் நூல்விலையைவிட பலமடங்கு அதிகமாக இருப்பதால் கைத்தறிக்கு ஒதுக்கும் நூலின் விலையைக் குறைக்கவேண்டும். அல்லது அந்த அளவுக்கு கைத்தறிகளுக்கு மானியம் அளிக்கவேண்டும். துணிரகங்களைப்பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரித்து அந்தந்த ரகங்கள் எங்கெங்கு செலவாகும் என்பதையும் அவ்விடங்களிலுள்ள விலை நிலவரம் பற்றியும் ஆராய்ந்து சரக்குகளைத் தாங்களே கொள்முதல் செய்து விற்பனைக்கு ஏற்பாடுசெய்யவேண்டும். கூட்டுறவு சங்கங்களில் தேங்கியிருக்கும் துணிகளை மாநில கூட்டுறவு சங்கம் மூலமாகக் கொள்முதல் செய்து விற்பனைக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

இனி இதுபோன்ற கஷ்டநிலைமை ஏற்படாதிருக்க நிரந்தரமான வசதிகள் கைத்தறிகளுக்குச் செய்து கொடுக்கவேண்டும். இதுபற்றி நமதுமாநில முதலமைச்சர் இராஜாஜி கூறியுள்ள ஆலோசனைகளை வரவேற்கிறோம். அவரின் ஆலோசனைகளை ஏற்க மத்திய அரசாங்கம் மறுத்தாலும் இந்த நாட்டில் கைத்தறி நெசவுத் தொழில், தேசப் பொருளாதார அமைப்பில் முக்கிய பங்கு வகிப்பதால் அதை மத்திய அரசாங்கம் நெடுநாள்வரை புறக்கணிக்கமுடியாது. எவ்வளவு விரைவில் கைத்தறியாளரைப்பற்றிக் கவனம் செலுத்த மத்திய அரசாங்கத்தார் முன்வருகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு நம் நாட்டிற்கு நன்மை என்று சொல்ல விரும்புகிறோம்:

மேலேகண்ட பொதுவான வசதிகள் செய்துகொடுப்பதோடு கூட்டுறவு நெசவாளர்களுக்குச் சில தனிச் சலுகைகள் தரவேண்டியது மாநில அரசாங்கத்தின் கடமை எனவற்புறுத்துகிறோம். கூட்டுறவு இயக்கம் நெசவாளர்களை அதிகமாகச் சேர்த்துக்கொண்டது சமீபத்தில்தான். அதனால் பல நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இன்னும் ஆரம்பநிலையில் இருப்பதால் பலவிதபொருளாதாரக் கஷ்டங்களால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கு அவ்வப்போது தேவைப்படும்பொழுது குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்து உதவவேண்டும். நெசவாள உறுப்பினர்களுக்கு நிரந்தரமான வேலையும், நியாயமான கூலியும் கொடுப்பதற்கு உத்திரவாதம் அளிக்கும் முறையில் தேவையான ரகநூல்கள், போதுமான அளவு விநியோகிக்கவேண்டும். சங்கங்களில் உற்பத்தியாகும் சரக்குகளை வெளியிடங்களில்விற்பனைசெய்வதற்கும் ஏற்றுமதிக்கும் போதியவசதிகள் செய்து கொடுக்கவேண்டும். கூட்டுறவு சங்கங்களுக்கு மில்களிலிருந்து ஒதுக்கப்படும் நூல் உடனுக்குடன் கிடைப்பதில்லை. இதைக்கவனித்து மில்களை உடனுக்குடன் நூல் விநியோகம் செய்யுமாறு சர்க்கார் தூண்ட வேண்டும்.

மேலேகண்ட குறைந்தஅளவு சலுகைகளையாவது கூட்டுறவு சங்கங்களுக்குசெய்துகொடுத்தால் தான் நம் நாட்டில் நெசவாளர் கூட்டுறவு இயக்கம் தழைத்தோங்கும். ஒரு நாட்டில் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியடைந்தால் அந்த நாட்டில் மக்கள் ஆட்சி வளர்ச்சியடையும். நம் நாட்டில் கூட்டுறவு இயக்கம் இதர துறைகளில் அடைந்திருக்கும் நல்ல நிலையை, நெசவாளர்கள் — இந்த நாட்டிலே விவசாயிக்கு அடுத்த படியாக உள்ளவர்கள் — வரையில் கூட்டுறவு இயக்கம் உறுதிப்பட்டு எங்குபார்த்தாலும் கூட்டுறவு முறை வெற்றியடையச்செய்ய வேண்டியது மாநில அரசியலாருடைய கடமையாகும்.

“காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப்பெரும்” என்ற வள்ளுவர் வாக்குக்கு ஏற்றதாகும். அரசியலாரின் நடவடிக்கைகளை அண்மையிலிருந்து பார்ப்போம்!

மிகக் குறுகிய காலத்தில்
பிரமிக்கும் முன்னேற்றம்!

- சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கப் பிரதம நிர்வாகிகளாலும், திருவாங்கூர்—கொச்சி ராஜ்ய சர்க்கார் குடிசைத் தொழில் அபிவிருத்தி போர்டாராலும் நேரில் பார்த்துப் பெரிதும் வியந்து பாராட்டப்பட்டது.
- ராஜ்ய நெசவாளர் கூட்டுறவு சங்கம், மற்றும்பல நெசவாளர் பிரதம கூட்டுறவு சங்கங்கள், வர்த்தகர்கள் ஆகியோரின் திருப்திக்கேற்ப கைத்தறி, பவர்லூம் & மில் துணிகளைச் சீட்டியாக புத்தம்புது மோஸ்தர்களில் மில் பிரிண்ட் செய்தும், பாலிஷ்செய்தும் அனுப்பித்தருகிறோம்.

மற்றவர்களின் தேவையையும்
பூர்த்தி செய்து தருவதற்கு தயாராயிருக்கிறோம்

விவரங்களுக்கு :

M. & C. பிரிண்டிங் மில்ஸ்,
தபால் பெட்டி நெ. 61, ஈரோடு.

குடிசைக் கைத்தொழில்களை வளர்ப்பதன் மூலம் மக்களிடையே வளர்ந்துவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தவிர்க்க முடியுமென இக்கட்டுரையில் வலியுறுத்தப்படுகிறது.

கைத்தொழில்கள் ஏன்?

நாகரீகயுகத்திலே, இயந்திரங்கள் ஆயிரக்கணக்கில் சாமானங்களை செய்து குவிக்கும் போது, பழங்கால வழக்கமாகிய தனிப்பட்ட மனிதர்கள் குக்கிராமங்களில் இருந்து சாமானங்கள் உற்பத்தி செய்வது அவசியமா? அம்மாதிரி சாமானங்கள் உற்பத்தி செய்யப்பட்டால் அது உயர்ந்த தரமாக இருக்குமா? குறைந்த விலைக்கு மக்களுக்கு கிடைக்குமா? அனாவசியமாக வேலைநேரம் வீணாக்கப்படுகின்றதே என்ற பல பிரச்னைகள் கிளப்பப்படுகின்றன, இதுபற்றிய கொள்கைகள்யாவும் இந்த வாதங்கள் சரியானவை தானா என்கின்ற ஆராய்ச்சிக்கு இடமுண்டாக்கி விடுகின்றன.

இயந்திரத் தொழில் உற்பத்தியில் சில தொழிலாளர்களே வேலை செய்தாலும், நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இயந்திர உதவியின்றி செய்யும் அளவு சாமான்களைச் செய்து விடுகிறார்கள். ஜனங்களுக்கு அதிகமாக சாமான்கள் வாங்குவதற்கு கிடைக்கின்றது. ஆயின் சாமான்களை வாங்க ஜனங்களுக்கு சக்தி இருக்கிறதா வென்று கவனிக்கவேண்டியது அவசியம். மக்களுக்கு வாங்கும் சக்தி இருந்தால்தான் இயந்திர உற்பத்திப் பொருள்கள் விற்பனையாகும். மக்களுக்கு பொருள் வாங்கக் கூடிய சக்தி அவர்களுக்கு ஊதியம் இருந்தால் இருக்கும். அதாவது அவர்கள் வேலை செய்து சம்பளமோ அல்லது பொருளோ பெறக் கூடியநிலையில் இருக்கவேண்டும்.

ஆக இயந்திரப் பொருள்கள் விற்பனைக்கும் தேசத்தில் எல்லோருக்கும் வேலை கொடுப்பது அவசியமென்றாகிறது. இந்திய நாட்டில் வேலையில்லாமல் இருப்பவர்களும், முழுநேர வேலையில்லாமல் விவசாயத்துறையில் ஒரு அளவு வேலைசெய்து மற்றநேரத்தை சோம்பலில் கழிப்பவரும் அதிகமாக உள்ளனர். இவர்கள் வேலைசெய்யாமல் இருப்பது தேசத்திற்கு பொதுவாக நஷ்டமே. தேசத்தின் பொருளாதாரம் மொத்தத்தில் எவ்வித ஆட்சி இருந்தாலும் ஒன்றுதான். ஆக தொழில் இல்லாமல் வீணாக உண்டு கழிப்பவர் இத்தேசத்தில் இருப்பதுகூடாது. அது தேசிய நஷ்டம் என்றாகின்றது.

அடுத்தபடியாக உலக நாடுகளிலே இங்கிலாந்து, ஜப்பான் ஆகிய இருநாடுகளுடையபொருளாதார வளர்ச்சியை கவனித்தோமென்றால் அவையிரண்டும் கச்சாபொருள்களை வெளிநாடுகளிலிருந்து வாங்கி இயந்திரப் பொருள்கள் உற்பத்திசெய்து பின்தங்கியுள்ள ஆசிய நாடுகளிலே லாபத்திற்கு விற்று வருகிறார்கள். இந்த விற்பனையின் போட்டியில் தங்கள் சாமான்களை விற்க சில தனிப்பட்ட இடங்கள் வேண்டுமென்பதற்காக இங்கிலாந்து இந்தியா, இலங்கை பர்மா முதலிய தேசங்களையும், ஜப்பான் சீனா தேசத்தையும் படைஎடுத்து அடிமையாக்கின. இன்றையநிலையில் இங்கிலாந்தின் பொருளாதாரமும், ஜப்பானுடைய பொருளாதாரமும் மிக சிக்கலான நிலையில் உள்ளன. காரணம் உலக நாடுகளில் இயந்திரப் பொருள்களை விட கச்சாப் பொருள்கள் விலையேறிவிட்டதால் இரண்டு தேசங்களும் அதிக வேலைசெய்தும் சரியான லாபம் இல்லை. உள்நாட்டிலே கச்சாப் பொருள்களை அதிகரிக்கவேண்டும் அல்லது உள்நாட்டில் உள்ள கனிப்பொருள்களாகிய இரும்பு முதலியவற்றைக்கொண்டு கன இயந்திரங்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யவேண்டும். முன்னைப்போல துணிஉற்பத்தி போன்ற லேசான இயந்திரத்தொழில்கள் இலாபகரமாக இல்லையென்று இப்பொழுது உணர்கிறார்கள்.



நா. மகாலிங்கம், B.Sc., M.L.A.

சிறிய நாடுகளாகிய இங்கிலாந்தும், ஜப்பானும் இம்மாதிரி அனுபவம் பெற்றால், மிக அதிக ஜனத்தொகை கொண்ட இந்திய

நாடுஎவ்வாறு இருக்கவேண்டும். நூல்மில்கள், சணல் மில்கள் இதுபோன்ற லேசான இயந்திரத் (light Industris) தொழிற்பெருக்கினால் கச்சாப் பொருள்களின் உற்பத்தி உள்நாட்டில் இருப்பது போராமல் வெளிநாடுகளில் வாங்க நேரிடுகிறது. இப்போதுள்ள மில்களுக்கே பாகிஸ்தானிலும், அமெரிக்காவிலும் உள்நாட்டு விலையைவிட அதிகம் கொடுத்து வாங்குகிறோம். தவிர இத்தொழில்களால் நாட்டின் எவ்வளவு மக்களுக்கு வேலை கிடைக்குமென்று எண்ணினால் மிகக் குறைவாக இருக்கும். உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை விற்க எந்த வெளிநாடுகளை நாம் அடிமையாக்க முடியும்?

அமெரிக்காவிலே பெரும்தொழில்கள் பல உள்ளன. மோட்டார் உற்பத்தி, ஆகாய விமான உற்பத்தி; கப்பல்கள் மேலும் பல பொருள்கள். இவை பெரும் அளவில் செய்யப்படுகின்றன. இவை எங்கே விற்பனையாகிறதுயென்று கணக்கெடுத்தோமென்றால் 80% சத விகிதம் உள்நாட்டிலேயே தான் செலவாகின்றன. வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவது மிகக் குறைவு. அதாவது அமெரிக்க நாட்டில் ஜனங்களுக்கு வாங்கும் சக்தி அதிகம். அதனால் நிறைய பொருள்களை வாங்கமுடிகின்றது. இக் காரணங்களால் தான் நாம், உள்நாட்டில் இயந்திர வளர்ச்சி பெருக-மக்களின் வாங்கும் சக்தி அதிகமாயிருக்க-அனைவருக்கும் சம்பாதனை கொடுக்கக் கூடிய சிறிய தொழில்களைப் பெருக்க வேண்டுமென்ற முடிவுக்குவர வேண்டியிருக்கிறது.

ஆக தேசமக்கள் அனைவருக்கும் சம்பாதனை கொடுக்கக்கூடிய தொழில்கள் யாவை? தேசத்தில் பெரும்பாலான 80 சத விகிதம் மக்கள் லட்சக்கணக்கான போக்குவரத்து வசதியில்லாத கிராமங்களில் வசித்து வருகிறார்கள். கல்வி அறிவில்லாமல், தொழிலில் தேர்ச்சியில்லாமல் இருப்பவர்கள் அனந்தம். ஆக பிரச்னை மிகவும் கடினமானதாகின்றது. இம்மாதிரிக் கடுமையான சிக்கலுள்ள பிரச்னைக்கு நிவாரணமாகத்தான் மகாத்மா காந்தியடிகள் இராட்டையைப் புதுப்பித்து கதர் இயக்கத்தை ஆரம்பித்தார். எந்த கிராமத்திலும் இராட்டை செய்யத் தச்சனும் அங்கேயே விளையும் பருத்தியும், பரம்பரையாக நூற்கும் வழக்கமும் இருக்கும். இல்லாவிடினும் இவற்றைப் பழக்கப்படுத்திக் கொள்வது சிரமமும் இல்லை. இதுபோல கிராமத்திலேயே விலையாகக்கூடிய பொருள்களை, கச்சாப்பொருள்களைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய தொழில்கள் கைத்தொழில்களாக விஸ்தரிக்க ஏற்றவை. கிராமங்களிலே கிடைக்கக்கூடிய மூலப்பொருள்கள் விவசாய மூலப்பொருள்கள்தான். பருத்தி, எண்ணை வித்துக்கள், சணல், நெல், முதலியன. ஆக மக்களின் ஆடை, உணவுக்கு ஏற்ற எண்ணை, உபயோகிக்கும் சணல் பொருள்கள் இவைகளின் உற்பத்தி குடிசைத் தொழில்களுக்கு ஏற்றவையாகின்றது.

நாம் சாப்பிடும் உணவாகிய அரிசிகூட தற்போது இயந்திரத்தின்மூலம் அரைக்கப்பட்டு சத்து குறைவதுடன் தொழிலும் குறைகின்றது. அதையும் கைக்குத்தல் மூலமாகச் செய்தால் அதிகமான மக்களுக்கு கிராமப்புரங்களில் வேலைகிடைக்கும்.

கிராமக் கைத்தொழில்களுக்கு சௌகரியமாயிருக்கும் ஆடை உற்பத்தி, எண்ணை உற்பத்தி, கைகுத்தல் அரிசி போன்ற தொழில்களிலே (light Industris) என்று சொல்லக்கூடிய லேசான இயந்திரத் தொழில்கள் தலையிடாமல் செய்வது அவசியமாகின்றது. (நூல் மில்கள், எண்ணை மில்கள், நெல் அரைக்கும் மில்கள்) இவ்வாறு தடை செய்யப்பட்டால் இவற்றிற்கு உபயோகப்படும் மின்சாரம் மற்ற தொழில் வளர்ச்சிக்குப் பிரயோசனமாக இருக்கும்.

எங்களின் வாடிக்கையாளர்களுக்கு
தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

சாயங்களில் சிறந்தது

C&R சாரி & ராம் C&R

சாயங்களே

ஒரிஜினல் ஜெர்மன் பாக்கிங்கில் இண்டாந்தரின் கலர்கள், நெப்தால், மற்றும் டயரக்ட், பேசிக் சல்பர், அலிசரைன் முதலிய சாயங்களும் கெமிகல்சுகளும் கிடைக்கும்.

கிராக்கிகள் ஆர்டர்கள் சரியாகக் கவனிக்கப்படும்.

எஸ். வாசன் & கோ.,
ஸ்டாக்கிஸ்ட்: சாரி & ராம்,
21/209 ரங்கே கவுடர் வீதி,
கோயமுத்தூர்.

கனிப் பொருள் களாகிய இரும்பு முதலியவைகளை உபயோகிக்கக்கூடிய தொழிற்சாலைகளில் மின்சார உதவியும் இயந்திரங்கள் உதவியும் அவசியம் தேவையாக உள்ளது. அத்தொழில்கள் கூட தற்காலத்தில் மின்சாரசக்தி இருப்பதால் கூடிய அளவில் பல இடங்களில் சிறு சிறு தொழிற்சாலைகளாக அமைப்பது நகரங்களில் தொழிற்சாலைகள் பெருகி அதனால் ஏற்படும் சிரமங்களைக் குறைக்கும். இந்த அடிப்படையான தவிர்க்கமுடியாத காரணங்களை ஒட்டித்தான் ராஜாஜி அவர்கள், வேஷ்டி, புடவை உற்பத்தியில் நூற்பு ஆலைகள் ஈடுபடக் கூடாது என்று சொல்கிறார். இந்தக் கொள்கை தற்காலம் இருக்கும் தறிகாரர்களுக்கு பாதுகாப்பு அளிக்குமேயொழிய தேசத்தில் இருக்கும் வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுக்காது. ஆக பூரணமாக உடை உற்பத்தியைப் பரவலாக்கி கைத்தொழில்களின் ஏகபோக உரிமையாக்கினால்தான் நம் தேசத்தின் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையை தீர்க்கமுடியும்.

இதுபற்றிதீர்க்கமான சிந்தனை தேவை. சுயராஜ்யத்திற்கு பிறகு கதர் எதற்கு என்ற வாதம் அடிபடும் நாள் இது. இந்த வாதம் என் மனதிலும் கூட சில நாட்கள் இருந்தது உண்டு. ஏனெனில் கதர் பக்தி காந்தியடிகளின்பேரில் கொண்ட அபிமானத்தால் ஏற்பட்டதும் ஒருகாரணம். அவருடைய கொள்கையை சரியென்று கடைபிடித்ததுதவிர, சரி தப்பென்று எண்ணும் சுபாவம் அவர் காலத்தில் ஒரு சிலரைத்தவிர மற்றோருக்கு இருந்ததில்லை. காந்தியடிகள் மறைவுக்குபின் அவருடைய கொள்கைகளை நம் அறிவுத்திராசுக்கு வேலைகொடுத்து நிறுத்த வேண்டியது அவசியமாகின்றது. ஏனெனில் அபிப்பிராய வித்தியாச முள்ளவர்களை மாற்ற நம் கொள்கையில் நமக்கு திடநம்பிக்கை வேண்டும். இந்திய மக்களின்குடிசைத்தொழில்பற்றிய எண்ணம் சரியென்று சமுதாயத்தின் நலம் கருதி ஆலோசிப்பவர்கள் நிச்சயமாக அறிவார்கள்; ராஜாஜி ஒரு அளவுக்கு இப்பிரச்சனையை மக்கள்முன் கொண்டுவந்துள்ளார் என்பதை, பல துறைகளிலும் இது வளரவேண்டும். அதற்கு மக்கள் சிந்தனையும், அறிஞர்கள் ஆலோசனையும் அவசியம். ஆக கைத்தொழில்கள் ஏன்? என்பதை எண்ணிப்பாருங்கள். ★

குற்றமென்ன?

சு. சென்னியப்பன்.

பாலின்றித் தாயின் முகம்
பார்த்து ஏங்கும்
பாலகனின் நிலைகாணச்
சகியாத் தாயார்
நூலின்றித் தூங்குகின்ற
தறியைப் பார்ப்பாள்
நுண்பொருளை அறிந்துகொண்ட
கணவன் கண்கள்
சாலிசெய்யும் சர்க்காரைப்
பார்க்கும்; சர்க்கார்
சங்கோலிக்கும் ஆலைகளைப்
பார்க்கும்; பின்னர்
போலியின்றி நாள்தோறும்
பஜ கோவிந்தம்
பொருளுணர்ந்து பாடுங்கள்
என்றுரைக்கும்
கூலியென்ன கொடுக்குமிந்தச்
சர்க்கார் அந்த
கோவிந்தன் நாமமதைப்
பஜிக்க என்றே
வேலீயற்ற பயிர்போன்ற
நெசவு காரன்
வேதனையாற் கேட்பதிலே
குற்ற மென்ன?

□ □ □

மானமுடன் நெய்தொழிலைப்
பேணிநாட்டின்
மானமதைக் காத்துவந்த
நெசவாளர்கள்
ஊனமின்றித் தொழில்செய்ய
வகையிழந்து
உள்ள பொருள் அத்தனையும்
விற்று வாழ்வைத்
தானமது செய்து விட்டு
வீதி தோறும்
தலைகுனிந்து சுற்றுகின்றார்,
ஆழ்வோர் சொல்வார்
"போனவுடன் கூலி நட
ரோடு போடப்
பொழுதிரவாய் உழைத்திடப்போ
அணைக்கட்டுக்கு
மோனமுடன் உற்பத்தி
தனைப் பெருக்கு
முனகாதே முது கெலும்பு
நீங்க" வென்று
ஞான முள்ள நெசவாளர்
இதனைக் கேட்டு
நற்புரட்சி செய்வ தானால்
குற்ற மென்ன?

□ □ □

நெசவாளர் துயர் துடைப்போம்
என்பர் இங்கே
நிதி வசதி இல்லை யென்பர்
இன்னோர் பக்கம்
கச கசென்று பேசாதீர்
நேரிற் சென்று
கவனிப்போம் என்றிடுவர்
செய்தித் தாளில்
பிசகாது நடக்குமினிச்
சர்க்கார் என்று
பேதைமனம் கொண்ட
நெசவாளர் நம்பி
நிசவாழ்வை எதிர்நோக்கிக்
காத்திருப்பர்
நெடுங்காலம் கடந்துசெல்லும்
பயனிராது
விசப்பாம்பின் கொடிய இந்தச்
சர்க்காரால் நம்
வேதனைகள் மாளாது
என்றெழுந்து
கசப்பான வாழ்க்கைதனை
மாற்றுதற்கே
கடும்புரட்சி செய்வதனால்
குற்ற மென்ன?

சரோஜினி டையிங் பேக்டரி

(சாயத் தொழிற்சாலை)

பத்மாவதிபுரம், ★ **திருப்பூர் R. S.**

பிராஞ்சு : திருப்பூர் சரோஜினி டையிங் பேக்டரி, S. S. கோவில் வீதி, பொள்ளாச்சி.

எங்கள் சாயச்சாலையில் திறமைமிக்க வேலை ஆட்களைக்கொண்டு இண்டாந்தரின், நெப்தால், சல்பர் இன்னும் எண்ணற்ற கண்ணைக் கவரும் நூதனமான பல கலர்களில் நூல் & பட்டு முதலிய ரகங்களுக்கு உத்திரவாதமான கெட்டிச் சாயங்கள் போட்டுத் தருகிறோம்.

கோவைஜில்லாவில் பலநெசவாளர்கூட்டுறவு சங்கங்களுக்கு தொடர்ந்து நீண்டகாலமாக நாங்கள் கெட்டிச்சாயம் போட்டுக்கொடுத்துவருகிறோமென்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம்

எங்கள் சாயச்சாலையை மதராஸ் ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தார் அங்கீகரித்துள்ளார்கள்.

M. V. ராமசாமி செட்டியார், ★ *T. குப்புசாமி செட்டியார்,*

உரிமையாளர்கள்.

சீரநாய்க்கன்பாளையம் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சொஸைட்டி லிமிடெட் NO. K. 1136.,

(R. S. புரம்) **சீரநாய்க்கன்பாளையம், P. O.** **(கோவை ஜில்லா)**

ரிப்பன்	3", 4"
ஜரிகை கராச்சி	1"
ஜரிகை பைப்பிங்	1"
ஆர்ட்சில்க் பைப்பிங்	1"
ஜரிகைகோடிபார்டர்	1"
சில்க் கோடி பார்டர்	1"

உயர்ந்த நவீன ரக கைத்தறி சேலைகள்!

●

ஆகிய இந்த எழில்மிக்க ஜரிகை & ஆர்ட்சில்க் பார்டர்களில் 100, 80 நெ. நூல்களிலும், கோரா சில்க்கிலும் டார்க் & லைட் கலர்களில் 5, 5½, 6, 7, 8, 9 கெஜங்களில் சேலை ரகங்கள் சரசமான விலையில் நாங்கள் தயார் செய்து வருகிறோம்.

●

நம் நாட்டு கைத்தொழிலை ஊக்குவித்து கூட்டுறவாளர்களுக்கு ஆதரவு கொடுங்கள்.

அனைவருக்கும் எங்களின் உளமார்ந்த தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

A. மருதாசலம் செட்டியார்,

தலைவர்.

காந்தியடிகளின் பிரதானசீடர்களில் முக்கியமானவர் ஆச்சார்ய வினோபாபாவே. இந்தியாவின் நிலப்பிரச்னையை 'பலாத்காரமற்ற முறையில் தீர்ப்பதற்காக' அவர்தொடங்கியஇயக்கம் பூமிதானஇயக்கம் என்று அழைக்கப்படுகிறது. ஆச்சார்யா வினோபாபாவே கால் நடையாகவே நாடு முழுதும் சுற்றி தேவைக்குஅதிகமாக நிலம் படைத்தோரிடமிருந்து நிலத்தை தானமாகப் பெற்று அதை நிலமற்ற விவசாயிகளிடம் விநியோகித்து வருகிறார். அவருடைய இயக்கத்தைப்பற்றி பல்வேறு அரசியல் கருத்து கொண்டோரும் பல்வேறு அபிப்பிராயம் தெரிவித்து வருகிறார்கள்.

திரு ஸ்ரீமன்நாராயண அகர்வால் எம்.பி. காந்தீயப் பொருளாதார நிபுணர் எனக்கருதப்படுபவர். அவர் ஆச்சார்யா வினோபாபாவேயின் இயக்கம் பற்றி எழுதியுள்ள கட்டுரை ஒன்றின் சுருக்கத்தையே இங்கு நம் நேயர்களுக்கு தருகிறோம்.

ஸ்ரீ வினோபாஜியின் பூமிதான இயக்கம்.

இந்தியாவின் அரசியல்மைப்புச்சட்டம், அனைவருக்கும் உழைப்பதற்கும், கண்ணியமான வாழ்க்கைத்தரத்தைப் பெறவும், ஜீவனத்திற்குத் தேவையான ஊதியத்தைப்பெறவும் தக்க ஏற்பாடுகளை மேற்கொள்வது அரசாங்கக் கொள்கைகளின் அடிப்படையாகஇருக்கவேண்டும் என்று கூறுகிறது.

• 1951-ம் ஆண்டில் இந்தியாவில் எடுக்கப்பட்ட சென்சஸ் ரிப்போர்ட்டின்படி 3·56/8 கோடி ஜனத்தொகையுள்ள நமது நாட்டில் 4·4/8 கோடி மக்கள் நிலமற்ற விவசாய உழைப்பாளிகள் என்றும் 53 லட்சம் பேர் நிலத்தோடு உண்மையான தொடர்பு எதுவுமற்ற நிலச் சொந்தக்காரர்கள் என்றும் அவர்கள் நிலத்தின் மீது வாடகை, குத்தகை பெறுபவர்கள் என்றும் தெரிகிறது. இந்தியாவில் தற்போது பயிரிடப்படுவதும், பயிரிடலாயக்குள்ளதுமான நிலத்தின்பரப்பு 30 கோடி ஏக்கர்கள்.

இதர நாடுகளோடு ஒப்பிட்டுப்பார்க்கையில் இந்தியாவில் சராசரி நிலஉடமையின் அளவு மிகக்குறைவு. உத்தரபிரதேசத்தில் அது 6 ஏக்கராகவும், சென்னையில் 4½ ஏக்கராகவும், வங்காளத்தில் 4·4ஏக்கராகவும், பஞ்சாபில் 10 ஏக்கராகவும், பீகார் ஒரிஸா மாகாணங்களில் 4·5ஏக்கராகவும் மத்திய பிரதேசத்தில் 8 5 ஏக்கராகவும் இருந்து வருகிறது. ஒருகுறிப்பிட்ட நியாயமான அளவுக்கு மேல் அது 25 ஏக்கரா என்று வைத்துக்கொண்டால் நிலம் படைத்த நில உடமையாளர்களிடம் உள்ள மொத்தமான நில அளவு உத்தரபிரதேசத்தில் 53,10,572 ஏக்கர்கள்; பம்பாயில் 108,55,988 ஏக்கர்கள் (இதில் 100 ஏக்கருக்குமேல் வைத்திருப்பவர்களிடம் 27,42,445 ஏக்கர்கள்); மத்தியபிரதேசத்தில் 88,58,310 ஏக்கர்கள் (இதில் 100 ஏக்கருக்குமேல்வைத்திருப்பவர்களிடம் 47,47,701 ஏக்கர்கள்) சென்னையில் 59,05,000 ஏக்கர்கள், மைசூரில்–1301,960 ஏக்கர்கள் ஆக இருக்கிறது. இக்கணக்கின்படி 25 ஏக்கருக்கு மேல் அதிகப்படியாக உள்ளநிலம் ஏராளமாகஇருப்பது தெரிகிறது. இந்த நிலங்களை நிலமற்ற விவசாயிகளிடம் புனர் விநியோகம் செய்யலாம், அப்படி செய்தால் வேலையில்லாத்திண்டாட்டம் ஒழியும். கிராம மக்களிடம் அடங்காது இருந்துவரும் 'நிலப்பசி' தணியும்.

வினோபா பாவேயின் நிலதான இயக்கத்தின் முதல் குறிக்கோள் இது. விவசாய மக்களின் நிலப்பசி நியாயமானது. காற்றையும் நீரையும் போல இயற்கை அளித்துள்ள நிலத்திலும் விவசாய மக்கள் உரிமை கோருவது அநியாயமல்ல. எனவே தானே அல்லது தானும் தன்குடும்பமும் உற்பத்தி செய்யத் தேவையான அளவுக்கு மேல் நிலம் வைத்துக்கொள்ள யாருக்கும் நியாயமான உரிமையில்லை. இந்த தார்மீகக் கொள்கையை நிறைவேற்றவும், அரசியலமைப்புச் சட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ள அடிப்படை நோக்கத்தை நடைமுறையாக்கவும் அரசாங்கம் எந்த அளவு வேகமாக செய்ய முடியுமோ அந்த அளவு வேகமாக நிலப்புனர் விநியோகத்தைச் செய்ய வேண்டும். நியாயமாகவும், பொருளாதார லாபகரமாகவும் ஒவ்வொருவரும் வைத்துக் கொள்ளக்கூடிய அளவு இந்தியாவைப் பொறுத்தவரையில் 5 முதல் 10 ஏக்கர் வரையிருக்கலாம். ஆகவே அதிகபட்சமான நிலஉடமையின் அளவு 25 ஏக்கர் என்று நிர்ணயிப்பது நியாயமானதேயாகும்.

நிலப்புனர் விநியோகத்தை எப்படி நிறைவேற்றுவது? கம்யூனிஸ்டு தேசங்களில் நிலச்சொந்தக்காரர்களிடமிருந்து நிலம் பறிமுதலாக்கப்பட்டு புனர் விநியோகம் செய்யப்படுகிறது. இந்தியா

வின் அரசியில் சட்டம் நஷ்டஈடின்றி அப்படிச் செய்ய அனுமதிப்பதில்லை. இவ்வளவுதான் நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்று அரசியம் சட்டம் கூறவில்லை. எவ்வளவு குறைவாக நஷ்டஈடு கொடுத்தாலும் மொத்தத்தில் அது பல கோடி ரூபாய்களுக்கு மேல் ஓடும். ஏழ்மை நிலையிலுள்ள நம் நாடு அதைத்தருவது இயலாமல் போகும்.

பின் எப்படித்தான் அதைச் செய்வது? வினோபாபாவே பலாத்காரமின்றி மனமாற்றம் ஏற்படும்படி செய்வதன் மூலம் அதை நிறைவேற்றமுயல்கிறார். இதுவரை அவர் 3·5 லட்சம் ஏக்கர் நிலத்தை நிலம்படைத்தவர்களிடமிருந்து தானமாகவே பெற்றிருக்கிறார். ஆச்சார்யாவினோபாபாவே தனியொருவராகவே நிலப்புனர் விநியோகப் பிரச்னையைத்தீர்த்துவிடமுடியாது என்பது உண்மைதான். ஆனால் அருடைய பூமிதான இயக்கம் விரைவில் அரசாங்கத்தாலேயே திருப்தியளிக்கத்தக்க முறையில் மேற்கொள்ளப்படவேண்டிய ஒரு சீர்திருத்தமுறைக்கு வழி கோலியுள்ளது.

நம் நாட்டின் 5 ஆண்டு திட்டத்தைப் பற்றிய திட்டக்கமிஷன் ஒருகிராமத்தின் முழு விவசாயப்பரப்பும் ஒரு குறைந்தபட்சபரப்பாகக் கூட்டுறவுமுறையில் இயங்குவதாக இருக்கவேண்டும் என்று யோசனை கூறியுள்ளது. பெரிய அளவில் இயந்திரங்களைக் கொண்டு பயிரிடப்படுகின்ற "ரிஜிஸ்டர்ட்டு பண்ணைகள்" அமைப்பது எனவும் அது யோசனை கூறியிருக்கிறது.

ஆனால் ஆச்சாரிய வினோபாபாவே முதலில் நிலம் நீர்பாசன வசதிகளைப் பொறுத்து 5 முதல் 10 ஏக்கர்வரை துண்டு துண்டுகளாகப்பிரித்து விவசாயிகளிடம் தரப்படவேண்டும் என்கிறார். அவருடைய அபிப்பிராயப்படி எல்லா நிலத்தையும் ஒன்றுக்குவதற்குப்பதிலாக உழுவது, விதைப்பது அறுப்பது போன்ற வேலைகள் கூட்டுறவு முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். விதைகள் வாங்கவும் விளைச்சலை விற்கவும் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படலாம்.

ஏராளமான நிலமற்ற விவசாயிகளின் நிலப்பசியைத்தணிப்பது மட்டுமின்றி வினோபாபாவேயின் திட்டம் விளைச்சலை அதிகரிக்கவும் உதவும். பெரிய அளவில் பண்ணைப்பயிரிடும் முறைதான் உற்பத்தி அதிகரிப்புக்குஏற்றது என்ற எண்ணம் தவறானது.

ஜப்பானில் 25 ஏக்கர் விஸ்தீரணமுள்ள சிறுசிறு விவசாயப் பண்ணைகளை நான் பார்த்திருக்கிறேன். கம்யூனிஸ்டு சீனாவிலும் நிலச்சீர்திருத்தம் நிலத்தைச்சிறுசிறு துண்டுகளாகப் பகிர்ந்து உழவர்களிடம் விடுவதில்தான் ஆரம்பமாகியிருக்கிறது. அரசாங்கம் ஆயிரக்கணக்கில் பூமிமட்டத்திற்கு கிணறுகளை வெட்டி விவசாயப்பாசனத்திற்கு உதவியிருக்கிறது.

தீவிரப்படுத்தப்பட்ட இயந்திரமின்றியே நடத்தப்படும் விவசாயத்தின்மூலமே இந்தியாவில் விளைவிக்கப்படும் விகிதத்தைவிட இரண்டு அல்லது மூன்றுமடங்கு அதிகமாக அந்த இரண்டுநாடுகளிலும் விளைச்சல் செய்யப்படுகிறது.

அமெரிக்காவிலும், ரஷியாவிலும் பெரிய அளவில் பண்ணைகள் இருக்கின்றன. அங்நாடுகளில் விவசாய நிலத்திற்கும் விவசாய மக்கள் தொகைக்கும் உள்ள விகிதம் குறைவு. அவைகளால் இயந்திரமயமாக்கப்பட்ட விவசாயத்தைத்தவிர வேறொன்றும் செய்ய முடியாது. ஏனெனில் ஏராளமான நிலம் பயிரிட இருக்கும் போது உழைப்பவர்களின் தொகை குறைவாக இருக்கிறது.

மொத்த ஜனத்தொகையில் 18 சதவிகிதம் பேர்கள் மட்டுமே விவசாயத்தில் ஈடுபட்டுள்ள அமெரிக்காவிலுங்கூட சிறிய விவசாயப்பண்ணைகள் அமைய வேண்டுமென்ற எண்ணம் விவசாயிகளிடம் தோன்ற ஆரம்பித்திருக்கிறன.

சிறிய விவசாய நிலஅமைப்பு வேண்டுமென்று சொல்லும் போது கூட்டுறவுமுறைக்கு இடமில்லை என்று அர்த்தமல்ல. மாறாக பல்வேறு விவசாய அலுவல்களில் அத்தியாவசியமானது கூட.

கூட்டுறவு பாங்கிகள், பரஸ்பர இன்ஷ்யூரன்சு திட்டங்கள், கூட்டுறவு நீர்ப்பாசனம், விவசாயத்திற்குத் தேவையான வற்றையும் இதரப்பொருள்களையும் வாங்கவும் விற்கவும் கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு பால் பண்ணைகள் முதலியவற்றிற்கு இதில் நிறைய இடமுண்டு.

வினோபாபாவேயின் நிலதான இயக்கம் விரிந்தஅளவில் மேற்கொள்ளப்பட்டால் கிராமப்புறங்களில் பயங்கரமாக நிலவும் வேலையில்லா திண்டாட்டம்ஒழியும். ●

தீபாவளி நன்னுளில்
எங்களின் இதயபூர்வ நல்வாழ்த்துக்கள்.

சென்னிமலை கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி, விற்பனைச் சங்கம் லிமிடெட்.,

—: சென்னிமலை P. O. :—

நாங்கள் 20 நெ. முதல் 30 நெ. வரை நூலில் எங்கள் சங்க அங்கத்தினர்களைக்கொண்டு 5, 6, 7, 7½, 8 கெஜங்களில் 44 அங்குல அகலத்தில் பலரக கலர் சேலைகளும், சித்தாடைகளும், வேஷ்டி, துண்டு, காடா பீஸ் ரகங்களும் தயார் செய்கிருேம்.

★

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு.

M. P. நாச்சிமுத்து, B. A., B. L. தலைவர்.

சிறுவலூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி, விற்பனைச் சங்கம் லிமிடெட் NO. K. 1116

(Via) பெருந்துறை, சிறுவலூர் P. O. (கோவை ஜில்லா)

எங்கள் சோஸைட்டியில்
20, 26, 30, 36, 40,
2/8, 3/20, 2/30
நெம்பர் நூல்களில்

6, 7½, 8, கெஜங்களில் பேட்டு, கோர்வை, பிளைன், கியாரண்டிக் கலர் சேலைத்தினுசுகள்

4X8, 4X9, வேஷ்டித் தான்களும், துண்டுகளும், 50"X12 கெஜம் காடா பீஸ் ரகங்களும் கெட்டி ஏிடை நெசவு தப்பட்டிகளும் தயார் செய்கிறேம்.

சிலோன், மலேயா போன்ற கடல் கடந்த நாடுகளில் வாழும் மக்களுக்கான சேலை ரகங்களும் நாங்கள் தயாரிக்கிருேம்.

இந்த ரகங்கள்
ஈரோட்டில் உள்ள ராஜ்ய நெசவாளர் கூட்டுறவு சங்க மார்க்கெட்டிங் டெப்போவில் எந்த சந்தர்ப்பத்திலும் கிடைக்குமாறு
வசதி செய்யப்பட்டிருக்கிறது

விவரங்களுக்கு எழுதவும் :

சீ. தாண்டவஞ் செட்டியார், தலைவர்.

வெள்ளைத் துணியை சீட்டியாகவும், சேலையாகவும் அச்சடிக்கும் இயந்திரம் சென்னை ராஜ்யத்தில் கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பு வரை இல்லாமல் இருந்தது. இப்போது அத்தொழில் ஈரோட்டில் வளர்ந்து கை நெசவு ஜவுளிக்கு ஓரளவு மார்க்கெட் தேடிக் கொடுத்துவருகிறது. அத்தொழில் எவ்வாறு இயங்குகிறது என்பதையே இவ்விளக்கக் கட்டுரையில் விவரிக்கப்படுகிறது.

வளர்ந்துவரும் புதியதொழில்!

கைத்தறித் துணியை மக்களின் விருப்பத்திற்கேற்ற பல்வேறு ரகங்களில் தயாரிப்பதில் தமிழ் நாட்டிற்கு என்றுமே ஒரு தனிச்சிறப்புண்டு. அதைச் சங்க கால இலக்கியங்கள் நமக்கு சான்று கூறுகின்றன. இன்றும் நம் தமிழ் நாட்டு கைத்தறியாளர்கள் சிங்களம், சாவகம் போன்ற இடங்களுக்கு மட்டுமின்றி, உலகநாடுகள் பலவற்றில் வாழும் பல்வேறு இனமக்களின் விருப்பத்திற்கும், எண்ணத்திற்கு . நாகரீகத்திற்கும் ஏற்ப பல எழில் மிக்க ரகங்களை நெய்து ஏற்றுமதி செய்து கொண்டுதானிருக்கிறார்கள்.

உதாரணமாக மேலப்பாளையம் கடலூர் லுங்கிகள் சிலோன், பர்மா, மலேயா போன்ற நாடுகளுக்கும், சென்னை சைதாப்பேட்டை சைக்குட்டை, தென் ஆப்ரிக்காவிற்கும், பவானி ஜமக்காளம் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும், ஈரோடு கைநெசவு காடாஇங்கிலாந்திற்கும், மற்றும் பல ரகங்கள் பாகிஸ்தான், அரபு நாடுகளுக்கும் இன்றும் தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதிசெய்யப்படுகின்றன.

அதேபோல உள்நாட்டிலேயே பல்வேறு தேசிய இன மக்களின் பழக்க வழக்கங்களுக்கான ரகங்களும் இங்கு தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டு வருகிறது.

இருந்தும் மில் நெசவுப் போட்டியாலும், முறையற்றதொரு டெக்ஸ்டைல் கொள்கையாலும் நம் தமிழ் நாட்டு நெசவாளர்கள் பஞ்சைப்பனாதைகளாய்-பிச்சைக்காரர்களாய் பெரும் பாலோர் இன்று அலைந்து திரிகின்றனர். இவ்விழி நிலைபோக்கி கை நெசவாளர்கள் நல்லதொருவாழ்க்கை நடத்த வழிகோலியாக வேண்டும். அவ்வகையில் இன்று அதற்கான கிளர்ச்சி தொடங்கப்பட்டிருக்கிறது. அதில் நம் ராஜ்ய நெசவாளர்கள் வெற்றி காண்பார்கள் என்றுநாம் திடமாகநம்பலாம்.

நெசவாளர்களின் தொழிலைப் பாழ்படுத்தி-வாழ்க்கையைவறண்டபாலைவனமாக்கிய வட நாட்டு நூற்பு நெசவாலை முதலாளிகள் அத்தோடு நின்று விடமாமல், தமிழ் பொதுமக்களை வேறு பல துறைகளிலும் சூரையாடி வ்ருகிறார்கள் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டபிரத்யட்ச உண்மையாகும்.

மாதம் ஒன்றுக்கு சுமார் இரண்டு கோடி கெஜம் வரை தமிழ் நாட்டு கைநெசவு வெள்ளைத் துணியைக் குறைந்த விலைக்குக் கொள்முதல் செய்துகொண்டு

நெசவு செய்யப்பட்ட கைத்தறி வெள்ளைத் துணிப்பீசுகள் சலவை செய்யப்பட்டு சீட்டியாக அச்சடிக்கத் தயாராக அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. சாயத் தொழில் நுணுக்கம் தெரிந்த "பிரிண்டிங் மாஸ்டர்" அன்றாட வேலைக்கும், ரகத்திற்கும் தேவையான விலை உயர்ந்த மேல் நாட்டு சாயங்களை எடைசெய்து தருகிறார். சாயம் கரைக்கப்படுகிறது.

போய், பம்பாய், அஹமதாபாத், சோலாப்பூர் போன்ற(வடநாட்டு) நகரங்களில்கண்கவர்சீட்டி, சேலைகளாக இயந்திரத்தைக்கொண்டு அச்சடித்துஇங்குகொண்டுவந்து நல்ல விலைக்கு விற்று கொள்ளை லாபம் சம்பாதித்து வந்தார்கள்.

இது தொடர்ந்து பல ஆண்டுகளாகவே நடைபெற்று வந்தது. இம் முறைக்கு முற்றுப்புள்ளியிட்டு, அத்தொழிலை இங்கேயே வளர்த்து கைநெசவு வெள்ளைத் துணிக்கு நல்லவிலை கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும், ஜவுளி வர்த்தகத்தில் வட நாட்டாருக்குள்ள ஆதிக்கம் தகர்க்கப்பட வேண்டுமென்றும்எண்ணி ஈரோட்டில் அதற்கானமுகூர்த்தக்கால் கைத்தறி ஜவுளி வர்த்தகர்கள் ஒரு சிலரால் போடப்பட்டது.

அவ்வகையில், மில் துணிக்கு ஈடான முறையில் கைநெசவுத் துணிகளுக்கு கஞ்சி போட்டு(பாலிஷ்) கேலண்டர் செய்வதும்.பல் வேறுவர்ணங்களில் சீட்டி, சேலை பிரிண்ட் செய்வதுமானதொழில்கள் இன்று சர்க்காரின் எவ்வித உதவியுமின்றியே ஈரோட்டில் நடைபெற்று வருகின்றன.

சாதாரணமாக இந்தஇயந்திரத்தின் மூலம் மணிக்கு 1200 (ஆயிரத்து இருநூறு) கெஜங்கள் வரை அச்சிடலாம் என கணக்கிடப்படுகிறது. அப்படியாயின் ஒரு தொழிற்சாலையில் உள்ளஇயந்திரம் தினசரி 8 மணி நேரம் இயக்கப்படுமானால் கிட்டதட்ட10ஆயிரம் கெஜங்கள்வரை அச்சிட முடியுமென்றாகிறது.

இப்படித் துணியை அச்சிடும் இயந்திரம் ஒன்றின் மூலமே கைநெசவுத் துணிக்கு தினசரி 10 ஆயிரம் கெஜங்கள் வரை மார்க்கெட் தேடித்தர முடிகிறது என்பது மேற்கண்ட விவரங்கள் மூலம் நன்கு அறிய முடிகிறது.

(அடுத்தபக்கம் பார்க்க)

மேஷின் தறிகளைப் போன்று நூற்றுக்கணக்கான கெஜங்களை ஒரே நீளமாக கைத்தறியில் நெய்ய முடியாதாகையால் 12, 18, 24 கெஜங்களாக நெய்யப்பட்டுள்ள கைத்தறித் துணிகளை (சலவை செய்தபின்) சீட்டியாக அச்சடிக்கத்தோதுவாக அவைகளைத்தையல் மேஷின்கொண்டு ஒன்றுடன்ஒன்று இணைத்து நீளமாகதைக்கப் படுகிறது. மணிக்குசுமார் 1200 கெஜங்கள்வரைமேஷினில் துணியை அச்சடிக்கலாமாகையால் கைநேசவத்துணியை மேஷினில் அச்சடிக்கஇப்படிச் செய்யவேண்டியது தவிர்க்கமுடியாததாகிறது.



செம்பு உலோகத்தால் "எங்கரேவிங்" செய்யப்பட்ட, பல்வேறு அகலங்களில் சீட்டி பிரிண்ட் செய்வதற்கான ரோலர்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. எந்த டிசைன் (ரக) சீட்டி அச்சடிக்க வேண்டுமோ அதற்கான டிசைன் ரோலர் "ஷாப்ட்" டில் அவ்வப்போது இங்கு பொருத்தப்படுகிறது.

(முன்பக்கத் தொடர்ச்சி)

அவ்வகையில் இன்று ஈரோட்டில் உருவாக ஓடிக்கொண்டிருக்கும் இதுபோன்ற தொழிற்சாலைகள் மூலம் தினசரி 50 ஆயிரம் கெஜங்கள் வரை கைத்தறி வெள்ளைத்துணிக்கு நிலையான மார்க்கெட் கிடைக்கிறது என்று அறிய முடிகிறது.

கைநெசவுத்துணியை அழகு மிளிரும் சீட்டியாக அச்சிடும் பணியை வெகு தைரியத்துடன் முதன்முதலாக மேற்கொண்டவர்கள் ஈரோடு "தி சௌத் இந்தியன் பிரிண்டிங் & டையிங் பேக்டரி"யார் ஆகும். அவர்கள் அத்தொழில் எப்படி செயல் படுத்தப்படுகிறது என்பதைப் பொதுமக்களும், இதை அறிந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்காத ஏனைய ஜில்லா கைத்தறி ஜவுளி வியாபாரிகளும், நெசவாளர் கூட்டுறவு சங்கத்தினரும் அறிந்து கொள்ளவேண்டி தங்கள் தொழிற்சாலையில் நடைபெறும் பல தொழில் பிரிவுகளையும் படம் பிடித்து, பிளாக்குகள் செய்து இம்மலரில் வெளியிட உதவியுள்ளார்கள். அவர்களின் இந்தப் பரந்த தொழில்வளர்ச்சி எண்ணத்திற்கு நாம் நிச்சயம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

தென் நாட்டிலேயே முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸ்தாபனத்தார், கைத்தறி துணிகளைத் தாங்களே நேரடியாகக் கொள் முதல் செய்து சீட்டியாக அச்சடித்து "டார்ச்பேபரிக்ஸ்" என்ற லேபிளுடன் விற்று வருவதுடன், வெளியூர் வர்த்தகர்களிடம், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடம் இருந்து சீட்டியாக கூலிக்கு அச்சடிக்கக் கிடைக்கும் ஆர்டர்களையும் மேற்கொள்கிறார்கள். இதன் மூலம் தங்கள் தொழிலை தங்களின் லாப நலனுக்காக மட்டுமின்றி, மற்றவர்களின் நலனையும் அவர்கள் பேணுகிறார்கள் என்றே கொள்ளவேண்டியிருக்கிறது.

இரண்டாண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸ்தாபனம், உள்ளூரிலேயுள்ள வேறு பலருக்கும் இவ்வகையில் தொழில் நடத்த ஊக்குவித்திருக்கிறது. இன்றுஈரோட்டில் கிட்டத்தட்ட 6 ஸ்தாபனங்கள் இது போன்று அமைக்கப்பட்டு வேலை செய்து வருகின்றன. அவைகள் யாவுமே இன்று இந்திய சீட்டி ஜவுளி மார்க்கெட்டில் கைத்தறி துணிக்குப் பிரதான பங்கைத் தேடித் தரும் பணியில் ஒன்றுடன் ஒன்று வளர்ச்சிப் பாதையில் வெகுவேகமாக முன்னோக்கி நடைபோட்டுச் செல்லுகின்றன.

தென் இந்தியாவில் ஈரோடு இன்று பிரதானமான கைத்தறி ஜவுளி மார்க்கெட்டாக வளர்ந்து வருகிறது. வட நாடு நோக்கி இன்று கைத்தறித் துணி சீட்டியாகப் பிரிண்ட் செய்யச் செல்வதில்லை. அதனால் தமிழ்நாட்டுச் செல்வம் வெளி ராஜ்யங்களுக்குச் செல்வது தடைப் படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தத் தொழிலை நம் மாகாணத்தில் ஆரம்பித்து நடத்துவதில் பலவித இடைஞ்சல்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது. பம்பாயில் சாதாரணமான வீடுகளில் எல்லாம் இம்மெஷினைப் பொருத்தி வேலை செய்து வருகிறார்களாம். ஆனால் இங்கு அப்படிச் செய்வது சாத்யமில்லாமலாகி விடுகிறது எனவும், பாக்டரிச்சட்டம் குறுக்கிட்டு வீணான தொந்திரவுகளை அளித்து வருவதாகவும் சொல்லப்படுகிறது.

இதுபோன்ற மெஷினையும், 4, 5, பிரிண்டிங் டிசைன் ரோலர்களையும் கொள்முதல் செய்து தொழிற்சாலை ஆரம்பிப்பது



"ஷாப்ட்"டில் பொருத்தப்பட்ட டிசைன் ரோலர் அச்சடிக்கும் இயந்திரத்தில் மாட்டப்பட்ட பின் இயந்திரத்தை முடுக்கிவிடப்படுகிறது. அது இம்மாதிரி துணியை சீட்டியாக பலவர்ணங்களில் அச்சடித்து விடுகிறது. ஒரு தொழிலாளி கரைக்கப்பட்ட சாயத்தை மெஷினுக்கு ஊற்றிக் கொண்டிருக்கிறார்.

என்றால் சுமார் 30 ஆயிரம் ரூபாய்கள் இருந்தால் போதும், ஆனால் இந்த 30 ஆயிரம் ரூபாய் கொள்முதலில் ஆரம்பிக்கப்படும் இத்தொழிலுக்கு, பாக்டரி சட்டத்தின்படி ஒரு கட்டடம் அமைப்பது என்றால் குறைந்த பட்சம் 50 ஆயிரம் ரூபாயாவது தேவைப்படும் என அறிவிக்கப்படுகிறது. இப்படி இருந்தால் தமிழ் நாட்டில் இதுபோன்ற சின்னஞ்சிறிய தொழில்கள் எல்லாம் எப்படி வளர முடியும் என்பதை சர்க்கார் நன்கு யோசித்துப் பார்க்கவேண்டும்.

வட நாட்டில் குபேரர்களாக இருக்கும் மில் முதலாளிகளே இத்தொழில்களை ஆதரித்து மற்றவர்கள் மத்தியில் இது வளர்ச்சியடைய ஊக்கமளிக்கிறார்கள்-ஒத்துழைக்கிறார்கள் சர்க்காரும் இச்சூழ்நிலைக்கு ஒத்து இயங்குகிறது அங்கு. ஆனால் இங்கு உபகாரம் இல்லாவிடினும் சட்டசம்பந்தமான உபத்திரவங்கள்தான் அதிகம் என்றால் இதையார்தான் ஒப்புக்கொள்வர்?

முதன்முதலாக இத்தொழிலை ஈரோட்டில் ஸ்தாபிக்க "தி சௌத் இந்தியன் பிரிண்டிங் & டையிங் பாக்டரி"யார் முயன்ற போது அவர்களுக்கு மின்சார வசதி செய்து தர மறுக்கப்பட்டது. அதுமட்டுமல்ல; இத்தொழில் தென் நாட்டில் ஆரம்பிக்கப்படுவது தங்களுக்குப் பேராபத்தாக வந்து முடியும் என அறிந்த வட நாட்டிலுள்ள "குஜராத் மெஷின் பிரிண்டர்ஸ் அசோஸியேஷனை" சேர்ந்த சிலர் இங்குவந்து மறைமுகமாக ஏதேதோ யெல்லாம் கூட செய்து பார்த்தார்களாம்.

இவையெல்லாம் தொழில் வளர ஏற்படுகிற-ஏற்பட்ட முட்டுக்கட்டையை ஞாபகப்படுத்தவே தான்

(அடுத்த பக்கம் பார்க்க)



அச்சடிக்கப்பட்ட துணிகள் வீடுபோல் காட்சியளிக்கும் "ஸ்டீம் காட்டேஜில்" புகுத்தி நீராவியால் (ஸ்டீம்) வேகவைக்கப்படுகிறது. இப்படிச் செய்வதின் மூலம் துணியில் ஏற்றப்படுகிற சாயத்திற்கு பளபளப்பும், கெட்டித்தன்மையும் உண்டாகிறது.



அதற்கான நீராவி இந்த "பாய்லர்" மூலமாக சப்ளை செய்யப் படுகிறது.

(முன் பக்கத்தொடர்ச்சி)

இங்கு குறிப்பிடப்படுகிறதே தவிர, புராணம் வாசிக்க வேண்டுமென்ற நோக்கத்தால் அல்ல என்பதை சர்க்காரின் கவனத்திற்கு நாம் கொண்டுவருகிறோம்.

இதேமாதிரி, நெய்த கைத்தறி துணியை மில் துணிபோல மெருகேற்றும் (கேலண்டர்) தொழிற்சாலையை ஈரோட்டில் ஸ்தாபித்தபோதும் அதற்கும் மின்சாரவசதியில்லையெனக்கூறப்பட்டு தொழில் வளர்ச்சிக்குத் தடங்கல்கள் செய்யப்படுகின்றன அங்குள்ள மின்சார "டிரான்ஸ்பார்மரை"க் காட்டியே இத்தனை தடங்கல்களும் செய்யப்படுகின்றன. அதிகமான "லோடு" ஏற்றுக்கொள்ளும் வேறு "டிரான்ஸ்பார்மரை" ஏன் ஈரோட்டில் வாங்கி வைக்கக்கூடாது என்ற கேள்வியை நாம் சர்க்காரைத்தான் கேட்டாகவேண்டியிருக்கிறது.

காலத்தின் வேகம் மக்களின் கருத்தை மாற்றி "உலகத்தோடு ஒட்ட ஒழுகல்" வழியிலே இழுத்துச் செல்கிறது. அதற்கேற்ப கைத்தறித்துணியை மக்கள் மத்தியில் விரும்பி வாங்கும் எண்ணத்தையும் வளர்த்தாக வேண்டியிருக்கிறது. எனவே, கைத்தறித் துணிக்கு இதுபோன்ற அத்யாவசியமான உபதொழில்கள் நிச்சயம் வளர்ந்தால்தான் எதிர்காலம் சோபிதமாக இருக்கும் என்பதை உணர்த்தவேண்டியுள்ளது.

ஆகவே, கைத்தறி உற்பத்திக்கு மார்க்கெட் தேடித்தரும் இதுபோன்ற தொழில்கள் வளர்வதற்கான சூழ்நிலையை சர்க்கார் உண்டாக்கியாக வேண்டியிருக்கிறது என்பது இதன் மூலம் உறுதிப்படுகிறது. அவ்வழியில் சர்க்கார் தங்களின் கவனத்தைக் கொஞ்சம் திருப்புவார்கள் என நாம் நிச்சயமாக நம்பலாம்: ●



அச்சடிக்கப்பட்ட சீட்டி துணியை திராவகங்களின் உதவியைக் கொண்டு இப்படி "டேவலப்" செய்யப்பட்டு, சுத்தமாக சோப் தண்ணீரால் இங்கு நன்கு அலசப்படுகிறது.



அலசப்பட்ட துணிகளுக்கு, கஞ்சி போடுவதற்கென்றே உள்ள மேஷினுடைய உதவியைக் கொண்டு சரியான முறையில் இங்கு பதம் செய்யப்படுகிறது.

பதம் செய்யப்பட்ட துணியை நன்றாக உலர்த்தியபின்பு "கேலண்டர்" மெஷின் உதவியால் மில் துணியைப் போன்று நன்கு மெருகேற்றப்படுகிறது. மெருகேற்றப்பட்ட பின் கடைசியாக இந்த அளவிடப்பட்டு, கெஜ மடிப்புசெய்து, அதன்மீது முத்திரை குத்தி விற்பனைக்குத் தோதுவாக பீசுகளாக மடிக்கப்படுகிறது.

விற்பனைக்குத் தயாரான பீசுகள் அடுக்கிவைக்கப் பட்டிருப்பதையே இப்படம் காட்டுகிறது.

துணியைக்கையால் அச்சிடுவதற்கும் இயந்திரத்தை கொண்டு அச்சிடுவதற்கும் நடுவாந்தரமாக உள்ள 'ஸ்கிரீன் பிரிண்ட்' என்றழைக்கப்படும் துணி அச்சிடும் முறையை வலதுபக்கத்தில் உள்ள படம் காட்டுகிறது.

இந்த 'ஸ்கிரீன் பிரிண்ட்' முறையையும் ஈரோடு 'திசௌத்' இந்தியன் பிரிண்டிங் & டையிங்பேக்டரி" யார் நடத்தி வருகிறார்கள்.

அனைவருக்கும் எங்களின்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

ராஜ்யநெசவாளர்கூட்டுறவு
சங்கத்தாரால் ஆதரிக்கப்படுவது
M & C. பிரிண்டிங்

நீங்களும்
உங்களிடமுள்ள
ஜவுளிகளைகவர்ச்சி மிகுந்த
சீட்டியாக மில் பிரிண்ட்
செய்துகொள்வதற்கு

M & C. பிரிண்டிங் மில்ஸ்
தபால்பெட்டி நெ. ஈரோடு.
STAR

நன்றி: இம்மலருக்குக் கட்டுரையெழுதி சிறப்பித்தவர்கள், விளம்பரம்கொடுத்துதவியவர்கள், நம் வாசக நேயர்கள் அனைவருக்கும் நமது நன்றிமிக்க வணக்கம் உரித்தாகுக.

கவுண்டர் & கம்பெனி லிமிடெட்

கூட்ஸ் ஷெட் ரோடு :: பொள்ளாச்சி.

போர்டு, செவர்லெட்

மற்றும் இதர மோட்டார்களுக்கு அவசியமான எல்லா சாமான்களும்

டயர்கள், டியூப்புகள், பேட்டரி வகைகளும்

விற்பனை செய்யப்படும்.

●

பஸ், லாரிகளுக்கு பாடிகள் போட்டுக் கொடுப்பதுடன் எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

●

நா. மகாலிங்கம்

மேனேஜிங் டைரக்டர்.

வெள்ளோடு கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி, விற்பனைச் சங்கம் லிமிடெட்.,

No. K. 1177.

வ. வெள்ளோடு. P. O. ★ (Via) ஈரோடு.

20, 26, 30 செ. நூல்களில் வேஷ்டி, துண்டு, காடாபீஸ், ரகங்களை திறமை மிக்க எங்கள் சங்க அங்கத்தினர் களைக்கொண்டு நாங்கள் தயார் செய்கிறோம்.

சென்னை ராஜ்யநெசவாளர் கூட்டுறவு சங்க ஈரோடு மார்க்கெட்டிங் டிப்போ வில் எங்கள் சங்க ஜவுளிகள் கிடைக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

நாங்கள் தயாரிக்கும் காடா, வேஷ்டி, துண்டு ரகங்கள் அனைத்தும் சிறந்த முறையில் மில் காலண்டர் செய்யப்பட்டு விற்பனைக்குத் தோதுவாக ஈரோடு டை மார்கெட்டிங் டிப்போ மூலம் சப்ளை செய்கிறோம்.

விலைகள் மிகவும் குறைக்கப்பட்டுள்ளன

தேவைக்கு எழுதுங்கள். *C. முத்துசாமி முதலியார், தலைவர்.*

இந்தியத்துணைக்கண்டத்தின் கைத்தறிநெசவுத் தொழிலானது எவ்வாறு படிப்படியாக சரிந்து வந்திருக்கிறது என்பதை இவ்வாராய்ச்சிக் கட்டுரை உங்களிடம் விவாதிக்கிறது. இத்தொழிலின் எதிர்காலம் நிலையானதாக இருக்க ஆணித்தரமான ஆலோசனைகளும் வெகுதெளிவாக எடுத்துக்காட்டப்படுகிறது.

நெசவாலைப் போட்டி!

வி. எஸ். சங்கரசுப்ரமணிய முதலியார் பி.ஏ., பி.எல்.

கைநெசவுத்தொழில் மிகவும் சிறந்த தொழிலாக இந்நாட்டில் அமைந்திருந்தது. நெசவாளர்கள் தங்கள் கைத்தறிகளில் ஏராளமாகத் துணி தயார்செய்து பாரதநாட்டு மக்கள் எல்லோருக்கும் வழங்கி, எஞ்சி இருந்தவற்றை அயல் நாட்டுக்கு ஏற்றுமதி செய்து வந்தார்கள். இப்போழுது அந்தநிலை முற்றிலும்மாறி விட்டது. நெசவுத்தொழில் சீரழிந்து விட்டது. நெசவாளிக்கு நூல் கிடைப்பதில்லை. கிடைக்கும் நூல் தேவைக்குப் பொருத்தமானதாக இல்லை. நெய்ததுணியை வாங்குவார் இல்லை. கூலி இல்லை. நெசவாளி பரிதவிக்கிறான். இந்த நிலைமைக்கு யார்காரணம்? ஏதாவது நிவர்த்திக்கு மார்க்கம் உண்டா?

இயந்திரத்தின் மூலமாக இங்கிலாந்தில் ஏராளமாக நூல் தயார் செய்தார்கள். அங்கியநாட்டிற்கு அனுப்பினார்கள். அவர்களுக்கு வேண்டிய பருத்தி அமெரிக்காவிலிருந்து கிடைத்தது. 1860-ம் வருஷத்திலிருந்து அமெரிக்காவில் சுதந்திர யுத்தம் நடந்தது. அதனால் அவர்கள் இங்கிலாந்திற்கு பஞ்சு அனுப்பவில்லை. அந்த சமயத்தில் நம் நாட்டிலுள்ளபஞ்சை பம்பாய் துறைமுகத்தின் வழியாக இங்கிலாந்திற்கு அனுப்பிவைத்தார்கள். எதிர்பாராத அளவு ஏராளமான செல்வம் பம்பாயில் வந்து குவிந்தது. பாம்பாயிலுள்ள நூற்பு ஆலைகள் அப்போது இளம் பிராயத்தினவாக இருந்தன. பணமின்றி ஆதரவற்றுக் கிடந்த நூற்பு ஆலைகள், எல்லாம் செல்வம் நிறைந்தவுடன் திறமையாக வேலை செய்ய ஆரம்பித்தன. அந்தக் காலத்தில் இந்திய நூலுக்கு சைனாவில் அதிககிராக்கி ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக 1865-ம் ஆண்டுக்கு முன்னரே நூற்பு ஆலைகள் லாபகரமாக வேலை செய்ய ஆரம்பித்தன. அவைகளின்வளர்ச்சியைக்கண்டு இங்கிலாந்திலுள்ளவர்கள் அஞ்சினார்கள்.

இந்திய மில்சள் இங்கிலாந்திலுள்ள நூற்பாலைகளோடு போட்டிபோடமுடியாதபடி அரசாங்கத்தார் காலாகாலங்களில் சட்டம்செய்து தடுத்து வந்தார்கள். அதனால் ஆலை முதலாளிகள் தங்கள் நூல் வியாபாரத்தை சைனா ஜப்பான் முதலிய இடங்களில் பெருக்கி வந்தார்கள். கடந்த நூற்றாண்டின் இறுதியில் ஜப்பானியர்கள் தங்கள் நாட்டில் மில் நூற்பை பெருவாரியாக மேற்கொண்டார்கள் அவர்கள் சைனா தேசத்திற்கு வேண்டிய நூலை சப்ளை செய்த தோடல்லாமல் நம் நாட்டிலேயே சரசமான விலைக்கு நூலைக் கொண்டுவந்து விற்றார்கள். இதனால் நம் நாட்டு நூற்புத்தொழிலுக்கு இடைஞ்சல் ஏற்பட்டது. நூற்ற நூலை செலவு செய்ய ஆலைமுதலாளிகள் நெசவு ஆலைகளை ஏற்படுத்தினார்கள். கைநெசவுத் தொழிலுக்கு எமனாக இருக்கும் நெசவாலைகள் இவ்வாறு முதலில் நூற்பு ஆலைகளாகத் தோன்றி நெசவாளர்களுடைய உதவியினாலும், தேசபக்தியின் காரணமான ஆதரவினாலும் வளர்ந்து, கடைசியில் நெசவாலைகளாகமாறி கைநெசவையே அழிக்க ஆரம்பித்தது.

ஜப்பானியர்கள் சைனா முதலிய கீழ் நாட்டு மார்க்கட்டுகளைக் கைப்பற்றியதினால் ஏற்பட்ட மந்தத்தைச் சரிகட்ட மில் முதலாளிகள் 1905-ம் வருஷத்தில் சுதேசி இயக்கத்தை ஆரம்பித்தார்கள். இந்திய கைநெசவாளர்களின் தேசபக்தியைத் தூண்டி

அவர்களைத் தங்கள் நூலையே வாங்கும்படி செய்தார்கள். ஏழை நெசவாளிகள் இவர்கள் தங்கள் விரோதிஎன்று தெரியாமல் இந்திய ஆலைமுதலாளிகளையும் அவர்களுடைய நூலையும் ஆதரித்து வந்தார்கள். அதனால் கொழுத்த முதலாளிகள் மேலும் மேலும் நெசவாலைகளை விஸ்தரித்துக் கொண்டேபோய் கடைசியில் நெசவாளர்களுடைய உதவி வேண்டாத ஒரு நிலையை எய்திவிட்டார்கள்.

ஏழை நெசவாளர்களின் தேச பக்தியைத் தூண்டி அவர்களுடைய ஆதரவினாலும் உதவியினாலும் தங்கள் நூற்பு ஆலைகளை நன்றாக ஸ்திரப்படுத்திக் கொண்ட பின்னர் மில்முதலாளிகள் துணி நெய்வதில் கைநெசவாளர்களோடு போட்டியை ஆரம்பித்து அத்தொழிலை ஒழித்து அதன்மீது தங்கள் தொழிலைக் கட்டத் திட்டம் வகுத்தார்கள். பம்பாய்ராஜ்யத்திலுள்ள ஆலைகளை எல்லாம் "Composite" ஆலைகளாக்கினார்கள். அதாவது நூற்பும் நெசவும் ஒருங்கே நடைபெறும் ஆலைகளாகமாற்றினார்கள். முதல் உலக மகாயுத்த காலத்தில் ஐரோப்பிய நாடுகளால் துணி தயார்செய்ய இயலவில்லை. அந்த சமயத்தைப் பயன்படுத்தி இந்திய மில்முதலாளிகள் ஏராளமாகத் துணி தயார் செய்து உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் கொள்ளை விலைக்குவிற்று அதிகலாபம் சம்பாதித்தனர்.

1910-ம் ஆண்டுவரையிலும் மில் துணியைவிடக் கைத்தறித் துணி அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. சில ஆண்டுகளில் கைத்தறித்துணி இரண்டு மடங்கு தயாராயிற்று. 1910 லிருந்து 1915 வரை இரண்டும் சமமாக இருந்தது. கடைசியாகப் போட்டியில் மில் வெற்றி கண்டது. 1920-ல் கைத்தறித்துணி உற்பத்தி மில்துணி உற்பத்தியின் பாதி அளவிற்குக்குறைந்துவிட்டது.

மில் முதலாளிகளுக்குத் தங்கள் துணி வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ளவும், கைத்தறித்தொழிலை நசுக்கவும் 1931-ல் மற்றொரு சந்தர்ப்பம் கிடைத்தது. சில நிபந்தனைகளின்பேரில் இந்திய மில்களுக்கு காங்கிரஸ் மகாசபையார் "சுதேசி" என்ற சர்டிபிகேட் கொடுத்து வந்தார்கள். மெல்லிய நூல்நெய்து வந்த தறிகாரர்களில்பலர் தங்கள் துணி இந்திய நூலால் தான் தயார் செய்யப்பட்டதென்பதை ருசுச் செய்ய முடியாமல் தயங்கினார்கள். அதனால் அவர்கள் நெய்த துணி "சுதேசி"யாக கருதப்படவில்லை. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்திய மில் முதலாளிகள் புது ரகங்களில் சாதாரண ஜனங்களுக்கு வேண்டிய துணிகளைத் தயார் செய்து உள் நாட்டு சேலை, வேஷ்டி மார்க்கெட்டைக்கைப்பற்றிக்கொண்டார்கள்.

இவ்வளவும் செய்ததோடு நிற்காமல் இப்போது நமது தொழிலுக்கு வேண்டிய நூல் கொடுப்பதிலும் பல இடைஞ்சல்களை ஏற்படுத்தி வருகிறார்கள். கைநெசவுத் தொழிலுக்கு வேண்டிய அளவு நூல், வேண்டிய காலத்தில், வேண்டிய நம்பரில் கிடைப்பதில்லை. அதனால் துணியின் தரமும், விலையும், ஸ்திரமாக இருக்க முடியவில்லை.

நமது மாகாணத்திலிருந்து மேற்கு ஆப்ரிக்கா, பர்மா, மலேயா, சிலோன், சயாம் போர்னியோ, ஜாவா, சுமத்ரா, முதலிய இடங்களுக்கு ஏராளமாகக் கைத்தறித்துணியை ஏற்றுமதிசெய்து வந்தோம். அயல் நாட்டுப் போட்டியின் காரணமாக இந்த ஏற்றுமதிஎல்லாம் குறைந்துகொண்டே வந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அந்த மார்க்கெட்டுகளை இதர தேசத்தினர் கைப்பற்றிக் கொண்டனர். தவிரவும், ஒவ்வொரு தேசமும் தங்களுக்கு வேண்டிய துணிமணிகளைத் தாங்களே தயார் செய்துகொள்ள வேண்டுமென்று விரும்புகின்றன. பர்மா, இந்தோனேஷியா, சயாம்

P. மகாதேவன்,

சாயத் தொழிற் சாலை

61, சலிவன் வீதி, :: கோயமுத்தூர்.

சாயத் தொழிலில் அனுபவமிக்க கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு நெசவாளர்கள், வர்த்தகர்கள் ஆகியவர்களின் திருப்திக்கேற்ப சாயம் தீர்த்து, குறித்த நாளில் சப்ளை செய்கிறோம்.

எனது தீபாவளி நல்வாழ்த்தை ஏற்றுக்கொள்ளுங்கள்.

முதலிய நாடுகள் நம்மிடமிருந்து நூல் வேண்டும் என்று கேட்கின்றனர். இந்நிலையில் வெளிநாட்டு ஏற்றுமதி அறவே நின்று வருகிறது.

இந்த தேசத்திலுள்ள மிகப் பெரிய குடிசைத்தொழில் கைத்தறி நெசவேயாகும். ஏறக்குறைய 28 லக்ஷம் தறிகள் நம் நாட்டிலிருக்கின்றன. அவற்றில் 5-ல்ஒரு பாகம் நமது ராஜ்யத்திலிருக்கின்றன. நமது ராஜ்யத்தில் மாத்திரம் இதையே ஜீவனத்திற்காக நம்பி வாழக்கூடியவர்கள் 25 லக்ஷம் பேர்கள் இருக்கின்றனர். தேசம் முழுவதும் கணக்கெடுத்தால் ஏறக்குறைய ஒரு கோடிக்கு மேலானவர்கள் இந்தத்தொழிலை நம்பி வாழ்கிறார்கள். பலகிராமங்களில் சிதறிக் கிடக்கும் இவ்வளவு பெருந்தொகையினரான நெசவாளர்கள், கிராம வாழ்க்கைக்கு ஜீவநாடிபோன்றவர்கள். கிராமப் பொருளாதாரம் சீர்குலையாமலிருக்க வேண்டுமானால் இவர்கள் மேலும் கிராமத்திலேயே வாழ வேண்டும். குடிசைத் தொழிலை நம் கண்முன் சாகவிடுவது தர்மமல்ல. இவர்கள் எல்லோரும் வேறு வேலைகளைநாடி நகரங்களுக்குச் சென்றால் கிராமங்களெல்லாம் சீர்குலைந்துவிடும். நாட்டின் நலனைக்கருதியாவது இவ்வளவு பெரிய கூட்டத்தினரை வேலையில்லாதவராக வைத்திருத்தலை நீக்கவேண்டும்.

மில்துணி, கைத்தறித் துணியோடு சகல முறையிலும் போட்டியிடுவதினாலேயே கைநெசவுத் தொழில் க்ஷீணித்து வருகிறது. தொழில் க்ஷீணிப்பதால் நெசவாளிகள் கூலிகிடையாமல் தவிக்கிறார்கள். தொழிலை நசிக்க விட்டுவிட்டு தொழிலாளர்களுக்கு மாத்திரம் கொஞ்சநாள் பஞ்சப்படி முதலிய கொடுத்தால் யாதொரு பயனும் ஏற்படாது. கைநெசவுத் தொழிலாளர்களைக் காப்பாற்றி, நெசவுத்தொழிலையும் பாதுகாக்க வேண்டுமாயின் அரசாங்கம் உடனே கீழ்கண்டவற்றைச் செய்யவேண்டும். இந்த மாகாணத்தில் மேலும் மேலும் வந்து குவிந்து கொண்டிருக்கும் மில் துணியின் அளவைக்குறைக்க வேண்டும். அல்லாத பட்சத்தில் ஏராளமாகத் தேங்கிக் கிடக்கும் கைத்தறித்துணி செலவாக மார்க்கமில்லை. அன்னிய நாட்டிலிருந்து துணி இறைக்குமதியை அறவே நிறுத்தவேண்டும். கைத்தறித் தொழிலுக்காக ஒதுக்கப்படும் நூலின் (Free Yarn) மீதும், கைத்தறி ஜவுளியின் மீதும் விற்பனைவரி விதிப்பதை விலக்குதல் வேண்டும். கைத்தறி துணியை அனுப்புவதற்கு ரயில்வேகட்டணத்தில் சாசுவதமான சலுகை காட்டவேண்டும். ஆலைகளில் தயாராகும் நூலில் முதலில் கைத்தறிகளுக்கு வேண்டிய அளவை ஒதுக்கிவிட வேண்டும். நூற்பு, நெசவு இரண்டு வேலைகளையும் ஒருங்கே செய்யும் மில்களுக்கு, நெசவாளர்களுக்கு கிடைக்கும் விலையைவிடக் குறைந்த விலைக்கு நூல் கிடைக்கிறது. அதனால் நெசவாளியின் துணியின்விலை அதிகமாகிறது. இதைத்தடுத்துக் கைத்தறித் தொழிலுக்கும் குறைந்தவிலையில் நூல் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும், அல்லது காம்போசிட் மில்கள் உபயோகப்படுத்தும் நூலின் மீது வரி விதிக்கவேண்டும்.

கடந்த முப்பது வருஷகாலமாகக் கைத்தறி தொழில் விரைவாக நசித்துக் கொண்டே வருகிறது. இதற்கு மூலகாரணம் இந்திய மில்களின் நியாயமற்ற போட்டியேயாகும் என்பதை மேலே தெளிவாகக் காட்டினோம். ஆரம்பத்தில் தங்களுடைய மில்களின் வளர்ச்சிக்காக அரசாங்கத்தின் உதவியையும் நெசவாளிகளின் ஆதரவையும் மில் முதலாளிகள் கோரினார்கள். அவர்களுடைய உதவியால் ஸ்திரம் பெற்றபின் நெசவாளிகளுடன் போட்டியிட்டுக் கைத்தறி நெசவின் அழிவிற்குக் காரணமாக இருக்கிறார்கள். இந்தப்போட்டியை நீக்க அரசாங்கம் இயந்திர நெசவிற்கு ஆதரவளிப்பதை நிறுத்தவேண்டும்.

(36-ம் பக்கம் பார்க்க)

அனைவருக்கும் எங்களின்
தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

நூல், பட்டு, துணி ஆகியவைகளுக்கு முறைப்படி டார்க், & லைட் கலர்கள் உங்களின் திருப்திக்கேற்ப கெட்டிச்சாயம் தோய்ப்பவர்கள்

சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டியாரால் அங்கீகரிக்கப் பட்டவர்கள்.

சுந்தரம் சாயச்சாலை

ரங்கேகவுடர்வீதி, -O- கோயமுத்தூர்.

அழிவை நோக்கி!

கூட்டுறவு இயக்க நெசவாளர்களின் இன்னல்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன; அவைகட்குப்பரிகாரமும் சொல்லப்படுகிறது இக்கட்டுரையில்!

ஏ. பி. நாச்சியப்பன்.

நம் ராஜ்யத்திலுள்ள சுமார் 8 லட்சம் கைத்தறிகளில் கிட்டத்தட்ட இரண்டு லட்சம் தறிகள்வரை, ஆயிரத்திற்கும் மேற்பட்ட கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் வேலைசெய்து வருகின்றன. நிதி, சரக்கு விற்பனை போன்ற வகைகளில் இவைகளில் சில சங்கங்களே போதுமான வளர்ச்சிபெற்று பூரணத்வமடைந்திருக்கின்றன. பெரும்பாலான சங்கங்கள் ஆரம்ப நிலையிலிருப்பதால் அவைகள் எதற்கும் தாய்ஸ்தாபனத்தையும், அரசாங்கத்தையும் எதிர்பார்த்துக்கொண்டு "காமா சோமா" என்று இயங்கி வருகின்றன.

இந்த நிலையில்தான் கைத்தறி ஜவுளிமார்க்கெட்டில் மந்தமும், நூல் விநியோகக்கட்டுப்பாடு தற்காலிகரத்தும் ஏற்பட்டு ஆரம்ப நிலையிலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் அஸ்திவாரத்தையே ஆட்டம் காணும்படி செய்து விட்டிருக்கின்றன.

நூல் விநியோகக் கட்டுப்பாடு அமுலில் இருந்தபோது ராஜ்ய நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் கிடைத்துவந்த (மாதம் சுமார் 20, 26 நெம்பர்) ஒன்றரைக்கட்டு நூலுக்கு, பொந்து ஒன்றுக்கு 12 அணாமுதல் ரூபாய் ஒன்றுவரை கூலி கிடைத்துவந்தது. இதன் மூலம் இரண்டு தறிகளை வைத்து வேலைசெய்துவந்த நெசவாளிக்கு மாதம் சுமார் ரூ. 50 வரை கூலிகிடைத்து வந்தது. இக்குறைந்தவருமானத்தைவைத்துக் கொண்டுதான் நெசவாளி தனது குடும்பத்தை நடத்திவர வேண்டியிருந்தது.

கடந்த சில மாதங்களாக கைத்தறி ஜவுளிமார்க்கெட்டில் ஏற்பட்டுவிட்ட விலை வீழ்ச்சியானது நெசவாளியின் கூலியை வெகுவாகக்குறைத்து விட்டதோடு, குறைந்த கூலிக்கும் தயாரிக்கப்பட்ட ஜவுளிகள் விற்காமல் பெரியஅளவில்நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தேங்கி — தொடர்ந்து அதன் மெம்பர் நெசவாளர்களுக்குவேலைகொடுத்துவர முடியாமல் நிலைமை செய்துவிட்டிருக்கிறது. இக்கடுமையான ஜவுளி தேக்கமும், கூலிவெட்டும் கூட்டுறவு இயக்கத்தைச் சேராத நெசவாளர்களையும், வர்த்தகர்களையும் பாதிக்காமல் விட்டுவிடவில்லையென்பதுதெளிவு.

ஜவுளி தேக்கத்தாலும், படிப்படியாக எல்லாவித கட்டுப்பாடுகளையும்நீக்கவேண்டுமென்ற சர்க்காரின் கொள்கையாலும், மூன்று மாதங்களுக்குமுன் நூல்விநியோகக்கட்டுப்பாடு தற்காலீகமாகநீக்கப்பட்டது. இந்நடவடிக்கையின் மூலம் பாமர நெசவாளியின் தொழிலுக்கான நூல் தேவை முழுவதும் பூர்த்தி செய்யப்படுமெனப் பொதுவான நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. நெசவாளியும் குறைந்த கூலியானாலும் மாதப்பூராவும் வேலைசெய்ய நூல் கிடைக்குமேயென எண்ணி-நப்பாசை கொண்டு இந்த தாற்காலீக நூல் விநியோகரத்து உத்திரவை கைகொட்டி வரவேற்றான்.

ராஜ்யநெசவாளர்கூட்டுறவு
சங்கத்தாரால்ஆதரிக்கப்படுவது
M&C.பிரிண்டிங்
நீங்களும்
உங்களிடமுள்ள
ஜவுளிகளைகவர்ச்சிமிதந்த
சீட்டியாகமில்பிரிண்ட்
செய்துகொள்வதற்கு
M&C.பிரிண்டிங்மில்ஸ்
தபால்பெட்டிநெ.61. ஈரோடு.

ஆனால், அவனது எண்ணத்திற்கு எதிராகவே, நடைமுறையில் மேற்படி உத்திரவு ஏற்படுத்தி விட்டது. ஒருபக்கம் நூலின் நிர்ணயவிலைஉயர வழிசெய்திருப்பதோடு, கூட்டுறவு நெசவாளர்களைப் பொருத்தமட்டில் முன்புகிடைத்து வந்த அளவு நூலும் கிடைக்காது போயிற்று. தற்சமயம் கூட்டுறவு நெசவாளிக்கு மாதமெல்லாம் கிடைப்பது 20, 26 போன்ற குறைந்த நெ. நூல்கள் முக்கால் கட்டுதான். இதற்கு இன்று கிடைக்கும் கூலி பொந்து ஒன்றுக்கு நாலணா வீதம் 4 அல்லது 5 ரூபாய்தான். சாதாரணமாக வெற்றிலைபாக்கு செலவுக்குக்கூட வராத இக்குறைந்த ரூபாய்களை வைத்துக்கொண்டு நெசவாளி உயிர் வாழ முடியும் என்று யாராவது கற்பனை செய்யமுடியுமா?

மாகாண நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நூல் கோட்டா மில்களால் பூர்த்தி செய்யப்படுவதில்லையென்றே எண்ணமுடிகிறது மேற்கண்ட நூல் விநியோக அளவு குறைவைக் கொண்டு.

கைத்தறி நெசவாளியின் கழுத்தைநெறிக்கும் இந்நிலை, கூட்டுறவு இயக்கத்தைச் சேராத பெரும்பாலான நெசவாளர்களைப் பாப்பராக்கிப்பிச்சையெடுக்கவும், தற்கொலை செய்து கொள்ளவும், தூண்டி விட்டிருக்கிறது. கூட்டுறவு நெசவாளர்கள் சம்பந்தப்பட்டவரை, தங்களின் பங்குத்தொகையை வாபஸ்கோரும் படலம் இப்போது தொடங்கியிருக்கிறது.

தங்களின் பங்குத்தொகையை வாபஸ் கொடுக்கும்படி நெசவாளர்கள் கோரி விண்ணப்பங்கள் போடுவது குவிய ஆரம்பித்துப் பல சங்கங்களில் தவிர்க்கமுடியாது பங்குத் தொகைகள் திருப்பியும் தரப்படுகின்றன. இந்த நிலைமை நீடித்தால் நெசவாளர்களின் கூட்டுறவு இயக்கம் தேய்ந்துபோய் நாளடைவில் மாளவும்நேரிடலாம்என்றபயம் இன்று பொதுவாக நிலவுகிறது.

நமதுமாகணத்திலுள்ள குடிசைத்தொழிலில் மிகப்பெரியது நெசவுத்தொழில் அதுவும்பழங்காலத் தொழில். இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தொழிலில் நிரந்தரப்பாதுகாப்பும், குறைந்தபக்ஷ ஊதியமும் அவசியம் வேண்டும். எப்படி, காப்பி, தேயிலை, ரப்பர் போன்ற தொழில்களுக்கு 'போர்டு'கள் ஏற்படுத்தி அரசாங்கம் பாதுகாப்பளித்து வருகிறதோ அதுபோல் இத் தொழிலுக்கும் அம்முறை தேவை. தற்பொழுது, மத்தியகைத்தறிகமிட்டி, மாகாணகமிட்டி, ஜில்லாகமிட்டிகள் போன்றவைகள் இருக்கின்றன. இவைகள் எதுவும் இதுவரை உருப்படியானவகையில் செயல்படவில்லையென்றே நம்பகமாக அறியவருகிறது. ஆனால் தற்சமயம் கைத்தறித் தொழிலுக்கு ஒரு மத்திய கைத்தறி போர்டு சர்க்காரால் அமைக்கப்போவதாகத் தெரிகிறது. இவ்வாறு அமைக்கும் போர்டில் உண்மையான தொழில் அனுபவம், நுணுக்கம் தெரிந்த சரியானபிரதிநிதிகளை நியமித்துதக்கமுறையில் செயல்படவேண்டும்.

தற்போதய நடைமுறையும் அரசாங்கத்தின் கொள்கையும், உத்திரவுகளும் முன்னுக்குபின் முரணாக இருப்பதால் கைத்தறித்தொழில் வளர்ச்சிக்கு அவைகள் உகந்ததாக இல்லை. நமது நாட்டிலிருந்து நெசவாளர்களின் தேவை போகத்தான் மீதி நூலை ஏற்றுமதிக்கு அனுமதிக்கவேண்டும். வெளி

(அடுத்தபக்கம் பார்க்க)

ஐகோடைஸ்
(சாயம் & கெமிகல் வியாபாரம்)
18/305 ரங்கே கவுடர் வீதி,
கோயமுத்தூர்.

ஒரிஜினல் ஜெர்மன் பாக்கிங்கில்
“ஐ” லேபிள் ஒரு பவுண்டு பாக்கிங் இண்டாந்தரின் (N-SUN) சூர்யன் லேபிள் நெப்தால்கெமி, நெப்தால் பேஸ் சாயங்களும்.

ஐகோடைஸ் லேபிள்களில் ரீ பேக் செய்த ஜெர்மன் (பேயர்) டயரக்ட் கலர்களும் எம்மிடம் கிடைக்கும்.

எமது சரக்குகளின் தரம் உங்கள் சாயத்தொழிலின் உயர்வுக்கு மிகவும் ஏற்றதாய் விளங்கும்!
தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.
Prop: எஸ். வி. அப்பாதுரை அய்யர்.

29 MAY

நாட்டில் வாங்கும் அதிகவிலை பஞ்சிலிருந்து உற்பத்தியாகும் நூலை கைத்தறிக்கும், உள்நாட்டிலிருந்து குறைந்த விலையில் கிடைக்கும் பஞ்சிலிருந்து உற்பத்தியாகும் நூலை ஏற்றுமதிக்கும், மில்களிலுள்ள தறிகளுக்கும் எடுத்துக் கொண்டு வருகிற முறை மாறவேண்டும். இதனால் கைத்தறி துணியின் உற்பத்திவிலை அதிகமாவதோடு, மில் துணியுடன் போட்டியிட வேண்டியிருக்கிறது. தவிர, பர்மா, மலேயா, இந்தோனேஷியா போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும், தென் ஆப்பிரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் கைத்தறித்துணிக்குகிராக்கி உண்டு. இந்த நாடுகளுக்கு நூல் ஏற்றுமதியைத் தடைசெய்து கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்ய முயற்சிக்கவேண்டும்.

அடுத்தபடியாக வேஷ்டி சேலை போன்றரகங்களை மில்லில் உற்பத்தி செய்யாமல் அவைகளைக் கைத்தறிக்கே ஒதுக்கவேண்டும். மில்துணிக்கும் கைத்தறித் துணிக்கும் விற்பனையில்போட்டியிருப்பது போல இப்பிரச்னைமீது இப்போது மத்திய சர்க்காருக்கும், மாகாணசர்க்காருக்கும் அபிப்பிராய பேதபேற்பட்டிருக்கிறது. பொதுவாக வேஷ்டி, சேலை போன்ற ரகங்களைக் கைத்தறிக்கு ஒதுக்கவேண்டும் என்ற வாதம் ஏற்கனவே பலமுறை வற்புறுத்தப்பட்டுத் தீர்மானங்கள், மனுக்கள் மூலமாக, சர்க்காருக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு ரகங்களைஒதுக்கித்தருவதின்மூலம் தான்கைத்தறிக்கு மில்துணிப் போட்டியிலிருந்து பாதுகாப்பு அளிக்கமுடியும். நிரந்தர தொழில்வசதி ஏற்படும். அதனால் உற்பத்தி பாதிக்காது. கட்டுப்பாடு ஏற்படாது. இதுபற்றித் தீவிரமாக ஆராய்ந்து, ஆலோசனை செய்தபிறகே நமது பிரதமர் ராஜாஜி அவர்கள் வேஷ்டி சேலை முதலிய ரகங்களைக் கைத்தறிக்கு ஒதுக்கவேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்தார். அதுவும் பலன் ஏற்படலாம் என எதிர்பார்த்தோம்! இச்சமயதில் வேஷ்டி சேலைகளை கைத்தறிக்கு ஒதுக்கினால் மொத்த தேவையை சமாளிக்க முடியாது என்று சொல்லிவிட்டார் கைத்தொழில் வர்த்தக மந்திரி கனம் கிருஷ்ணமாச்சாரி அவர்கள். இவருடைய கூற்றை ஆட்சேபித்து வினோபாஜி அவர்களும், ராஜ்ய நெசவாளர் கூட்டுறவு சங்கத்தலைவர் ஸ்ரீ சோமப்பா அவர்களும் புள்ளி விபரத்துடன் மறுத்து அறிக்கை விடுத்திருக்கிறார்கள். மீண்டும் 8-9-52 தேதியில் கனம் ராஜாஜி அவர்கள் ஏற்கனவே செய்த முடிவை மீண்டும் விளக்கி, மத்திய சர்க்கார் தங்கள் முடிவை மாற்றிக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்.

கைத்தறித் தொழில், ஸ்தாபன ரீதியாக இயங்க மாகாணத்திலுள்ள எல்லா நெசவாளர்களையும் கூட்டுறவு சங்கத்தில் மெம்பர்களாகச் சேர்க்கவேண்டும். பங்குத்தொகை கட்டமுடியாத நெசவாளிக்கு அரசாங்கம் கடன் கொடுத்து உதவவேண்டும். இதனால் தனிப்பட்ட தறிகள் கூட்டுறவு இயக்கத்தில் புகுத்தப்படுவதுடன், போலித்தறிகள் ஒழிந்து உண்மை நெசவாளி என்றும் நூல் பெறவசதிஏற்படும். இரண்டாவதாக கைத்தறியில் உற்பத்தியாகும் துணிகள் ஒன்று போவில்லாமல்தரத்தில் முரண்பட்டிருக்கிறது. ஆகலால் தரநிர்ணயம் (Standardisation) மிகவும் அவசியம். ஏனெனில் பல தடவை ஏற்றுமதி செய்த கைத்தறிதுணிகள் தரம் விட்டதென்றும் அகலம், நீளம் சரியில்லை என்றும் வெளிநாட்டிலிருந்து புகார்கள் கூறப்பட்டுள்ளன. கைத்தறிதுணிக்கு வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் கிராக்கி குறைந்ததற்கு இதுவும் ஒருகாரணமாகும். ஆதலால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறித்துணிக்கு நூல் நெம்பரை அனுசரித்து அகலம், நீளம், தரம் (Texture) இவைகளை நிர்ணயித்து, அவ்வ

கந்தன் சாயச்சாலை

18/86 பட்டு நூல்காரர் சந்து :: சுக்கிரவாரப்பேட்டை.

கோயமுத்தூர்.

உங்கள்தேவைக்கேற்ப நூல், பட்டு, கோராபாவு ஆகியவைகளுக்கு உத்திரவாதத்துடன் கியாரண்டியான சாயம் நல்ல முறையில் குறித்த காலத்தில் போட்டுத் தரப்படுகிறது.

T. P. கந்தசாமி செட்டியார், உரிமையாளர்.

ரம்பிற்கு உட்பட்டுத்தான் துணி தயார் செய்ய வேண்டுமென அறிவிக்கவேண்டும். ஏற்றுமதி செய்வதில் இம்முறை அனுஷ்டித்தால், ராஜ்யத்திலும் அதேமுறையில் கண்டிப்பாக துணி தயாராகலாம். வெளிநாட்டிலும் நமது வர்த்தகக் கமிஷனர்கள் மூலம் கைத்தறித்துணி ஏற்றுமதியைப் பெருக்க அதிகப்படியான முயற்சியும் தேவை. நமது ராஜ்ய சர்க்கார் கைத்தறித்துணிக்கு கிராக்கி தேடும் பொருட்டு ஒருதூது கோஷ்டி அனுப்புவதாக அறிவித்துள்ளனர். அக்கோஷ்டியில் அதிகாரிகளை மட்டும் அனுப்புவதோடல்லாமல், கைத்தறி தொழிலிலும், வியாபாரத்திலும் அனுபவம் பெற்ற உத்தியோகப் பற்றற்றவர்களையும் அனுப்பி வைப்பது மிகவும் அவசியமாகும.

இவ்வழிகள் மூலம் கைத்தறித் தொழிலுக்கு ஒரு நிரந்தரப்பாதுகாப்பு ஏற்படுவதுடன் நெசவுத் தொழிலாளிக்கும் ஒரு நிரந்தரகூலியும் கொடுக்க முடியும். கைத்தறித் தொழிலில் ஈடுபடும் நெசவாளி பிற்காலத்துக்கு வேண்டியது என்று எதையும் சேமித்து வைக்கும் வழக்கம் கிடையாது. அதிகக்கூலி கிடைக்கும் போது அதிகம் செலவழிப்பது; குறைந்த கூலிகிடைக்கும் போது கஷ்டப்படுவது என்ற சாபத்தீடே இத்தொழிலிலுள்ள வர்களுக்கு இருந்து வருகிறது. ஆதலால் கூட்டுறவு சங்கங்களில் கூலியில் ரூபாயுக்கு ஒரு அணுவிதம் பிடித்து சிக்கன நிதி என்று சேமிப்பு செய்கிறார்கள். இத்துடன் ஒரு குறைந்தபக்ஷத் தொகையாவது இன்சூரன்ஸ் செய்து கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும.

ஆதலால் ஏற்கனவே ராஜ்யகைத்தறிக் கமிட்டி தயார்செய்ததர நிர்ணய மசோதாவை சட்டமாக்குவதுடன் கைத்தறித்தொழில் நசித்து போகாமல் செய்யஎல்லா முயற்ச்சிகளையும் அரசாங்கம் உடனடியாக நிறைவேற்றவேண்டும். அன்றுதான் வள்ளுவன் சொன்ன, "செய்யுந் தொழிலே சீர் தூக்கின், நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை" என்றவாக்கு நிறைவேறும். அந்நாளை எதிர் பார்ப்போமாக! வாழ்க நேசவுத் தோழில்!!

விளம்பர போர்டுகள், சினிமா சிலேடுகள்
பிளாக் டிசைன்கள் தயாரிப்பவாகள்.

ஸ்டார் பப்ளிஸிடி
ராஜவீதி, கோவை

மலிவான விலே!
TRADE MARK
N.H.M
நீடித்த உழைப்பு!

காலத்திற் கேற்றது! கருத்துக் கிசைந்தது!

எங்களின்
N. H. M. குடைமார்க்
சுதேசி பனியன்கள்

விவரங்களுக்கு
தி நியூ ஹோய்சியரி மான்யுபாக்சரர்ஸ்
பல்லடம் ரோடு, திருப்பூர்.

அனைவருக்கும் எமது தீபர்வளி நல் வாழ்த்துக்கள்

எங்கும் புகழ்பெற்ற
பத்திக்கரசன்
மாலிக் ஜவ்வாஜி
பத்தி (நெ.952)

எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

முன் பணம் கட்டும்
ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு:
திலக்கிபேர்பியூமரிஒர்க்ஸ்
14/39 நவாப் ஹக்கீம் ரோடு,
கோயமுத்தூர்.

(31-ம் பக்கத்தொடர்ச்சி)

மக்களுக்கு அத்யாவசியமான உடை தயாரிப்பதில் நூற்பதற்கு இயந்திரங்களையும், நெய்வதற்கு கைத்தறிகளையும் உபயோகிப்பதையே அரசாங்கத்தின் கொள்கையாகக் கொள்ள வேண்டும். இக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டு கீழ்கண்ட திட்டங்களை உடனே அமுலுக்குகொண்டு வரவேண்டும். புதிதாக நிறுவப்படும் பஞ்சாலைகளில் இயந்திரத் தறிகளை ஏற்படுத்தக் கூடாது. அவ்விதம் தறிகளை ஸ்தாபிக்க ஏற்கனவே கொடுத்திருக்கிற அனுமதிகளை ரத்துச்செய்யவேண்டும். பழைய மில்களில் ஓடிக் கொண்டிருக்கும் இயந்திரத் தறிகளின் எண்ணிக்கையை எக்காரணத்தைமுன்னிட்டும் அதிகரிக்கஅனுமதிகொடுக்கக் கூடாது. ஏற்கனவே ஓடிக்கொண்டிருக்கிற தறிகளையும் அவைகள் தேய்ந்து போனபின் புதுப்பிக்க அனுமதி மறுக்கவேண்டும்.

இந்த நீண்டகால திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருமுன்பு மில் துணி, கைத்தறிதுணி இவைகளுக்கு இடையே உள்ள போட்டியை உடனடியாக நிவர்த்தி செய்ய உற்பத்தி ரகங்களைப் பிரித்துக் கொடுக்கவேண்டும். வேஷ்டிகளையும், சேலைகளையும் மில்லில் தயார் செய்வதைத் தவிர்த்து இதரபலரகத் துணிகளையும் தயார் செய்யவேண்டும். சேலை, வேஷ்டி நெசவைக் கைத்தறிகளுக்கு விட்டுவிடவேண்டும். அப்படி செய்தால் இந்தநாட்டு மக்களின் துணித்தேவையை கைநெசவினால் பூர்த்திசெய்ய முடியுமா என்பது பற்றி அனாவசியமான சர்ச்சை அடிக்கடி ஏற்படுகிறது. வேண்டிய அளவு நூல் கொடுத்தால் ஒவ்வொரு நெசவாளியும் ஒரு வருஷகாலத்தில் 100 பேருக்கு வேண்டிய துணியைத் தயார் செய்துவிடமுடியும். இந்த நாட்டிலுள்ள 28 லக்ஷம் தறிகளும் நாட்டு மக்களுக்கு வேண்டிய துணித்தேவையைத் தாராளமாகச் சரிக்கட்டமுடியும். இந்தக் கோரிக்கையின் மூலமாகக் கைநெசவாளர்கள் புதிதாக ஒன்றும் கேட்கவில்லை. அவர்களிடமிருந்து நியாயமற்ற முறையில் பறிக்கப்பட்ட உரிமைகளையே அவர்கள் திரும்பக் கேட்கிறார்கள்.

இந்த நாட்டிலுள்ள சுமார் 28 லக்ஷம் தறிகளைச் சார்ந்து சுமார் 150 லக்ஷம் ஜனங்கள் ஜீவிக்கிறார்கள். நூற்பு ஆலைகளில் சுமார் ஒரு கோடிகதிர்களும், நெசவாலைகளில் சுமார் இரண்டரை லக்ஷம் தறிகளும் ஆலை நூற்பு, நெசவு இரண்டையும் சார்ந்து சுமார் 6 லக்ஷம் தொழிலாளர்கள் ஜீவிக்கிறார்கள். ஒரு சில முதலாளிகளுக்காகவும் சிலலக்ஷம் மில்வேலைக்காரர்களுக்காகவும் ஒன்றரைக்கோடி ஜனங்களை வாழ்வை இழக்க விடுவதா என்பதே பிரச்னை.

அரசாங்கத்திற்கு இவ்விஷயங்கள் தெரியாமலிருக்கவில்லை. 1937-ம் வருஷத்திலிருந்தே மில்களுக்கும் கைத்தறிகளுக்குமிடையே உற்பத்தி ரகங்களைப் பிரித்துவிட வேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டு வந்தது. 13-11-49-ல் சென்னை கோகலே மண்டபத்தில் நடந்த சென்னை மாகாண கைத்தறி நெசவுத் தொழில் பாதுகாப்பு மகாநாட்டில் வேஷ்டிகளையும் புடவைகளையும் நெய்யும் வேலையைக் கைத்தறிக்கே விட்டுவிடவேண்டுமென்றும், மில்லில் அவைகள் நெய்யப்படுவதைத் தடுக்க வேண்டுமென்றும் முதல் தீர்மானம் செய்யப்பட்டது. இவ்வாலோசனைகளை எல்லாம் கேட்டுக்கொண்டே அரசாங்கம் இதுவரையும் ஒன்றும் செய்யாமலிருந்து வருகிறது. சென்னை அரசாங்கம் இப்போது இவ்விஷயத்தில் விசேட அக்கரை காட்டி வருகிறது.

குடிசைத் தொழிலைப் பாதுகாப்பதை விரதமாகக்கொண்ட காங்கிரஸ் மகாசபையின் பெயரால் சென்னையிலும் டில்லியிலும் அரசாங்கம் நடந்து வருகிறது. செல்வத்தில் மிகுந்த ஆலை முதலாளிகளிடமிருந்து கைத்தறி நெசவையும், ஏழை கைநெசவாளர்களையும் காப்பாற்றுவதில் அரசாங்கம் வெற்றியடைய நாம் யாவரும் விரும்புகிறோம்.

நெசவாளர்களே! நீங்கள் தயார் செய்யும் துணியை அயல் நாட்டினர் இனி வாங்க மாட்டார்கள். உங்கள் நாட்டு மார்க்கெட்டிலிருந்து இந்திய நெசவாலைகள் உங்களை கொஞ்சம் கொஞ்சமாக விரட்டிக்கொண்டேவருகின்றன. மில்துணி அதிகமாக விற்க விற்க உங்களுக்குக் கிடைக்க வேண்டிய நூலையெல்லாம் நெசவு ஆலைகளில் உபயோகப் படுத்துகிறார்கள். நீங்கள் வாழ வேண்டுமானால் உள்நாட்டில் இழந்த மார்க்கெட்டை கைப்பற்றவேண்டும். அவசியமானால் அதற்காக இந்த நாட்டிலேயே ஒரு பெரிய புரட்சியை ஆரம்பிக்கவேண்டும்.

விழிமின்! எழுமின்!
கருதியகருமம் கைகூடும்வரை
உழைமின்! உழைமின்!

பள்ளிபாளையம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச்சங்கம் லிமிடெட் NO. S. 903

காவேரி R. S. பள்ளிபாளையம் P. O. (Via) ஈரோடு.

கெட்டிச்சாயம் ! ★ **கைதேர்ந்த நெசவு !**

எங்கள் சங்கத்தில் 50" x 12 காடா பீஸ்கள், வேஷ்டி, துண்டு, பெரியகரை பாவஞ்சு வேஷ்டிகள் 40, 60 நெ. நூலில் 6, 8 கெஜங்களில் பலரகக்கலர் சேலைத்தினுசுகள், 30 நெ. நூலிலும், செயற்கைப்பட்டும் 40 நெ. நூலும் கலந்த கண்ணைக்கவரும் நேர்த்தியான ஷர்ட்டிங் வகைகளும் தயார் செய்யப்பட்டு மிகக் குறைவான விலைக்கு விற்றுவருகிறோம்.

கூட்டுறவு சங்கங்களும், வியாபாரிகளும் தங்கள் தேவைகளுக்கு வாங்கிக்கொள்ளலாம்.

அனைவருக்கும் எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள் ! **N. E. மணி**, தலைவர்.

தீபாவளி நன்னாளில் எமது

வாழ்த்துக்கள் !

உத்திரவாதமான கெட்டிச்சாயம் தோய்ப்பவர்கள்

★ ★

மதராஸ் ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் அங்கீகாரம்பெற்றவர்கள்

DASS

ஆறுமுகம் & கம்பெனி

சாயத் தொழிற்சாலை

கந்தசாமிபாளையம், P.O. ஈரோடு தாலுகா

கைத்தொழில் விருத்தியே நாட்டின் முன்னேற்றம் !

குறைந்த விலை ! **K.K.C.** TRADE MARK நீடித்த உழைப்பு !

எங்கள்

K. K. C. பிளைன் & ஐலெட்

பனியன்களை

வாங்கி உபயோகித்து திருப்தியடையுங்கள்.

..........................தயாரிப்பவர்கள்..........................

காதர் நிட்டிங் கம்பெனி,

பல்லடம் ரோடு, திருப்பூர்.

அழகான கலர் அச்சு வேலை ! **உறுதியான பைண்டு வேலை !**

ராயல் பிரஸ்

சொக்கநாதர் கோவில் வீதி, கோட்டை, ஈரோடு.

நாங்கள், நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டிகளுக்குத் தேவையான லெட்ஜர் புஸ்தகங்களும், பாரங்களும், பில் புஸ்தகங்களும் குறித்த காலத்தில் குறைந்த சார்ஜில் செய்து தருகிறோம்

தேவைக்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

சிறுகதை

தீபாவளி

ச. குணவரசு.

○✶○

பாசம்

அன்று ஞாயிற்றுக்கிழமை, காரியாலய விடுமுறைநாள். நான் மாலையில் வீட்டைவிட்டுக்கிளம்பி, அப்போதுதான் வந்த ஒரு நாளிதழ்செய்தித்தாளை வாங்கிக்கொண்டு 'பார்க்'கில் போய் உட்கார்ந்தேன். "நெசவாளர் குறைகளைச் சர்க்கார் கவனிக்காது" என்ற செய்தியை தாழில் பார்த்தவுடன் எனக்குப் படிப்பு ஓடவில்லை. என் உள்ளத்தில் சாதாரணமாக எப்பவும் இருக்கும் பச்சாத்தாபம், ஈரம் ஆகிய கொள்கைகள் வந்து கூடிவிட்டன. மேலே பார்த்தேன், வானத்தில் செந்நிற மையைப் பூசி வைத்தது போல் சூரியன் காட்சியளித்துக் கொண்டிருந்தான். கீழே, குத்துச் செடிகளிலே, கொம்பிலேசுற்றும்கொடிகளிலேயுள்ள சிவப்புமலர்கள் அந்நிறத்திற்குப் போட்டியாக இருப்பவைபோல மலர்ந்திருந்தன.

என் உள்ளத்தில் பழையநினைவுகள் மலர்ந்தன; என் வாழ்வின் முன் வரலாறு அதில் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

ஃ ஃ ஃ

எனக்குத் தாய்தந்தைகள் கிடையாது; அவர்கள் காலமாகிவிட்டனர். அவர்கள் தேடி வைத்தசொத்தில் என் அக்காள் என்னைப்படிக்க வைத்து வந்தாள். நான் அக்காளின் மேற் பார்வையில்தான் வளர்ந்தேன். என் அக்காளின் கணவர்என்னை நல்ல முறையில் படிக்கவைத்துகடைசியில் மீத சொத்தையும் என்கையில் ஒப்படைத்து விட்டார்.

நான் சிறுவனாகயிருந்த நாளையில் மிகவும் குறும்புக்காரனாக இருந்தேன். ஓய்வு நாட்களில் ஊர்முழுதும் சுற்றுவேன். ஒரு நாள் நெசவாளர் தெரு ஒன்றின் வழியே வந்து கொண்டிருக்கும் போது, சில நெசவாளர்கள் தெருவில் பாவுதோய்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் உழைப்பதும், கணவனும் மனைவியும் கஷ்டப் பட்டுப் பாடுபடுவதும் எனக்கும் எனது குறும்பு நண்பர்களுக்கும் வேடிக்கையாகவும் விநோதமாகவும் தெரிந்தது.

"டேய், வாங்கடா நாமும்போய் பாவில் வேலை செய்வோம்" என்று நான் கூறிக்கொண்டுமற்ற நண்பர்களுடன் போய் பாவில் நின்று அவர்களைப் போல் வேலை செய்தோம். உடனே அந்த நெசவாளிக்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை. "பாவு முழுதும் இழைகளை நொறுக்கி விட்டீர்களே" என்று சொல்லி வைது கொண்டே, எங்களை அடிக்க வந்து விட்டார். எல்லாப் பையன்களும் ஓடிவிட்டார்கள். நான்மட்டும் ஓடவில்லை. அவர் என் கன்னத்தில் அறைவதற்குக் கையை ஓங்கிவிட்டார். எனக்குக் கைகால்கள் நடுக்கமெடுத்து விட்டன; மனதில் ஒரே பயமும் அழுகையும் வந்து விட்டது. என் கண்களிலிருந்து கண்ணீர் மளமள வென்று தரையில் சிந்தி விட்டது.

என் நிலைமையைக்கண்டு அந் நெசவாளி இரக்கப்பட்டுவிட்டார். ஓங்கிய அவருடைய கை என் முதுகைத்தட்டிக் கொடுத்தது. "பயப்படாதே தம்பி, பயப்படாதே .... உலகத்தில் உனக்கு, உங்கப்பாவுக்கு, உங்க தாத்தாவுக்கு, அப்புறம் அவருக்குத் தாத்தாவுக்கு இப்படி வரிசையாக உங்க வம்மிசம் பூராவுக்குமே நாங்க தானப்பா வேஷ்டி, சேலை நெய்து கொடுத்தோம்; எங்களுக்குத் தொந்தரவு கொடுக்கலாமா....? நாங்கள் ஏழைகள், அப்புறம் எப்படிப் பிழைப்பது? அதனாலே நீ இனிமேல் யாருக்கும் துன்பம் செய்யாதே; நெசவாளர் என்று சொன்னால் அவங்களுக்கு உன்னாலே முடிஞ்ச உதவியைச்செய். அப்படினாத்தான் நீ மனிதனாக—அறிவுள்ளவனாக வாழமுடியும்" என்று கனிவும்அன்பும் நிறைந்து கூறினார்.

என் மனதில் இவ்வளவுநாளும் இருந்த இருள் அகன்றுவிட்டது.. அன்றிலிருந்து நான் ஒருமுடிவு செய்து கொண்டேன். கல்லூரிப்படிப்பு முடிந்ததும் ஏதாவது ஒரு ஏழைப் பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று.

அவன் கண்கள்:

நான் ஒருநாள் கடையில் இரண்டு மாம்பழங்கள் வாங்கி அதைத் தொலியைச்சீவித்தரும்படி கேட்டேன். கடைக்காரன் சீவினான். அவன் சீவியதில் கீழே விழும் தொலி மீது திடீ

குதூகல
தீபாவளி வாழ்த்து!

●

உங்களுக்கு விருப்பமுள்ள
பத்திரிகை-புத்தகம்
எதுவானாலும்
எங்களுக்கு எழுதுங்கள்
உங்கள் இருப்பிடம்
நாடிவரும்

●

புல்லட்டின் பீரோ,
வேலாண்டிபாளையம்,
கோயமுத்தூர்.

ரென மூன்று நான்கு சிறுவர்கள் பாய்ந்தனர். அதில் ஒரு சிறுவனின் கண்கள்மட்டும் மிக ஆவலாக பழத்தையும் தொலியையும் மாறிமாறி நோக்கின. அவன் இத்தொழிலுக்கு — பிச்சையெடுப்பதற்கு புதிது போல் தெரிகிறது அவனுடைய தோற்றம். அவன் அணிந்திருந்த அழுக்குத் துண்டும், சட்டையும் தமிழகத்தின் அனாதை நிலையை அறிவித்தன; புழுதி படிந்து கிடக்கும் அவன் தலை இங்குள்ள தரித்திரத்தை எடுத்துக் காட்டியது. ஆவல்மீறிய அவன் கண்கள், நம் நாட்டிலுள்ள மக்களின் அடக்க முடியாத பெரும் பசியைக்காட்டின. பிச்சையெடுக்கிற அவன் தொழில் தமிழ்நாட்டின் வேலையில்லாப்பஞ்சத்தைக்காட்டியது.

நான்கடைக்காரனிடம்காசைக் கொடுத்து விட்டு நகர்ந்தேன். என் கையிலுள்ள பழத்தையே அவன் உற்று நோக்கிக் கொண்டிருந்தான். நான் அவனைக் கூப்பிட்டு, ஆவலோடு இப்பழத்தைப் புசிப்பான் எனக்கருதி ஒன்றை அவனிடம் தந்தேன். அவன் பழத்தை வாங்கியவுடன் ஒரு கும்பிடு போட்டுவிட்டுத் திரும்பியே பார்க்கவில்லை. ஓரே ஓட்டமாக ஓடி ஜனக் கூட்டத்துள் எங்கேயோ மறைந்து விட்டான். தொலிக்காகச் சண்டையிட்டவன், — பழத்தை ஆவலோடு பார்த்தவன் — கடும்பசியோடிருந்தவன் ஆகிய நிலைமைகளிருந்தும் ஏன் அவன் பழத்தை உண்ணாமல்ஓடவேண்டும்....?என்று என் உள்ளம் எண்ணிக் கொண்டிருந்தது. அவனுடைய தோற்றமும், செய்கையும் எனக்கு மிகவும் விசித்திரமாகப்பட்டது.

நான் வழக்கமாகச் செல்லும் பூங்காவுக்கு என்றும்போல் மறுநாளும் சென்றேன்.

அங்கும் அவன் வந்திருந்தான். அழைத்து, "நேற்று நீ என் மாம்பழத்தை உண்ணாமல் ஓடிவிட்டாய்" என்றேன். அவன் திக்கித்திண்றிப் பேச வாயெடுத்தான்; முடியவில்லை, கண்ணீரும் அழுகையும் பீறிக் கொண்டு வந்தது.

நான் ஆறுதல்கூறி அவனை அமைதிப்படுத்தினேன். சிறிது நேரமௌனத்திற்குப்பின், 'ஐயா, நாங்க நெசவாளிங்க.... வேலை கிடைக்கல்லே. கஞ்சியுங் கிடைக்கல்லே ...ஊருஊராய் பிச்சையெடுத்துக் கொண்டு அலைகிறமுங்க. எனக்கு ஒரு அக்காவும் அம்மாவும் இருக்காங்க .... அவங்க ரெண்டுபேரும் நேத்துப்பட்டினியாத்தாங்க இருந்தாங்க.... அதனாலே அவங்களுக்கும் குடுத்துச் சாப்பிட்டேனுங்க...." மறுபடியும் விம்மினான்; அழுதான்; அழுக்குச் சட்டையைக் கொண்டு துடைத்தான்.

நான் முதலில், ஒருவேளை நடிப்பாக இருக்குமோ? நம்மிடம் காசு வாங்குவதற்காக இப்படிச் செய்து பீடி, சிகரெட் சாப்பிடுவானோ என்று நினைத்தேன். ஆயினும் அவன் பிஞ்சு இமைக் கதவுகளுக்குள்ளே உருளும் கருமணிகளிலே எனக்குச் சந்தேகம் பிறக்கமுடியவில்லை. பசியினால் வாடியிருக்கும் அவன் முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குப் பச்சாத்தாபம்தான் ஏற்பட்டது. எட்டணாக்காசை எடுத்து அவன் கையில் கொடுத்தேன்; இன்றும் நேற்றுப்போல் கும்பிடு போட்டு விட்டு ஓடி விட்டான்.

நான் என் கண்களின் கடைக் கோடியில் அலம்பி நின்ற நீர்த் துளிகளைத் துடைத்துக் கொண்டேன்.

இப்பொழுது தினமும் வருவான்; நானும் தினமும் எட்டணாக்காசு அவனுக்குக் கொடுத்து வந்தேன். எனக்கும் சலிப்பு ஏற்பட்டதில்லை. என்றாவது ஒரு நாள் அவன் வருவதற்குக் கொஞ்சம் நேரமானால் எனக்கே வருத்தம்பொறுக்கமுடிவதில்லை. அந்த அளவுக்கு அவன் மீது பாசம் எனக்கு ஏற்பட்டுவிட்டது.

நேற்று அவன் அணிந்திருந்த சட்டை மிகவும் அழுக்குடைய

அனைவருக்கும் எங்களின்

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

லட்சுமி சாயச்சாலை

17/430ரங்கேகவுடர்வீதி — கோயமுத்தூர்

உங்கள் திருப்திக்கு ஏற்றவாறு சலவையும் உத்திரவாதமுள்ள எல்லா பேன்சி கலர்களிலும் நூல் & பட்டு ஆகியவைகளுக்கு சாயம் துவைத்துத்தரப்படும்.

தாகவும், கிழிந்ததாகவும் இருந்தது. அதனால், இன்றுநான் அவனுக்கென்று இரண்டு சட்டைகளும் வாங்கி வந்திருந்தேன். என்றும் வரவேண்டிய நேரம் வந்துவிட்டது; அவனைக்காணோம். எனக்கு இதயத்தின் அடித்தளத்திலே வருத்தம் ஏற்பட்டது. நான் ஐந்துமணிக்கு வந்தேன். இப்பொழுது கைக்கடிகாரத்தைப் பார்த்தேன், ஏழுமணி ஆகிறது. எட்டு, ஒன்பதும் ஆகிவிட்டது. என் இதயம் முழுதுமே வேதனையேற்பட்டிருப்பதாகத் தோன்றியது. நல்லவேளை; கொஞ்சம் குளிர்ந்து விட்டது. அதோ, அவனும் வந்துவிட்டான். ஆனால் என்றும்போல் உற்சாகமில்லையே .... அவன் நடையிலே சோர்வும், கருத்திலே பாரமான கவலையும், கண்களிலே கலக்கமுமிருக்கின்றனவே!

நான் கேட்பதற்குமுந்தியே, வந்தவுடனே அவன் "ஐயா, என் அக்காவுக்கு....இன்னிக்குக் காச்சலுங்க.... ஒண்ணுமே சாப்பிட மாட்டேங்குது.... படுத்தே கிடக்குதுங்க.... ஒவ்வொரு சமயம் ஒண்ணுமே புரியாம உழறுதுங்க.... என் அம்மா அவகிட்டயே உக்காந்து அழுதுகிட்டிருக்காங்க....என் அக்கா எங்க ரெண்டு பேரைபாத்து ஊடஊடே அதுவும் அழுவுதுங்க .... எனக்கும் அழுவையா வருதுங்க :எங்க ஊட்டிலே இன்னிக்கு ஒண்ணும் காச்சலீங்க.... நீங்க காத்துகிட்டிருப்பீங்கன்னு நெனச்சுத்தான் வந்தேங்க .... துட்டும் இன்னிக்கு வேணுமுங்க நான் வாரேனுங்க" எனதிக்கித்திணறி, விம்மி விம்மி அழுதுகொண்டே இதைக் கூறினான். உண்மையில் அவனுடைய, கிழிந்த அழுக்குச் சட்டையுங்கூட மழையில்நனைந்ததுபோல் ஈரமாக இருந்தது. அவனுடைய பிஞ்சுக் கண்களிலே செந்நிறரேகைகள் படர்ந்திருந்தன.

"வீடு எவ்வளவு தொலைஇருக்கும் தம்பி" என்றேன் நான்.

"பக்கத்துலேதாங்க இருக்குது" .... என்றான் அவன்.

"சரி, நட" என்றேன். முன்பின் தெரியாத ஒருவனிடம் ஏனோ எனக்கு இவ்வளவு அபிமானமும் அன்பும்ஏற்படுகிறதென்று எனக்கேதெரியாது—தெரியமுடியவில்லை. அவன் நடந்துகொண்டிருந்தான்; வழிகாட்டியைப்பின் தொடரும் ஜனக்கூட்டம் போல, கன்றைத்தூக்கிச் செல்பவனுக்குப் பின்னால் போகும் தாய்ப்பசுவைப்போல, ஏதோ ஒரு சக்தியால் தள்ளப்பட்டுநான் அவனுக்குப்பின்னால் நடந்துகொண்டிருந்தேன்.

ஒரு விஷயத்தில்மட்டும் பொய் சொல்லிவிட்டான். 'வீடு பக்கத்திலிருக்கிறது' என்று கூறினான். இப்பொழுது நடந்து கொண்டே இருக்கிறேன் போய்க் கொண்டே இருக்கிறது. ஊர்க்கடைசியில் உள்ள ஒட்டைமடத்திற்கே கொண்டுவந்து விட்டான். இதில் தான் பிச்சைக்காரர்கள் தங்குவார்கள்.

'இதுதாங்க....'என்றுகூறினான்

உள்ளே சென்றேன். ஒருசிறு மண்ணெண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஆம்! அவன் சொன்னபடி அவன் அக்காள் கடுமையான மலேரியாக் காய்ச்சலில் படுத்துக்கிடந்தாள், தாய் பக்கத்திலிருந்தாள், கண்ணீர் வடித்து கொண்டு.

நான் எனது கூரியகண்களால் ஒருமுறை, படுத்திருக்கும்பெண்ணைப்பார்த்தேன். திடுக்கிட்டுவிட்டேன்! என் இருதயமே பிளந்து இரத்தம் கொப்பளித்துகிளம்புவதைப் போன்றும், என் உடலிலுள்ள எலும்புகள் கனத்த பாறையின் தாக்குதலால் நொறுங்குவதைப் போன்றும், நான் இருக்கும் ஒட்டைமடம் உடைந்து சுக்கு நூறுவதுபோன்றும் எனக்குத் தோன்றியது! அப்பெண் பருவமான மங்கை. பதியுடன் கொஞ்சிக் குலவி வாழவேண்டிய வயது. ஆனால், அவள் எலும்பும் தோலுமாக, இளைத்த உருவமாக மழை இல்லாதபயிர்

ஸ்தாபிதம்: 1938. ரயில்வேஸ்டேஷன்: திருச்செங்கோடு, O. A.

திருச்செங்கோடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு

விற்பனைச் சங்கம் லிமிடெட், NO. S. 523 திருச்செங்கோடு. (சேலம் ஜில்லா)

கைத்தறி ஆடைகளை அணிந்து குடிசைத்தொழிலை வளருங்கள்.

கெட்டிச்சாயம்! அழுத்தமான நெசவு!! நீண்ட உழைப்பு!!!

எங்களிடம் 20நெ. முதல் 30நெ. வரை நூலில் எங்கள் 2000 தறிகளில் தயார் செய்யப்பட்ட மேற்கண்ட இரகங்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் மிக மலிவான விலைக்குக்கிடைக்கும்.

வெள்ளை, காடா, ஷர்ட்டிங், கோட்டிங் பீஸ்கள், வெள்ளை, கலர் சேலைகள், வேஷ்டி துண்டுத்தான்கள், பெட்ஷீட், பிளாங்கட்டுகள், ரெடிமேட் ஆடைகள்.

விபரங்களுக்கு எழுதவும்: K. A. காசி விஸ்வநாத முதலியார், தலைவர்.

போலக் காய்ந்து சருகாகிக்கிடந்தாள். வறுமையின் இரும்புக் குறடுகளால் நசுக்கப் பட்டிருக்கும் அவளுடலில் கூர்ந்து நோக்கினால், ஓவியமான அழகும், உயர்ந்த எண்ணங்கள் ஊறிக் கொண்டிருக்கும் சிந்தையும்காவியப் பேச்சும். அதிலே கன்னல் சுவையும் இருப்பதுபோல் என் கருத்திற்குப்பட்டது. இவ்வளவும் அப்பெண்ணைப் பார்த்தவுடன் என் இதயத்திற்பட்டது.

'ஐயா, நீங்கயாருங்க'.. என அத்தாய் என்னைக் கேட்டாள். நான் பையனை கையமர்த்தி விட்டு, 'நான் வழிப்போக்கனம்மா'எனக் கூறிவிட்டு உடனே அங்கிருந்து கிளம்பிவிட்டேன்.

சிறிது நேரத்திற்குப்பின் 'டாக்டருடன்' காரில்போய் இறங்கினேன். டாக்டர் மருந்து கொடுத்தார் 'இனிப் பயமில்லை சார்' என்று தைரியங் கூறிவிட்டுச் சென்றார்.

இப்பொழுதுதாய்,மகள்,மகன் ஆகியமூவரும் எனது வீட்டில் தான் வசிக்கிறார்கள். அப்பெண் நல்ல குணவதி; நல்லரூபராணி. அவள்கண்களிலேயுள்ள நீலம், மலர்க் கூட்டத்திலே, மாலைநேரத்து அடிவானத்திலே கூடக் காணமுடியாது. அந்தி வானத்தைப்போல்சிவந்திருக்கும், அவள் கனி இதழின் சுவையை வேறு எங்குமே காண முடியாது.

இப்பொழுதுஎன்னை அலங்கரிக்கும் மாலையாக, எனக்குப் பணிபுரியும் துணைவியாக, இல்லத்திற்கழகு செய்யும் மனைவியாக ஆகிவிட்டாள்.

ஃ ஃ ஃ

'பைத்தியக்காரன், பைத்தியக்காரன்' என்ற சிறுவர்களின் கூக்குரலையும், கைதட்டல் ஓசையையும், அத்தனையையும் சகித்துக் கொண்டுவரும் இடிபோன்ற வெறிச்சிரிப்பினொலியையுங் கேட்டு நான் சுயஉணர்வுபெற்றேன்.

எதிரே சிறுவர்களின் கூட்டம் கும்பலாகஇருந்தது. கூட்டத்தை விலக்கிக்கொண்டு எட்டிப்பார்த்தேன். அந்தோ! என்னபரிதாபம். சுமார் நாற்பது நாற்பத்தைந்து வயது இருக்கும். தாடியும் தலைமயிரும் தன்தன்போக்கிலே கிடந்தன. கிழிந்தகந்தல் ஆடை அணிந்திருந்தான். சிறுவர்களின் வெறித்தனமான-விவரமில்லாத தாக்குதலுக்குட்பட்டதால் ஏற்பட்ட வடுக்களும், புதுக்காயங்களும் அவனது முகத்தையும் உடலையும் மிகவும் கோரப்படுத்திக்காட்டின. ஆனால், அவன் உள்ளம் பரிசுத்தமானது, சுயவுணர்வு உள்ளது, கிறுக்கல்ல என்பதை அவன் கண்களும், நிதானமானபார்வையும் எடுத்துக்காட்டின. என் உள்ளத்தை அப்பார்வை தொட்டு விட்டது. நான் கூட்டத்தை அமர்த்தி அவனைக் கையைப்பிடித்தேன்; அவன் ஏற இறங்கப்பார்த்தான்; ஆனால் எதுவுமே பேசவில்லை. அவனுக்கு ஒரே திகைப்பும் ஆச்சரியமுமாயிருந்தது. என்பின்னால் வந்துவிட்டான். நான் வீட்டிற்கு அழைத்துச் சென்று குளிக்கச் செய்து நல்ல ஆடை கொடுத்து திருப்தியான உணவளித்தேன். என்மனைவியை அவன் தன் கண்களால் பாசம் நிறைந்த பார்வையோடு ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான். அவன் முகத்திலே திகைப்பு, ஆச்சரியம், களிப்பு, கலக்கம், அளவுக்குமீறிய பாசம் அத்தனையும் அந்த ஒருபார்வையிலே நர்த்தனமாடின. ஆயினும் சமாளித்துக்கொண்டான்.

ஓர் தனியான இடத்திற் கொண்டுபோய், அன்பாக, ஆதரவாக அவன் வரலாற்றைக்கேட்டேன். 'ஐயா, தயவு செய்துமன்னித்து விடுங்கள், நான் சுருக்கமாகச் சொல்கிறேன், பின் விரிவாகக் கேளாதீர்கள்' என்ற பீடிகையுடன் ஆரம்பித்தான்.

“நான் ஓர் நெசவாளி. நல்ல நிலையில்தான் இருந்தேன்;ஆனால், இன்று 'கிறுக்கன்' என்று ஊரறிய நான் திரிகிறேன். மக்கள் கொடுத்த பட்டம் எனக்குக் கிறுக்கன் என்பது. எனக்கு ஒரு அருமை மகளும், ஒரு அருமை மகனுமிருந்தார்கள். நெசவாளர்களுக்கு ஏற்பட்ட வேலையில்லா கஷ்டமும், வேலை கிடைத்தாலும் கூலி கிடைக்காத பஞ்சமும் என் வாழ்வைக் கொலைசெய்து போட்டது. என் வீட்டில் இருந்ததை எல்லாம் விற்றேன். வறுமை என் கழுத்தைப்பிடித்து நெறிக்கத்தலைப்பட்டு விட்டது. என் வாழ்கை நடத்தும் முறையில் எந்த வேலையும் எனக்குக் கிடைக்கவில்லை. அந்தநேரத்தில் வந்தது தீபாவளி. என் மகன் என் அருமைக் கண்மணி” அப்பா, நம்ம அடுத்தவீட்டிலேயெல்லாம் தீபாவளிவந்திருச்சாம்பா....நம்ம வீட்டிலே ஏம்பா இன்னும் வரலே...? அப்பா, தீபாவளி ஏம்பா இன்னும் வரலே....? என்று தீபாவளி இரண்டு மூன்று தினங்க

ராஜ்யநெசவாளர்கூட்டுறவு
சங்கத்தாரால்ஆதரிக்கப்படுவது
M&C.பிரிண்டிங்
நீங்களும்
உங்களிடமுள்ள
ஜவுளிகளைகவர்ச்சிமிகுந்த
சீட்டியாகமில்பிரிண்ட்
செய்துகொள்வதற்கு
M&C.பிரிண்டிங்மில்ஸ்
தபால்பெட்டிநெ.61. ஈரோடு.

விருக்கும்போதே கேட்டான். அவன் எதைக் கண்டான்; பிஞ்சு உள்ளம்! ஆனால், அந்த வார்த்தைதானே என்இதயத்தை அறுக்கும் ரம்பம்.

மேலும், தடை சொல்ல முடியாத மற்றொரு இடிவந்து விழுந்தது. எத்தனை முறைகளோ என் வீட்டுப்படிகளை ஏறிஇறங்கி விட்டு ஏமாற்றத்தோடும், எறியும் சினத்தோடும் சென்ற வீட்டு வரிக்காரர் (பில்கலெக்டர்) 'ஜப்தி' கொண்டுவந்து விட்டார். ஜப்தி செய்து என் வீட்டுசாமான்களை எடுத்துக்கொண்டுபோனால் ஊரிலே தலைகாட்ட முடியாதே .... மானம் பறிபோய்விடுமே....என்ன செய்வது? என் நெஞ்சுருக என் மனைவியைப் பார்த்தேன்; அவள் தாலியைக் காட்டினாள்! வீட்டு வரிக்காரரைக் கையைக்காலைப் பிடித்துக் கெஞ்சி, கொஞ்சம் தாமதிக்க வைத்துவிட்டு, மார்வாடிகடையிலே கொண்டுபோய் அடகுவைத்துக் கொண்டு வந்து வரிப்பணத்தைச் செலுத்தினேன். ஐயா, நீங்களே சொல்லுங்கள்; நான்எப்படி என்மனைவி முகத்தில் விழிப்பது? மனைவியின் தாலியைக்கூடக் காப்பாற்ற முடியாத சண்டாளனா நான்? பாழும் தறிகாரனாகப் பிறந்ததனால் பெண்டாட்டியின் தாலியைக்கூடவா இழக்க வேண்டும்...? என் கால்கள் வீட்டை விட்டுக்கிளம்பி விட்டன. நான் எங்கேபோகிறேன் என்று எனக்கே தெரியாது. விடிந்தால் தீபாவளி. நான் கிளம்பும் போது இரவு ஏழுமணி இருக்கும். அப்போது என்காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது 'அப்பா, நம்ப வீட்டிலே தீபாவளி ஏப்பா இன்னும் வரலே' என்ற சொற்கள் தான். நான் நடந்து கொண்டே இருந்தேன். திடீரென்று ஏதோ தடுக்கிகீழேவிழுந்தேன். எழுந்து பார்த்தேன்; என் உள்ளம் ஆனந்தத்திலும் ஆச்சரியத்திலும் மூழ்கியது! மண்ணில் பாதி புதைபட்ட ஒரு தங்கச் சங்கிலி என் காலில் மாட்டிக் கிடந்தது.

ஓடோடிவந்து மனைவியிடம் காட்டினேன். அவளும் மகிழ்ந்தாள். 'மகனே, நம்ம வீட்டிலேயும் தீபாவளி வந்து விட்டதடா,' என மகிழ்வோடு கூறி வாரி அணைத்து முத்தமிட்டுவிட்டு கடைத் தெருவுக்குப் போனேன்.

ஒரு கடையில்காண்பித்தேன். எனக்குப்புரியாத பாஷையில் ஏதேதோ 'டெலிபோனில்' பேசினான் கடைக்காரன். 'ஐயா, பணம்' என்று கையை நீட்டினேன். இரண்டு கைகளையும் இரும்புக் குறடுகள் வந்து கவ்வின! என்ன அநியாயம்! நான் திருட்டுச் சங்கிலியை விற்க வந்தேனாம்.... என்றோ, எப்பொழுதோ, ஒருசில மாதங்களுக்குமுன் யாரோ ஓர் பணக்காரர் வீட்டில் களவுபோன சங்கிலியாம் அது. எனக்கெப்படித் தெரியும்? நானா திருடன்.......? இதுவரைக்கும் கைதியாகச் சிறைச்சாலையிலிருந்துவிட்டு சமீபத்தில்தான் வெளியே வந்தேன்; வந்ததிலிருந்து என்மனைவி, மக்களைத் தேடுகிறேன்.... அதற்குக் கிறுக்கன் என்று கூறுகிறது மக்கள் சமுதாயம்! ஐயா, 'நம்மவீட்டிலேமட்டும் ஏப்பா தீபாவளி வரலே?' என்று கேட்கிறான் என் மகன். 'தாலியைக்கூடத்திருப்ப முடியாத கடன்காரனே' என்றுகேட்கிறான் வட்டிக்கடைக்காரன்.... 'கள்வன்' என்று கூறி சிறைக்கூடத்திலே அடைக்கிறது. அரசாங்கம்........ 'கிறுக்கன்' என்று சொல்கிறது மக்கள் சமுதாயம்... 'குடும்பத்தைக்காப்பாற்ற முடியாத கோழையே' என்று கேட்கிறது என் உள்ளம். நீங்கள் என்ன என்றையா கேட்கப்போகிறீர்கள்?' என்றான்.

"மாமனாரே" என்று கேட்கிறேன் நான்.... என்றேன்.

எனது மைத்துனன், "இனி தீபாவளி நம்ம வீட்டைவிட்டு எப்பவுமே போகாதப்பா...?" என்றான்.

என் மனைவியின் முகத்திலே தோன்றிய அன்பு குடும்பத்திலுள்ளவர்கள் அனைவருக்குமே குதூகலத்தைக் கொடுத்தது.

பொதுமக்களுக்கு வேண்டுகோள்!

திருப்பூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிமிடெட் NO. K. 901.

காதர் பேட்டை, ★ திருப்பூர்.

எங்கள்சங்கத்தில் சிறந்தநெசவுடன்கூடிய கெட்டிச்சாய புடைவைகள் 40நெ. முதல் 100நெ. வரை 6,7,8,9 கெஜங்களில் புதுமாதிரி பேட்டுகளுடன் தயார் செய்து பொது ஜனங்களின் சௌகரியத்தை அநுசரித்துக் குறைவான விலையில் விற்பனை செய்துவருகிறோம்.

இத்தருணத்தை நமது நகரப் பொதுமக்கள் பயன்படுத்திக் கொண்டு எங்கள் சங்கத்திற்கு விஜயம் செய்து கைத்தறி நெசவுத் தொழிலை ஆதரிக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

குறிப்பு:- 20-ம் நெ. வேஷ்டி 4 முழம் ரூ. 1-6-0க்கும் 40 நெ. 8 கெஜம் புடவை ரூ. 7—8—0க்கும் விற்பனை செய்யப்படும்.

S சுப்ரமணியம், பிரசிடெண்டு.

சிறு கதை

அபராதி

ரா. வீ. சுந்தரம், வெள்ளலூர்.

“கமலு! நான் சங்கனூர்வரைக்கும் போய் விட்டு வருகிறேன். அங்கேயாவது நூல்கிடைக்குமா எனப்பார்த்து வாங்கி வருகிறேன். நீ குழந்தையை பத்திரமாக பார்த்துக் கொண்டு இரு’ என்று சொல்லிவிட்டுப்போன, கமலுவின் கணவன் கந்தசாமி, இரவு மணி பத்தாகியும் வரவில்லை. கமலுவுக்கு திடுக்கு திடுக்கென்று இருந்தது. என்ன வாயிற்றோ? போனகாரியம் முடிந்ததோ என்னவோ? சாயந்திரம் வந்துவிடுவேன் என்று சொல்லிப் போனவர் இன்னும் வரவில்லையே! என்று வழிமேல் விழிவைத்துக் கொண்டு கணவன் வரவுக்காக எதிர்பார்த்துகொண்டே, வாசல் கதவின் முன் உட்கார்ந்து கொண்டு இருந்தாள். ஆனால் அவன் மட்டும் வந்த பாடில்லை.

ஏதோ சத்தம் கேட்டதும்; எழுந்து வாசலுக்கு வந்தாள், பார்த்தாள். அதுஒரு நாய் ஓடிய சத்தம்! ஏமாற்றத்துடன் திரும்பினாள். வந்து மறுபடியும் உட்கார்ந்து கொண்டாள். அவர் வந்து கொண்டு இருப்பார் இந்நேரம்! நான் அப்படியே போய் ஊரின் கடைசியில்பார்த்தால்?.... சங்கனூரிலிருந்து வரும் வழி இவ்வூருக்கு வந்து சேர ஒரு ஆறுகுருக்கே இருக்கிறது. ஆற்றில் ஏதாவது வெள்ளம் வந்திருக்குமோ? ஒரு துளி மழைகூடப்பெய்யாத இந்தக்காலத்திலா வெள்ளம்? இருக்காது! வெள்ளம் வந்திருக்காது! பின் ஏன் இன்னும் வரவில்லை? ஏதாவது ஜோலிமுடிய நேரம் ஆகி யிருக்கும்! எதற்கும் ஊருக்கு வடபுறமாகப் போய்பார்க்கலாமே. வேண்டாம்.... அர்த்த ராத்திரியிலே குழந்தையைத்தனியே வீட்டில் விட்டு விட்டு, ஒரு பெண் ஒண்டியாகப் போவது நல்லதல்ல!

கணவனைத் தேடி — ஏதாவது ஆபத்துநேர்ந்திருக்குமோ என்று இவ்வூரின் வடக்கே போய்பார்த்துவிட்டு வருவது குற்றமா? இல்லை; ஒருக்காலும் குற்றமில்லை. குழந்தை....? தூங்குகிறது இப்பொழுது தானே பால்கொடுத்து தாலாட்டி தூங்க வைத்தேன்! அதற்குள்ளாகவா எழுந்து விடப் போகிறது? எழுந்திருக்காது.” என்று அவள்மனத்தினூடே போராடி இந்த முடிவுக்கு வந்தாள். கதவைச் சாத்திவிட்டு மெதுவாக வெளி நடந்தாள்.

ஃ ஃ ஃ

எதிரில் யாராவதுவருகிறார்களா? என்று பார்த்துக்கொண்டு கமலு நடந்தாள். ஊரில் எல்லோருமேதூங்கிவிட்டதால் அமைதியாக இருந்தது. ஊர்க் காவல் காப்போனும்காணவில்லை. ஆகவே, அவள் சந்தடியின்றி மெதுவாக மௌனமாக நடந்தாள். இதோ ஊரை தாண்டியாகிவிட்டது. இன்னும்ஒருவீடுதான் இருந்தது. அவ்வீட்டைப்பார்த்ததும் கமலு நின்றாள். அவ்வீட்டில்மாத்திரம் விளக்குஎரிந்துகொண்டு இருந்தது. ஏதோ சத்தமும் கேட்டுக் கொண்டே இருந்தது.

வீட்டுக்குசமீபமாக சென்றதும், அங்கிருந்துவெளிவரும் சப்தத்தை ஒட்டுக்கேட்க, ஒண்டி நின்றாள். “டேய் துரை! இன்னும் ஒண்ணுபோடடா,” என்றது ஒரு குரல்! “போதும்டா! அதிகமாக போட்டாஆபத்து!” என்றதுமற்றொருகுரல். கேட்டதும், “ஐயோ பாவம். யாரையோ அடிக்கிறார்களே! என்றுநினைத்தாள் அவள். அது என்கணவரையாக இருக்கும்போலிருக்கிறதேஎன்று நினைக்

மதராஸ் ராஜ்ய கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கத்தின் அங்கீகாரம் பெற்றவர்கள்

ரத்னா கலர் ஒர்க்ஸ்

20/17, சாமையர்புதுவீதி — கோயமுத்தூர்.

அனைவருக்கும் எனது
தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

S. பஞ்சரத்னம், உரிமையாளர்.

கும் போது “குஞ்சு! நம்ம சர்க்கார் மதுவிலக்கு கொண்டு வந்திருக்கிறார்களே... அது நம்மை... என்பதற்குள்,” உம்....மது விலக்கு, மண்ணாங்கட்டின்னு சொல்லு; அவுக நாம் இங்கேயே தினம் காய்ச்சிக் காய்ச்சி வச்சிருக்கிறதையும், குடிக்கிறதையும், இந்திரன் இருந்தானல்ல? அவன் பாண்டுக்கம்பளம் அசஞ்சா பூலோகத்திலே யாரோ புண்ணியவான்க இருக்காங்கன்னு தெரிஞ்சுக்குவானும்! அது மாதிரி நர்மை தெரிஞ்சுக்கணும் நாம் செய்யற புண்ணியத்தை! “என்றது ஒரு குரல். கமலுக்கு சோபம் வந்துவிட்டது. பாவிகள்! அரசாங்கத்துக்கு மீறி அக்ரமம் செய்யும் அயோக்கியர்கள்! இவர்களை சும்மாவிட்டுவைப்பது நம்ம ஊருக்கே — என் நாட்டுக்கே ஆபத்து; புண்ணியஞ் செய்யராணுகல்ல புண்ணியம்! இருக்கட்டும் சொல்றேன் என்று பல்லைக் கடித்துக் கொண்டு நகர்ந்தாள்.

அவளுக்குப் “பகீரென்றது, ஏன்? யாரோ ஒருவன், அவ்வழியேவந்துகொண்டு இருந்தான். மெதுவாக அவ்வீட்டுக்கு அப்பால் போய் ஒன்றும் தெரியாதவள் போல் மெதுவாக நடப்பது போல் பாவனைசெய்தாள். அவன் யாரது? இந்த அகாத நேரத்தில்....? என்று கடுமையானகுரலில்! கேட்டான். கண்ணைநன்றாக விழித்துப் பார்த்தாள். ஊர் காவலுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் போலீஸ்காரன்! கமலுவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை! “ஐயா! என்கணவர் காலமே சங்கனூர் போனவரு இன்னும் வரவில்லை. அவர் வருகிறாரா என்று பார்க்கவே வந்தேன். இங்கே ஒரு வீட்டில் கள்ளச், சாராயம் காய்ச்சி குடிச்சுக்கிட்டு இருக்காங்க! நான் பார்த்தேன். நேரே போலீஸ் ஸ்டேஷனுக்கு போகலாமுன்னு நினைச்சேன். நீங்களே நல்ல வேளையா வந்துட்டீங்க. வாங்க ஐயா அந்த அயோக்கியர்களை பிடிங்க ஐயா. கம்பிஎண்ண அனுப்புங்க.” என்று மூச்சுவிடாமல் கூறிமுடித்தாள். அவன் அவசரமாக “ஓஹோ! சாராயம் காய்ச்சுகிறார்களோ? எனக்கு இத்தனை நாள் தெரியலையே, சரி நீ இங்கேயே இரு நான்போய் இன்னும் அதிகமா போலீஸோடு வந்து விடுகிறேன்.” என்றுகூறிவிட்டு ஓடினான். கமலு இவைகளைப் பார்த்துவிட்டு போகலாம் என்று ஓரிடத்தில் நின்றிருந்தாள்.

ஃ ஃ ஃ

“உர்” ரென்று ஒரு போலீஸ் லாரி அவள் நிற்கும் இடத்தில் வந்து நின்றது. உடனே போலீஸார்கள் ஒவ்வொருவரும் தடியுடனும், பேட்ரியுடனும் இறங்கினார்கள். போலீஸ் கோஷ்டியை அழைத்துவந்த அந்தபோலீஸ்காரன் இறங்கிவந்து, “எங்கம்மா அந்தவீடு,” என்று கேட்டான். அவள் காட்டினாள். நாற்பது போலீஸ்காரர்களும் ஒருமிக்கசூழ்ந்து வளைத்துக் கொண்டனர். மொத்தம் பத்துப் பேர்களை இரண்டு இரண்டு பேர்களாக கையைக் கட்டிஅழைத்து வந்தனர். சாராயங்கள் முதலியவைகளைக் காய்ச்சிய பானைகளையும் லாரிகளில் ஏற்றிக் கொண்டனர்.

ஊர் காவல் காக்கும் போலீஸ்காரன், கமலுவிடம்வந்து, “அம்மா! உங்கபேரென்ன?” என்று கேட்டான். “ஐயா! என்பெயர் கமலு, என்கணவர் பெயர் கந்தசாமி; நெசவுஜீவனம்” என்றாள். “சரி நாளை நீங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு வாருங்கள்!’ என்றுசொல்லிவிட்டு நடந்தான்.

திடீரென்று பேடிரி போல் “அடிசண்டாளி கண்போல் காப்பாற்றிய என்னை பிடித்துக் கொடுத்து விட்டாயே போலீஸில்? துரோகி! நீயும் என்மனைவியா? கட்டிய கணவனையும் காட்டிக்கொடுத்த நீயொரு பெண்ணா? துரோகி! துரோகி!” என்று கத்தும் குரல் கேட்கவே, கமலு பயந்தே விட்டாள். எங்கிருந்து சப்தம் வருகிறது என்று கவனித்தாள். லாரியிலே முன்னால் கந்தசாமி நின்றிருப்பது நன்றாக அவளுக்குத் தெரிந்தது. நூலுக்குபோனவர் இங்கெப்படி வந்தார்? “அடி துரோகி நீயே சுகமாக வாழ்ந்து கொண்டிரு! கணவனைக்காட்டிக் கொடுத்ததற்கு நாளை சன்மானம் கிடைக்கும். ஆனந்தமாக வாழ்! துரோகி!” என்ற பேரொலி அவள் மண்டையிலே சம்மட்டி கொண்டு அடித்தாற்போல் இருந்தது. ‘அத்தான்....அத்தான்’ என்று ஓடினாள். அதற்குள் அந்த போலீஸ்லாரி நகர்ந்து விட்டது. அவளின் உள்ளக்குமுறல் டிரைவருக்கு கேட்கவில்லை “அத்தான்....அத்தான் என்று ஓடினாள் லாரியின் கூடவே. லாரி அவளைவிட்டுப் பிரிந்தது. ‘துரோகி’ என்ற கந்தசாமியின் கடைசி கடுமையான கர்ஜனை அவளை கீழேவிழச் செய்தது. கமலுஅப்படியேவிழுந்தாள்!.

கோயமுத்தூர் தேவாங்க நெசவுக்காரர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட் No. 649.

12/193, ஒப்பணக்கார வீதி, :: கோயமுத்தூர்.

உயர்ந்த நவீன ரக கைத்தறி சேலைகள்!

குறைந்த விலை! நீடித்த உழைப்பு!

எங்களிடம் கூட்டுறவு முறையில் தயாரிக்கப்பட்ட
80 நெ. 100 நெ. கெட்டிச்சாயச் சேலைகள்
நவீன பார்டர்களில் எப்பொழுதும்
சரசமான விலையில் கிடைக்கும்

அனைவருக்கும் எங்களுடைய
தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

நம் நாட்டு கைத்தொழிலை ஊக்குவித்து கூட்டுறவாளர்களுக்குப் பூரண ஆதரவு கொடுங்கள்.

V. ஈஸ்வரன் செட்டியார், B. A. B. L., தலைவர்.

அவினாசி நெசவாளர்கூட்டுறவு உற்பத்தி, விற்பனை சங்கம் லிமிடெட் No. K. 1229., அவினாசி P. O.

திருப்பூர் R. S. (கோவை ஜில்லா)

மக்களின் மன எழுச்சியிலேற்படும் மாறுதல்கள் பல! அவை உடை அலங்காரங்களில் பிரதி பலிக்கின்றன!

அதற்கேற்ப, நாங்கள் எங்கள் சொஸைட்டியில் 20, 26, 40, 60, 80 நெம்பர் நூல்களில் கெட்டிச்சாயத்தில், அழகான பார்டர்களுள்ள சேலை ரகங்கள், கலர் ஷர்ட்டிங்குகள் வேஷ்டி, துண்டு, காடாபீஸ், சீட்டி ரகங்கள் உயர்வான நெசவில் தயாரித்து வருகிறோம்.

கூட்டுறவு ஸ்டோர்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு,

பொதுமக்களின் சவுகரியத்தை முன்னிட்டு அவினாசி நகரத்தின் மெயின் ரோடில் எங்கள் சங்க ஜவுளி சில்லறை விற்பனை டிப்போ திறக்கப்பட்டிருக்கிறது.

எங்களின் தீபாவளி நல் வாழ்த்தை ஏற்றுக்கொள்ளுங்கள்.

தேவைக்கு எழுதுங்கள் K. நஞ்சப்ப முதலியார், தலைவர்.

ஒண்டிப்புதூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட் NO. K. 894.

ஒண்டிப்புதூர் P. O. சிங்காநல்லூர் R. S. கோயமுத்தூர்.

குறைந்த விலை! கலையழகு வாய்ந்த உயர்ந்த ரக சேலைகள்! நீடித்த உழைப்பு!

100 நெ. நூலில் கூட்டுறவு முறையில் தயாரிக்கப்பட்ட எங்கள்சேலைகள், கண்கவரும் வகையில் இருப்பதாலும் அவற்றின் உழைப்பு நீடித்திருப்பதாலும் அவை எல்லோராலும் மதிக்கப்படுகின்றன. நீங்களும் ஒருமுறை பரீக்ஷியுங்கள்.

தீபாவளி நன்னாளில் அனைவருக்கும் அன்புகலந்த நல்வாழ்த்துக்கள்!

R. சேஷாத்திரி *B. A*, ஸ்பெஷல் ஆபீஸர்.

தீபாவளித் திருநாளில் அனைவருக்கும்
எமது நல் வாழ்த்துக்கள்!

கைத்தறி ஆடையே காலத்திற்கேற்றது.

அனைவருக்கும் எமது
தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

மணம், குணம், நிறைந்த

**எங்கும் ஏஜண்டுகளும்
ஸ்டாக்கிஸ்டுகளும் தேவை.**

ஸ்ரீ முருகன் சாயச்சாலை

சிறுமுகைபுதூர், சிறுமுகை P. O., (Via) மேட்டுப்பாளையம்.

எமது சாயச்சாலையில், அனுபவம் நிறைந்த வேலையாட்களைக் கொண்டு கைத்தறி நெசவாளர்கள், வியாபாரிகள் ஆகியோரின் திருப்திக்கேற்ப கெட்டிச்சாயம் தீர்த்து குறித்த நாளில் சப்ளை செய்து வருகிறோம்.

அனைவருக்கும் எமது உளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்!

Props. T. M. மாரிசெட்டியார் & கோ.

மங்கையரை மகிழ்விப்பது கைத்தறி யினுடை - அதன்
மகிமையை மங்காமல் செய்கிறது "மல்லி"யின் சாயம்!

கியாரண்டி

கலர்களுக்கு

மல்லி சாயச்சாலை

16/539 ரங்கேகவுடர்வீதி, :: கோயமுத்தூர்.

ஆதியூர் திருவாமுதலியூர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி, விற்பனை சங்கம் லிமிடெட், NO. K. 1135.

குன்னத்தூர் P. O. (Via) திருப்பூர் R. S.

எடை நெசவு ரகங்கள்! • அழுத்தமான நெசவு!

நாங்கள் 20 நெ. முதல், 36 நெ. வரை நூலில் அழுத்தமுள்ள எடை நெசவு திடமான காரிக்கம் பீசுகள், வேஷ்டி, துண்டுத்தான் ரகங்கள் மிக உயர்ந்த முறையில் எங்கள் சொஸைட்டியில் தயார் செய்து வருகிறோம்.

•

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், வர்த்தகர்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு.

•

விபரங்களுக்கு எழுதவும். S. ராமசாமி ஐயர், தலைவர்.

MAY 1956

அனைவருக்கும் எனது தீபாவளி நல் வாழ்த்துக்கள்

FRANCOLOR

R. அம்போஜிராவ் பான்ஸ்லே

சாயம் & கெமிகல்ஸ் வியாபாரம்

சுக்ரவாரப்பேட்டை ○ கோயமுத்தூர்

NEC PLURIBUS IMPAR K

சப் ஸ்டாக்கிஸ்ட்:- பிரஞ்சு டைஸ் & கெமிகல்ஸ் (இந்தியா) லிமிடெட்

எம்மிடம் துணி, நூல், பட்டு, நார், ரப்பர், காகிதம், தோல், மரம், கயர் ஆகியவைகளுக்கு சாயம் ஏற்றவும், அச்சுப்போடவும் தேவையான சாயங்களும், கெமிகல்சுகளும் கிடைக்கும்.

சாயம் & கெமிகல்ஸ் உற்பத்தியில், உலகிலே தலைசிறந்ததும், முதல்தரமானதுமான குல்மன் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்ட எல்லாவகை சாயம் & கெமிகல்ஸ் நம்மிடம் கிடைக்கும்.

உங்கள் தேவைக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்குமாறு கோருகிறேன்.

ஆனைமலைஸ் பஸ் டிரான்ஸ்போர்ட் லிமிடெட், பொள்ளாச்சி

எஸ்டேட் சப்ளையர்கள், போக்கு வரத்து ஏஜண்டுகள், தபால் கண்டிராக்டர்கள்

&

தென் இந்திய ரெயில்வே அவுட் ஏஜன்ஸி கண்டிராக்டர்கள்

வால்பாரை அவுட் ஏஜன்ஸி

(பொள்ளாச்சி ரெயில்வே ஸ்டேஷன் வழியாக 40 மைல்)

பல்லடம் அவுட் ஏஜன்ஸி

(திருப்பூர் ரெயில்வே ஸ்டேஷன் வழியாக 11 மைல்)

இந்த அவுட் ஏஜன்ஸிகளுக்கும், இந்தியாவிலுள்ள மற்ற எல்லா ரெயில்வே ஸ்டேஷன்களுக்கும், அவுட் ஏஜன்ஸிகளுக்கும், பிரயாணிகள், கூட்ஸ்கள் லக்கேஜ்கள், பார்சல்கள், போக்குவரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

கீழ்க்கண்ட பாதைகளில் பஸ் சர்வீஸ்கள் நடத்துகிறோம்.

கோயமுத்தூர் டவுன் சர்வீஸ்

கோயமுத்தூர்—முடீஸ் எக்ஸ்பிரஸ்
பொள்ளாச்சி—கோயமுத்தூர்; திருப்பூர்
தாராபுரம்; பழநி; டாப்சிலிப்; வால்பாரை
& இதர எஸ்டேட்டுகள்.

உடுமலைப்பேட்டை—கோயமுத்தூர்; ஆனைமலை.
பழநி—அலங்கியம்.
சாலக்குடி—பொரிங்கல்குத்து; மளுக்கப்பாரை

P. நாச்சிமுத்துக் கவுண்டர்,
ஜெனரல் மானேஜர்.

Edited & Published by: M. K. Swamy at 19/22, Muthanankulam Street, Coimbatore.
Printed: at Gugan Press, 5/314, Avanashi Road, Coimbatore.